
# சுவடுகள்

மெய்யான சொல்லுக்காய்
நஞ்சுண்ட சோக்கிரட்டீஸ் (கி.மு 399)



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அனைத்துத் தமிழர்களுக்குமான முக்கிய அறிவிப்பு

அண்மையில் நோர்வேயில் அரசியற் தஞ்சம் கோரிய சில தமிழர்களைத் திருப்பி அனுப்பும் முயற்சிகள் நிகழ்கின்றன. பொதுவாகக் கொழும்புடன் தொடர்புடையவர்கள் இவ்வாறு பாதிக்கப் பட்டுள்ளனர். கொழும்பில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழலாம் என்ற நிலைப்பாட்டிலேயே இந்த முடிவுகளை நோர்வே அரசு எடுத்திருப்பதாக நம்பப் படுகிறது. அண்மையில் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் (UNHCR) இவ்வாறு கருத்துப்படும் அறிக்கை ஒன்றை வெளியிட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

தற்போது நோர்வேயில் உள்ள சில தமிழர் அமைப்புகள் இவ்வாறு தமிழர்களைத் திருப்பி அனுப்பாமல் இருக்குமாறு அரசைக் கோரி வருகின்றன. எனினும் தனிப்பட்ட நபர்கள் இந்த முடிவால் பாதிக்கப்படும் அபாயம் நிலவுகிறது. இவர்கள் உடனடியாகச் சுவடுகளுடனோ, பின்வரும் முகவரிகளுடனோ தொடர்பு கொண்டு தமது நிலையை விளக்கினால், இப்பிரச்சனை தொடர்பான உதவிகளைப் பெறலாம்.

Tamilsk Norsk Forening,
(தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடம்)
Herslebs Gt 43,
0578 Oslo
(தொலைபேசி: 02/212735)

Tamil Sangam i Norge,
(தமிழ்ச் சங்கம்)
Post boks 88,
Romsaas,
0907 Oslo.

சுவடுகள் வாசகர்கள் பலரது சந்தா ஏற்கனவே முடிந்துவிட்டது. புதிய சந்தாதாரர்கள் பலரும் சந்தா செலுத்தவில்லை. சுவடுகளின் ஐரோப்பிய வாசகர்கள் சிலரும் இவ்வாறு சந்தா செலுத்தாமல் இருப்பது மிகுந்த நெருக்கடியை உண்டுபண்ணுகிறது. சுவடுகள் பற்றிக் கொண்டுள்ள ஆர்வத்தால் புதிய சந்தாக்களைச் சேகரித்து உதவுகின்றனர். இவர்களை நன்றியோடு நினைவுகூர்கிறோம்.

சுவடுகளுக்குச் சந்தா செலுத்துவோர் அனைவரும் வங்கியூடாக மாத்திரம் சந்தாவைச் செலுத்தவும். எமது வங்கிக் கணக்கிலக்கம் 1607 5213 062. வங்கியின் பெயர்: Sparebanken NOR. சுவடுகள் பன்னிரு இதழ்களுக்கான சந்தா 300 (நோ) குறோணர்கள்.

சுவடுகளில் வெளியிடத் தரமான படைப்புகளை வரவேற்கிறோம். படைப்பாளிகள் தமது கருத்துகளை நயமான முறையில் மற்றவர் மனம் புண்படாதவாறு வெளியிடச் சுவடுகள் களம் அமைக்கும். படைப்புகள் சமூகத்துக்குப் பயன் விளைக்கும் எத்துறை சார்ந்தும் இருக்கலாம். நடைமுறைச் சிக்கல் காரணமாகப் பிரசுரமாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை. படைப்பாளிகள் தம்முடன் படைப்பின் ஒரு பிரதியைத் தம்முடன் வைத்திருக்க வேண்டுகிறோம்.

சுவடுகளில் வெளியாகும் படைப்புகள் பற்றிய உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நாகிகமாக எழுதப்படும் கடிதங்கள் மட்டுமே பிரசுரமாகும். சுவடுகளுடனான சகல தொடர்புகட்கும்:

SUVADUGAL,
Herslebs Gt 43,
0578 - Oslo
NORWAY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நவம்பர் 15 - 41 வருட சோக வரலாறு

*மலையக மக்கள் என்றொரு இனம் இலங்கையில் இருப்பதாகவோ, அவர்களுக்கெனத் தனித்துவமான சமூக, பொருளாதார, கலாசாரப் பின்னணிகள் இருப்பதோ எம்மில் பலருக்குத் தெரியாது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இன்றியமையாத பங்களிப்பு வழங்கி வரும் இந்த மக்கள், இலங்கைவாழ் ஏனைய இனத்தவரைப் பொறுத்தவரை வேண்டப்படாத விருந்தாளிகளே.*

நவம்பர் 15, நினைவிருக்கிறதா உங்களுக்கு? 41 வருடங்களைச் சற்றுப் பின்னோக்கிப் பாருங்கள். கொடுமையான அந்த நாட்கள் நினைவுக்கு வரும். வனாந்தரமாகக் கிடந்த காடுமேடுகளை எல்லாம் பொன் விளையும் பூமியாக்கி, அல்லும் பகலும் மாடாய் உழைத்து, தாம் குடிவந்த நாட்டுக்கு விசுவாசமாய் இருந்து நாட்டின் பொருளாதார விருத்திக்கு அத்திவாரமாய் இருந்துவந்த மலையக மக்களது குடியுரிமை பலாத்காரமாகப் பறிக்கப்பட்ட தினமே நவம்பர்15 ஆகும். 1948இல் குடியுரிமைச் சட்டம் இயற்றி அம்மக்களின் குடியுரிமையைப் பறித்த பௌத்த சிங்களப் பேரினவாதிகள், தொடர்ந்து கொண்டுவந்த பிரஜாவுரிமைச் சட்டத்தின்மூலம் அம்மக்களை நாடற்றவர்களாக்கி நடுத்தெருவுக்குக் கொண்டுவந்தனர். மனிதநேயமற்ற இந்தக் கொடூர செயலுக்கு ஒத்துழைப்பு வழங்கி மலையக மக்களது கண்ணீர் வாழ்வுக்குத் தனது பங்களிப்பையும் நல்கியது அன்றைய துரோகத் தனமான தமிழ்த் தலைமைகள்.

இன்று இலங்கைவாழ் மக்கள் அனுபவிக்கும் சகலவகையான பொருளாதார (அபி)விருத்திக்கும் மூலக்கல்லாய் இருந்து வருபவர்கள் மலையக மக்களே. தென்னிந்தியாவில் இருந்து 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அழைத்து வரப்பட்ட இம்மக்களின் எண்ணிக்கை 1880 - 1930 காலப் பகுதியில் கணிசமானளவு அதிகரித்துள்ளது. 1911இல் இலங்கையின் மொத்த சனத்தொகையில் (41லட்சம்) 13%இனர் மலையக மக்கள். 1921ஆம் ஆண்டுக் கணக்கின்படி இந்நிலை 15% ஆகும். இவர்களது அதிகரித்த வருகையே இலங்கையின் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தியில் பல சடுதியான மாற்றங்களை உண்டாக்கியது. சாதாரண மண்வீதிகள் பாரிய நெடுஞ்சாலைகள் ஆயின. புகையிரதப் பாதை தோற்றம் பெற்று என்றுமில்லாத அளவில் போக்குவரத்து முன்னேற்றம் கண்டது. வீதிகளில் காஸ்லைட் பிரகாசித்தது. கைத்தொழிற் துறை பெரும் முன்னேற்றம் கண்டது. விவசாயத் துறை பன்மடங்கு விருத்தியுற்றது. துறைமுகங்கள் விருத்தி செய்யப் பட்டன. பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் எனப் பல்வேறு வகைகளில் நாடு அபிவிருத்தி அடைகையில் இவற்றுக்குக் காரணமான அந்தத் தோட்டத் தொழிலாளர்களோ எதுவித உரிமையும் அற்று 'கூலிகள்' எனக் கேவலமாக இம்சிக்கப் பட்டனர்.

இலங்கைவாழ் ஏனைய மக்களுடன் ஒப்பிடுகையில் மலையக மக்களின் சமூக பொருளாதார குறிகாட்டிகள் மிகத் தாழ்வாகவே உள்ளன. இவர்களது வாழ்க்கைத் தரம் ஆசியாவிலேயே குறைந்ததாக இருக்கிறது. இலங்கையின் தலாவருமானத்துடன் ஒப்பிடுகையில் இவர்களது சராசரி வருமானம் பாதிக்கும் குறைவாகவே உள்ளது. அடிப்படைச் சுகாதார வசதிகள், போஷாக்குணவு, நீர் விநியோகம், மலசலகூட வசதிகள், குடியிருப்பு, கல்வி போன்ற மனிதவாழ்விற்குத் தேவையான அடிப்படை விஷயங்கள்கூட மறுக்கப்பட்டு இம்மக்கள் தொடர்ந்தும் மூன்றாம்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர். பௌதீக வாழ்க்கைத் தரக் குறிகாட்டியும் (PQLI) மலையகத்தில் ஒன்றாகவும் ஏனைய பிரதேசங்களில்

**கொழுந்தன்**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறுவிதமாகவும் உள்ளது. இம்மக்களது ஆயுட் காலம் சராசரி இலங்கைப் பிரஜையின் ஆயுட் காலத்தைவிட மிகக் குறைவாகவும், சிசு மரணம், பிரசவத்தில் தாய்மார் இறப்பு மிக அதிகரித்தும் உள்ளன.

குடியிருப்புகளைப் பொறுத்தவரை மலையக மக்கள் தீண்டத் தகாதவர்களாய்க் கணிப்பிடப்பட்டோ என்னவோ மாட்டுக் கொட்டில்களைவிட மோசமான நிலையிலுள்ள 15X12 சதுர அடி அறைகளே (காம்பரா) இவர்களது மாளிகை. 'கம்உதாவ' (கிராமோதயம்) மலையகத்தை எட்டியும் பார்ப்பதில்லை. பத்துலட்சம் வீடுகளைக் கட்டும் அரசாங்கம் பத்து வீடுகளைக்கூட மலையக மக்களுக்குக் கட்டிக் கொடுக்கவில்லை. பல பொது ஸ்தாபனங்கள்கூட இது தொடர்பாக அக்கறை எடுக்கவில்லை. கட்டாயக் கல்விச்சட்டம் 14 வயதுவரை அமுலில் உள்ளபோதும் தோட்டப் பாடசாலைகள் பலவற்றில் 5ஆம் வகுப்பிற்கு மேல் இருப்பதில்லை.

தென்னாசியாவின் மிகப்பெரிய தொழிற் சங்கமான இ.தொ.கா. மலையக மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறினாலும் உண்மையில் மலையக மக்களைக் காட்டிக் கொடுத்துக் கேவலமான பிழைப்பையே நடத்தி வருகிறது. மலையக மக்கள் இந்த அநீதிகளுக்கு எதிராக ஒன்றுதிரளும் போதெல்லாம் வடக்கு கிழக்கு நிலைமைகளைக் உதாரணம் காட்டிப் போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் இ.தொ.கா. இம்மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கையான நிரந்தர மாதச் சம்பளத்தைக்கூடப் பெற்றுத்தர முடியாத நிலையிலேயே உள்ளது.

இலங்கையின் புகழ்பெற்ற பௌத்த இனவாதியான அநகாரிக தர்மபால மலையக மக்கள் எதிர்ப்புப் பிரசாரத்தில் முன்னணி வகித்தவர். 1902இல் 'தென்னிந்தியக் கீழ்சாதியினர் எமது தீவில் குடியேற அனுமதிக்கலாகாது' என எழுதியுள்ளார். 1928இல் மேற்கொள்ளப்பட்ட டொனமூர் அரசியல் யாப்புத் திருத்தமும், சர்வசன வாக்குரிமை பற்றிய பேச்சுகளும் சிங்கள இனவாதிகள் மலையக மக்களுக்கு எதிராகச் செயற்படத் தூண்டலாய் அமைந்தன. 'அடிமைகளுக்கு நிகரான கூலிகள்' என மட்டமாக அழைக்கப்பட்ட அம்மக்களுக்கு அரசியற் சுதந்திரம் கிட்டுமானால் தேர்தல் முடிவுகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்பதுடன் பல இடங்களில் சிங்கள மக்கள் சிறுபான்மையினராக்கப் படுவர் என்பதே அந்த இனவாதிகளது அச்சத்திற்கு முக்கிய காரணம். இதுபற்றிய விவாதம் 1928இல் சட்ட நிர்வாகசபையில் இடம்பெற்ற போது இப்பிரேரணையை எதிர்த்து முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனநாயகா பின்வருமாறு கூறினார்: சிங்களவர் துரதிர்ஷ்டம் பிடித்த சமூகத்தினர், அவர்கள் தவறாக விளங்கப் பட்டுள்ளனர். மற்றவர்களது நன்மைக்காக தம்மை ஒறுக்கச் சம்மதிக்கும் சிங்களவர் போன்ற வேறு ஒரு சமூகம் இருக்குமென நான் கருதவில்லை. இந்தியர்களுக்கு பெரிய நாடுள்ளது. எமக்கு இச்சிறுதுண்டு நிலமேயுள்ளது. - ஹன்சாட் (8/11/1928).

சட்டநிர்வாக சபையின் ஒரேயொரு சிங்களப் பிரதிநிதி தவிர ஏனைய அனைவரும் தோட்டத் தொழிலாளருக்கு வாக்குரிமை வழங்குவதை எதிர்த்தே பேசினர். அந்நாளில் பிரபல அரசியல் தலைவர்களான பிரான்சிஸ் மொலமுரே, கன்னங்கரா, வி.ரி.எஸ்.விக்கிரமநாயகா, சேர்பொன்ராமநாதன், டொக்டர் ஏ.டி.சில்வா போன்றோரும் சர்வசன வாக்குரிமையை எதிர்த்த சிலராவர். அன்று பிரபலமாயிருந்த தொழிற்கட்சி அங்கத்தவர் சி.எச்.ஸற்.பெர்ணாண்டோ இந்திய ஆதிக்கத்தின் கட்டுக்கதையை எள்ளி நகையாடினார். இதுபற்றிய எதிர்ப்புவாதக் கருத்துகளை நிராகரித்து, தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்குவதை முழுமையாக ஆதரித்தார். இதே கருத்தைக் கூறி டி.பி.ஜாயாவும் சர்வசன வாக்குரிமையை ஆதரித்தார். நடேச ஐயரும், மகாதேவாவும் தோட்டத் தொழிலாளருக்கு வாக்குரிமை வழங்குவதற்கு ஆதரவாகச் செயலாற்றினர்.


பல திருத்தங்களுடன் அமுலான டொனமூர் அரசியல் யாப்பின்படி மலையக மக்களின் இரு பிரதிநிதிகள் தெரிவாகினர். இதைத் தொடர்ந்து 1931இல் நடேசய்யர் முதலாவது தொழிற்சங்கத்தை ஆரம்பித்தார். நிதி நெருக்கடியால் அது சிறப்பாக இயங்கவில்லை. எனினும் இக்காலகட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சி தோட்டத் தொழிலாளரை ஒன்றிணைத்து வெற்றிகரமாகத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டது. 1939இல் நேருவின் ஆதரவுடன் தொடங்கிய இலங்கை இந்திய காங்கிசும் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியது. 1940இல் நாடே அதிரும்படி மலையகத்தில் வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்தன. பணிந்துபோகும் கூலிகள் எனத் திமிராகப் பேசியவர்கள் கதிகலங்கும் அளவிற்கு பெருந்தோட்டத் துறை ஸ்தம்பிதம் அடைந்தது. இறுதியில் தோட்ட நிர்வாகம் அடிபணிந்தது. 1947இல் இலங்கை இந்திய கொங்கிரஸ் சார்பாக ஏழுபேர் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகினர். இவர்கள் போட்டியிடாத இடங்களில் இடதுசாரிகளுக்கு மக்கள் ஆதரவளித்து 14 தொகுதிகளில் அவர்களை வெற்றி அடையச் செய்தனர். தேர்தலின் பின்னர் இரு கட்சிகளும் இணைந்தே பணியாற்றின. இதனால் அச்சமுற்ற சிங்களப் பேரினவாதிகள் குடியுரிமை பிரஜாவுரிமைச் சட்டங்கள் மூலம் அம்மக்களை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்தனர். அன்றைய தமிழ்த் தலைமைகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆட்சேபித்திருப்பின் இன்று வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலை தவிர்க்கப்பட்டு, மிகுந்த பலம் பொருந்திய சிறுபான்மை இனமாக தமிழ் பேசும் சமூகம் இருந்திருக்கும். தமது கடும் உழைப்பால் இந்த நாட்டைக் கட்டியெழுப்பிய இம் மக்களுக்கு நாம் செய்த வரலாற்றுத் துரோகம் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறக்க முடியாதது. சிங்கள பௌத்த இனவாதத்தால் பாதிப்புற்றிருக்கும் நாம், அதே பேரினவாதிகளுடன் சேர்ந்து மலையக மக்களுக்குச் செய்த துரோகத்திற்கு எப்படிப் பிராயச் சித்தம் செய்யப் போகிறோம்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேனை பிடித்ததனால்



**சித்தார்த்தன்**

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 15ஆம் திகதியை, உலகம் முழுவதும் சிறையில் வாடும் எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்களுக்கான குறியீட்டுத் தினமாக 'பென்' (PEN - Poets, Essayists, Novelists) அமைப்பு நினைவுகூர்கிறது.

உலகம் முழுவதும் மக்களின் மேம்பாட்டிற்காக, அவர்களின் சுதந்திரத்திற்காக இலக்கியத்தினூடாக போராடும் எழுத்தாளர்களைக் கொடிய சிறைகளில் அடைத்துவைத்து அவர்களது கருத்துகளைச் சாகடிக்க அதிகாரத்தில் உள்ளோர் முயன்றுவருகின்றனர். இன்று இவ்வாறு பல்லாயிரக் கணக்கான எழுத்தாளர்கள் பல்வேறு நாடுகளில் சிறைகளில் இருந்து வாடுகின்றனர்.

இவர்களது விடுதலைக்காகப் போராடப் பிரத்தியேக ஏற்பாடாக இத்தினம் கொண்டாடப் படுகிறது.

எழுத்தாளர்கள் எந்தவிதமான சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடாதபோதிலும், அவர்களைச் சிறையில் அடைக்கும் கொடுமை இன்றும் தொடர்கிறது.

இன்று PEN அமைப்பு 107நாடுகளில் கிளைகளைக் கொண்டது. இது எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், வெளியீட்டாளர்கள், பத்திரிகையாளர்கள், உயிராபத்தைத் தவிர்க்க நாட்டைவிட்டு வெளியேறிய எழுத்தாளர்கள் உரிமைகட்காகக் குரல் கொடுக்கிறது. கருத்துச் சுதந்திரத்திற்காகவும், எழுத்தாளர்கள் மீது வன்முறை, மிரட்டல், அவர்களது கருத்துகளுக்காக சிறையிலடைத்தல் போன்றவற்றிற்கு எதிராகப் போராடி வருகிறது.

1991ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர்வரை 95 எழுத்தாளர்கள் பல நாடுகளில் சிறையில் இடப்பட்டனர். 63பேர் கொல்லப்பட்டனர். 316பேர்வரை மிரட்டல், கொலைக்கு அஞ்சி வேறு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ளனர். இன்றைய நிலையில் பத்திரிகையாளர்களே அதிகம் கொல்லப்படுகின்றனர்.

யூகோஸ்லாவியா, பெரு, கொலம்பியா, மெக்சிக்கோ போன்ற நாடுகளில் இது அதிகமாக நிகழ்கிறது. சீனாவில்தான் அதிக எழுத்தாளர்கள் (80பேர்) சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர். பத்திரிகை, கருத்துச் சுதந்திரம் வேண்டியதற்காக 18 திபெத்திய மதகுருமார் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர்.

இலங்கையிலும் இவ்வாறான சம்பவங்கள்







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிகழ்ந்தன. பிரபல செய்தியாளரான றிச்சட் டி சொய்சா அரச படைகளினால் கொல்லப்பட்டது உலகமே அறிந்தது.

இந்தியாவில் முன்னாள் Saturday Review ஆசிரியரும், தற்போது தமிழ்நாட்டில் Tamil Nation பத்திரிகையை நடத்துபவருமான சிவநாயகம் போலிக் குற்றச் சாட்டுகளின் பெயரில் சிறையில் அடைக்கப் பட்டார்..




1987இல் இந்திய ராணுவம் தனது தாக்குதலை ஆரம்பிக்க முன்பே யாழ்ப்பாணத்தில் இரு பத்திரிகைக் காரியாலயங்களைக் குண்டுவைத்துத் தகர்த்தது.

தமிழருக்கெதிராக தொடர்ச்சியாக பலவித ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்துவரும் சிங்களப் பேரினவாத அரசும் பல தமிழ் எழுத்தாளர்களைச் சிறையில் அடைத்தது. இலங்கையில் இந்தியப் படைகள் இருந்தபோது பல பத்திரிகையாளர்களைச் சிறையில் அடைத்துக் கொடுமைப் படுத்தியது.

1983ல் Saturday Reviewவும், ஈழநாடும் தடைவிதிக்கப்பட்டன. ஆசிரியர்கள்மீது பொய்வழக்குச் சோடிக்கப்பட்டது. அவர்கள் பின் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றனர். 1981இல் ஈழநாடு அலுவலகமே கொழுத்தப்பட்டது.

தமிழ் மக்களுக்காகப் போராடவந்த அமைப்புகள் இயக்கத்திற்கு உள்ளும் புறமும் கருத்து ஒடுக்குமுறையால் பலரைப் பலியெடுத்தன. பல எழுத்தாளர்கள் மிரட்டப்பட்டனர். காவலூர் ஜெகநாதன் என்ற பிரபல எழுத்தாளர் கொல்லப்பட்டார். சிலர் மிரட்டப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற்றப் பட்டனர். முரசொலி பத்திரிகை ஆசிரியர் திருச்செல்வத்தின் மீது தாக்குதல் நடத்தச் சென்ற ஈபிஆர்எல்எ.்ப் உறுப்பினர்களால் அவரது மகன் அகிலன் குரூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். சில நூல்களை எழுதிய சந்ததியார் புளொட்டினால் கொல்லப்பட்டார். புளொட்டின் அராஜகங்களை எதிர்த்துத் தீவிரமாகப் போராடியவர்களில் ஒருவரான கேசவன் (புதியதோர் உலகம் நாவலை எழுதியவர்) விடுதலைப் புலிகளால் கைதானார். இவருக்கு என்ன நடந்தது என்பது எவருக்கும் இதுவரை தெரியாது. புலிகளால் கைது செய்யப்பட்ட இன்னொரு முக்கியமானவர் செல்வி (செல்வநிதி தியாகராஜா). இவர் எதற்காகக் கைதானார் என்பது பற்றிப் புலிகள் இன்றுவரை எந்தத் தகவலும் வெளியிடவில்லை. கடந்த வருடம் 'பென்' அமைப்பு இவருக்குச் சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்திருந்தது.

சிறையில் அடைப்பதால் ஒருவரைச் சித்திரவதை புரியலாம். ஆனால் அவரது சிந்தனையை விலைபேச முடியாது என்பதை அடக்குமுறையாளர்கள் ஒருபோதும் புரிந்து கொள்வதில்லை●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொலைந்துபோன தேசம்பற்றிய சில குறிப்புகள்



தேசப்பிரியன்

ஈ என் டி எல் எ ஃப் இல் இருந்து வெளியேற்றப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீனிவாசன், இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணுமுகமாக முன்வைத்த 9அம்ச சமஷ்டித் தீர்வுத் திட்டங்களைப் பிரதான கட்சிகளான ஐதேகவும், சுதந்திரக் கட்சியும் (கொள்கையளவில்) ஏற்றுள்ளன எனத் தெரிவுக்குழுத் தலைவர் மங்கள முனசிங்ஹ கூறியுள்ளார்.

வடக்கு, கிழக்கைத் தனித்தனி மாகாணங்களாகக் கொண்டு அதிகாரப் பகிர்வுக்கு வழிவகுக்கும் இத்திட்டம் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள கொழும்புத் தமிழ்க் குழுக்கள், வரலாற்றில் முதற் தடவையாக சமஷ்டித் தீர்வுக்கு இருபெரும் கட்சிகளும் இணங்கியிருப்பது மிக முன்னேற்றமான நிலையே எனினும் வடக்கும் கிழக்கும் பிரிந்த தனித்தனி மாகாணங்களாகக் கொண்டு வழங்கப்படும் எத்தகைய சமஷ்டித் தீர்வுகளையும் தாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனக் கூறியுள்ளனர்.

சமஷ்டி அரசியல் தீர்வுகள் பற்றிய பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் அதேசமயம் இராணுவத் தாக்குதல்களும் உக்கிரமடைந்துள்ளது. கிழக்கில் இராணுவமும் பொலிசாரும் இணைந்து மேற்கொண்டு வரும் ராணுவ நடவடிக்கையின் போது, படுவான்கரையில் 16புலிகள் கொல்லப்பட்டு மூன்று முகாம்களும் அழிக்கப் பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. அரந்தலாவ, இடைக்காடு, வளலாய், மணலாறு, வவுனியா போன்ற இடங்களில் புலிகள் மேற்கொண்ட பல அதிரடித் தாக்குதல்களால் பெருமளவு இராணுவம் கொல்லப் பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. அதேசமயம் வெற்றிலைக்கேணி இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவம் சில மைல் தூரம் முன்னேறி முகாமை விஸ்தரித்துள்ளது.

இதேவேளை வடக்கில் இருந்து வெளியேறும் மற்றும் வடக்கே வரும் பயணிகள் மீதான தமது சோதனைகளைப் புலிகள் மிக அதிகரித்துள்ளனர் என அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இதேசமயம் தென்னிலங்கையில் இனவாதப் பிரசாரங்கள் மீண்டும் தொடங்கப் பட்டுள்ளது. 'பிரபாகரனின் அடிமையாய் இருக்கும் நிலை எமக்கு ஏற்படப் போகிறது. தமிழ்நாட்டில் இருந்துவந்த 2000பேருக்குப் புலிகள் பயிற்சி வழங்கி வருகின்றனர். எமது ராணுவத்துடன் மோதப் புலிகளால் இயலவில்லை. அதனால்தான் இப்புதிய பயிற்சி பெறும் புலிகளை ராணுவ ரீதியில் தோற்கடிக்க வேண்டும். நாட்டின் அபிவிருத்தி தற்போது முக்கியமல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்டின் பாதுகாப்பே முக்கியமானது. இதற்கே கூடுதலான பணத்தைச் செலவிடுங்கள்' எனத் திஸமஹரகம எம்.பி. டொக்டர் சிறில் கூறியுள்ளார். சிறில் மத்யூ, நெவில் பெர்ணாண்டோ பாதையில் தற்போது சிறில். முன்னவர்களின் விலாசம் தற்போது தெரியவில்லை. இந்நிலை சிறிலிற்கும் ஏற்படுமா? அரசு போரைத் தீவிரப்படுத்த பாஸ்கரலிங்கம் போன்றோர் தடையாயுள்ளனர் என்ற அபிப்பிராயம் கொண்டுள்ள எதிர்க்கட்சிகள், லண்டன் மகாலிங்கத்திற்கும் பாஸ்கரலிங்கத்திற்கும் என்ன தொடர்பு எனக் கேட்டுள்ளன.

யாழ் குடாநாட்டில் தொற்றுநோய்கள் தீவிரமாகப் பரவிவருகின்றன. 4,000 பேர் மலேரியாவாலும், 311பேர் மூளைக் காய்ச்சலாலும் அவதியுறுகின்றனர். தொடர்ந்த குண்டுவீச்சுகளால் சூழலில் ஏற்படும் மாறுதல்கள் பல புதிய நோய்களை உருவாக்கும் அதேவேளை, போதிய மருத்துவ வசதிகள் இல்லாமல் நோய்கள் அதிகரித்து வருகின்றன. அண்மையில் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் வி.சந்திரகாந்தன் வடக்கேவந்து பார்வையிடுமாறு விடுத்த வேண்டுகோளைத் தென்னிலங்கைப்



பேராசிரியர்கள் ஏற்றுள்ளனர். குடாநாட்டில் நிர்வாக சேவைகளை விரைவுபடுத்த யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபராக திருமதி பத்தினியம்மா போல் நியமிக்கப் பட்டுள்ளார்.

தமிழகத்தில் ராஜீவ் கொலை விசாரணைக்கான நீதிமன்றின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்தியான நிலையில் விரைவில் பூந்தமல்லி சிறையில் விசாரணை ஆரம்பமாக உள்ளது. ஏற்கனவே பத்மநாபா கொலை வழக்கு ஆரம்பமாகி முன்னாள் (திமுக) அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், அவரது கணவர் மற்றும் உள்துறைச் செயலர் நாகராஜன் ஆகியோருட்பட 17பேருக்கு குற்றப் பத்திரிகை வழங்கப் பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை இலங்கை விவகாரம் தன் கையைவிட்டு மெதுவாக நகர்ந்து வருவதை இந்தியா உணர்ந்து வருகிறது. இந்நிலையில் அரசு - புலிகள் பேச்சுக்கான சூழல் உருவாகி வருவதாகவும், இந்நிலையை (ஏற்கனவே அரசு - புலிகள் இரகசியப் பேச்சுகள் நிகழ்வதாகக் கூறப்படும் நிலையை) மாற்றியமைக்க இந்தியா நிச்சயமாக முயலும். ஆனால் இம்முறை இந்தியாவினது குறி பிரபாகரனா, பிரேமதாசாவா என்பதே அரசியல் வட்டாரங்களில் அடிபடும் கேள்வியாகும்.●

---

* *நாடுதிரும்பும் றொணி டிமெல் மீண்டும் ஐதேகவில் இணைந்து நிதியமைச்சராகலாம்*
* *வடக்கில் அத்தியாவசியப் பொருட்களின் விலை மீண்டும் பெருமளவு உயர்ந்துள்ளது.*
* *சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அநுரா சந்திரிகா கோஷ்டிப் பூசல் வலுக்கிறது.*
* *வவுனியா முதலாம் குறுக்குத் தெருவுக்கு கொப்பேகடுவவின் பெயர் சூட்டப் பட்டுள்ளது.*
* *இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைச் சபாநாயகர் சர்வதேச இஸ்லாமியக் கவுன்சில் கூட்டத்தில் தெரியப்படுத்தி உள்ளார்.*

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிழக்கு அவலங்கள்

கல்முனை நந்தகுமார்

அண்மைக் காலங்களாகக் கிழக்கு மாகாணத்தில் ஆயுதம் ஏந்திய அனைத்துத் தரப்பினரும் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு பல தரப்பு மக்களையும் வேட்டையாடி வருகின்றன. அப்பாவி முஸ்லீம்கள் மீதான படுகொலைகளும், முஸ்லிம் ஊர்காவற் படையின் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களும் மாறிமாறி நிகழ்ந்து வருகின்றன. படையினரின் தமிழின அழிப்புடன், கிழக்கைச் சிங்கள மயமாக்கலும் நிகழ்ந்து வருகிறது.

அண்மைக் காலமாக கிழக்கில் - குறிப்பாக மட்டக்களப்பில் - தேடுதல் என்ற பெயரில் பல அப்பாவித் தமிழர்களைக் கைது செய்யும் ராணுவம் அவர்களை ரகசியமாகக் கொன்றுவருகிறது, சடலங்கள் அடையாளம் தெரியா வகையில் சிதைக்கப் படுகின்றன. கைதாவோர் பொதுவாக உயிருடன் திரும்புவதில்லை என்பதே பலரது அபிப்பிராயம். கண்ணகிபுரம், காக்காச்சிவட்டை, சின்னத்தோட்டம், விநாயகபுரம், ஏறாவூர் ஆகிய பகுதிகள் பெருமளவு பாதிக்கப்பட்ட சில இடங்களாகும்.

கிழக்கில் மனிதவேட்டையாடும் அரசின் மற்றொரு பயங்கரவாத நடவடிக்கையாக பல புதிய குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஏற்கனவே மணலாறு வெலிஓயாவாகவும், அம்பாறை திகாமடுல்ல ஆகவும் மாறிவிட்டன. திருமலையில் தமிழரது பெரும்பான்மை வேகமாகச் சிதறடிக்கப்பட்டு வருகிறது. பல தமிழ் முஸ்லிம் கிராமங்கள் ராணுவம், அதிரடிப் படையினரால் சூறையாடப்பட்டு சிங்களக் கிராமங்களாக ஆக்கப்பட்டு விட்டன. இந்நிலை நீடிப்பின் கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்கள் இரண்டாம் மூன்றாம்தரப் பிரஜைகளாக ஆகுவது உறுதியாகிவிடும்.

இந்தச் சிங்கள மயப்படுத்தலை நிறுத்தவும், தமிழின அழிப்பை அம்பலப்படுத்தவும் உடனடியாக முஸ்லிம் தமிழ் மக்களது ஒற்றுமை அவசியமாகும். இரு பிரிவினருமே தாம் சிங்கள அரசால் ஒடுக்கப் படுகிறோம்; எமது பிரதேசம் பறிபோகிறது என்ற உண்மையை உணரவேண்டும். கடந்த காலங்களில் நிகழ்ந்த பல கசப்பான நிகழ்வுகளுக்குப்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின் தமிழ் முஸ்லிம் மக்களது ஒற்றுமை என்பது இலகுவான காரியமல்ல. அதேவேளை முடியாத ஒன்றுமல்ல. இதற்குப் புரிந்துணர்வும் அரசியல் தெளிவும் அவசியம். முஸ்லிம் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதும், வடக்கில் இருந்து துரத்தப்பட்ட முஸ்லிம் மக்களை அவர்களது தாயகத்தில் மீளக் குடியமர்த்தவும் உடன் வழிசெய்யப்பட வேண்டும். (வடக்கு கிழக்கு) முஸ்லிம்களது பாரம்பரியப் பிரதேசம் வடக்கு கிழக்கு என்பது ஏற்றுக் கொள்ளப்படல் அவசியம். இவர்களுக்கு அரசியல், சமூக, கலாசார, பொருளாதார வரலாறு உண்டென்பதையும் நினைவில் நிறுத்தல் அவசியம்.

எம்மிடையே வாழும் சிறுபான்மையினரான முஸ்லிம்களது தனித்துவத்தை அங்கீகரிப்பதும், அவர்களது உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதும் குரல் கொடுப்பதும், சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிரான எமது போராட்டத்திற்கு சர்வதேச ரீதியான ஆதரவைப் பெற்றுத் தரும். அவ்வாறே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரவளித்து, முஸ்லிம் ஊர்காவற் படையினரின் வெறியாட்டத்தை நிறுத்தி, சிங்கள பேரினவாதிகளுக்கு எதிரான தமது குரலை முஸ்லிம் மக்களும் அவர்களது அரசியற் தலைமைகளும் வெளிக் கொணர்வார்களா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.●

## கிழக்கில் தொடரும் மனிதவேட்டை!

கடந்த சில மாதங்களாக கிழக்கில் இராணுவ கெடுபிடிகள் கடுமையாக அதிகரித்துள்ளன. விடுதலைப் புலிகள் மீதான ராணுவத் தாக்குதல்கள் ஆங்காங்கே நிகழ்ந்தாலும் படையினரால் பொதுமக்கள் கைதாவதும், பின் காணாமல் போவதும் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

ஒக்டோபர் 19ஆம்திகதி மட்டக்களப்பில் உள்ள காக்காச்சிவட்டை சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப் பட்டபோது, இராணுவத்தினர் 91பேரைக் கைது செய்தனர். இவர்களது நிலைபற்றிச் செஞ்சிலுவைச் சங்கமூடாக அறிய முற்பட்டபோது, தாம் 45பேரையே கைது செய்ததாகவும் ஏனையோர் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது எனவும் ராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர். இவ்விபரங்கள் கிழக்கிற்கு விஜயம் செய்த சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகளிடம் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உட்பட அறுவாது சடலங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. சிலதினங்கள் முன்னதாக இந்தக் கிராமத்தில் இருந்து படையினர் கைது செய்த 12பேரது சடலங்களே மீட்கப் பட்டன என்பது குறிப்பிடத் தக்கது.

## தமிழ்நாதம்

இனவாத எதிர்ப்பு மையத்தின் ஆதரவில் ஒலிபரப்பாகும் வாராந்த வானொலி நிகழ்ச்சி. பண்பலை வரிசை (FM) 101,1இல் ஒலிபரப்பாகிறது. ஞாயிறு தோறும் மாலை ஆறுமணி முதல் ஏழு மணிவரை கேட்கலாம்.

தொடர்புகளுக்கு: Thamil Natham, Radio Tellus, Post boks 244, 0103 Oslo.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேர்முகம்











கட்டாயமாக இடம்பெற்றிருக்க வேண்டிய சில படைப்புகள், இந்த இதழில் இடம்பெறவில்லை. இடநெருக்கடி தவிர்க்க முடியாத சில சிக்கல்களை உண்டாக்குகிறது. இவற்றைத் தாண்டிப் பலவகையான படைப்புகளையும் வழங்குவதில் சில தடவைகள் சிரமங்கள் ஏற்படுகின்றன.

நீங்கள் கோபிக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் ஒரு உண்மையை உங்களிடத்தில் சொல்லியாக வேண்டும். உங்களில் அனேகரது சந்தா வந்து சேரவில்லை. இது ஏற்கனவே இருக்கும் நிதி நெருக்கடியை மோசமாக்கிவிடும் என்பது நீங்கள் அறியாததல்ல. விரைவில் உங்களது சந்தாத் தொகையை அனுப்பி வைப்பீர்களெனில் நன்றி உடையோம்.

இவற்றைவிட ஒரு முக்கிய விடயம் உங்கள் நினைவுக்கு: சில தடவைகள் எமது சக்திக்கு அப்பாற்பட்ட சில காரணங்கள் அச்சில் ஏற்படும் பிழைக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. இவ்வாறான ஒரு சிறுதவறு கடந்த இதழில் இடம்பெற்றிருந்ததை நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள் என நினைக்கிறோம். அச்சகத்தினர் தமிழராக இல்லாதால் இவ்வாறான தவறுகளைக் களைய அவர்கள் போதிய கவனம் எடுப்பதில்லையோ என்ற உங்களது கவலை நியாயமற்றது.

சுவடுகளில் ஒரேவகையான படைப்புகள் வெளியாவதை வாசகர்கள் விரும்புவதில்லை என்பதை வாசகர்கள் எழுதும் கடிதங்களில் இருந்து அறிய முடிகிறது. ஆனால், பல படைப்பாளிகள் பெரும்பாலும் கவிதைகளையே அனுப்புவதால் மாறுபட்ட படைப்புகளை வழங்குவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. இந்நிலையைக் கருத்திற் கொண்டு படைப்பாளிகள் பலதரப்பட்ட படைப்புகளை அனுப்பி வைத்தல் நல்லது.

நீண்டகாலமாக சுவடுகளில் தொடர்கதையோ குறுநாவலோ வெளியாகவில்லை என்ற உங்களது குறையைக் கவனத்தில் எடுத்துள்ளோம். முன்பு முதல்பாகம் முடிந்த க.ஆதவனின் 'மண்மனம்' நாவலின் இரண்டாம் பாகம் விரைவில் ஆரம்பமாகிறது. அதற்கிடையில் உங்கள் அபிமானம் பெற்ற எழுத்தாளர் ஒருவரது குறுநாவல் சுவடுகளில் பிரசுரமாகும். ஈழத்தில் இருந்து முன்னணி எழுத்தாளர் ஒருவரது குறுநாவல் ஒன்றும் விரைவில் வரும் என்பது உங்களது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும் என நம்புகிறோம்.

மார்கழி மாதம் வருட முடிவு என்பது மாத்திரமல்ல, இன்னொரு வருடத்தின் தொடக்கமும் அல்லவா? இந்தப் புதிய வருடம் வாசகர்கள் அனைவருக்கும் நல்ல வளங்களைக் கொணர்ந்து சேர்ப்பிக்க வாழ்த்துகிறோம். பிறக்கவிருக்கும் புதிய வருடம் எமது தாயகத்திற்கும் நிரந்தர அமைதியைத் தேடித் தருவதாக அமையட்டும்.

வாழ்த்துகளுடன்

– சுவடுகள் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இது பதுங்குகுழியல்ல, பதுங்குநகர்!

## அணுவாயுதப் போரில் தப்பி முப்பது வருடங்கள் வாழ ஓரிடம்!!

பரந்தாமன்

சில சமயங்களில் விஞ்ஞானப் புனைகதைகள் கற்பனையில் நம்ப முடியாதனவாக இருக்கும். ஆனால், சில சமயம் உண்மைகளோ விஞ்ஞானப் புனைகதைகளைவிட நம்ப முடியாதனவாக இருக்கும். பழைய சோவியத் யூனியனதும், இன்றைய ரஷ்யாவினதும் தலைநகர் மொஸ்கோவில் இருந்த பதுங்குகுழி இரண்டாவது வகையைச் சார்ந்தது. உண்மையில் பதுங்குகுழி என்ற பெயர் இதற்குப் பொருந்தாது, ஆகையால் பதுங்கு நகர் என்றே இதைக் குறிப்பிடுவோம்.

நீண்ட காலமாக அமெரிக்காவும், சோவியத் யூனியனும் அரசியல்ரீதியாக விடாக்கண்டனும் கொடாக் கண்டனுமாக இருந்தனர் என்பது இப்போது பழைய கதையாகி விட்டது. இருவரும் அவ்வாறு இருந்த காலத்தில் எப்போதாவது ஒருவரை ஒருவர் - அதுவும் அணுவாயுதம் கொண்டு - தாக்கலாம் என்ற அச்சம், இரு பகுதியினருக்கும், உலகத்திற்கும் இருந்தது. அவ்வாறு ஒரு தாக்குதல் நிகழ்ந்தால் பேரழிவு ஏற்படும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், அவ்வாறு தாக்குதல் நிகழ்ந்தாலும் அமெரிக்க ஜனாதிபதியோ, அல்லது கொங்கிரஸ் பிரதிநிதிகளோ இறந்துவிட மாட்டார்கள். அவர்கள் உயிர் தப்பி வாழ்வதற்கு முறையே வேஜீனியா மலை, மேற்கு வேஜீனியாப் பகுதிகளில் அணுவாயுதத்தால் பாதிப்புறாத பதுங்குகுழிகள் உள்ளன. அணுவாயுத யுத்தம் ஏற்படும் பட்சத்தில், அமெரிக்க ஜனாதிபதிக்கும் கொங்கிரசுக்கும் இந்த இடங்கள் பாதுகாப்பு வழங்கும்.

அமெரிக்க ஜனாதிபதியும் கொங்கிரசும் தப்பினால் போதுமா? நாங்கள் தப்பக் கூடாதா என்ற எண்ணம் சோவியத் ஆட்சிப் பீடத்திற்கு ஏற்படாதா என்ன? அவர்களது நீண்டகால முயற்சியின் பின் உருவாக்கப் பட்டதுதான் றமெங்கி நிலக்கீழ் (Ramenki) நகரம். (எதிர்ப்பக்கப் படம்) இந்நகரைப் பற்றிய விபரங்களைப் படித்து நீங்கள் நம்பாமல் போனால் அதற்கு நான் பொறுப்பல்ல.

இந்நகரில் 30,000பேர் (உணவு, தண்ணீர் உட்பட) எந்தவிதப் பிரச்சனையும் இல்லாமல் (மேலே உள்ள தரைக்கு வராமலே) 30 வருடங்கள் வாழ முடியும். தரைமட்டத்தில் இருந்து இருநூறு அடிக்குக் கீழ் றமெங்கி என்ற மொஸ்கோ புறநகர்ப் பகுதியில், உருவாக்கப் பட்டுள்ள இந்தப் பதுங்குநகரில் சாதாரண நகரொன்றில் உள்ள சகல வசதிகளும் உள்ளன - திரையரங்குகள், மினிபஸ்கள், நீச்சல் தடாகங்கள் உட்பட.

இந்தப் பதுங்குநகரில் தப்பிவாழ உரிமை இருந்தவர்கள், கொம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப் பீடமும், அவர்களது நெருங்கிய உறவினர்களும்தான். இவர்களது மிக முக்கிய தேவைகள் - அரச கருமங்கள் - ஆற்ற எதுவிதப் பிரச்சனையும் இல்லாமல் மொஸ்கோவில் உள்ள பல அரச அலுவலகங்கள் மற்றும் கே.ஜி.பி, பாதுகாப்பு அமைச்சு, 30கி.மீ தொலைவில் உள்ள விமான நிலையம் என்பவற்றுடன் (நிலக்கீழாக) நேரடித் தொடர்பு உள்ளது இந்தப் பதுங்குநகர். இந்தப் பதுங்குநகருக்குக் காற்று வழங்கும் குழாய்கள் மொஸ்கோ நகரில் பலரது பார்வையிலும் தெரியுமாறுதான் உள்ளன. ஆனால் அண்மைக்காலம் வரை யாருக்கும் அந்தக் குழாய்கள்பற்றி எதுவும் தெரியாது.●


www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# MOSCOW'S SECRET CITY

**Ramenki underground city can accommodate 30,000 people for up to 30 years in the event of nuclear war**




Gary Cook

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோர்வே - ஐரோப்பிய சமூகம் - பிரதமரின் பதவிவிலகல் -



* நோர்வேப் பிரதமர் குறுாஹாலம் புறுண்ட்லாந்த் தொழிற்கட்சித் தலைவர் பதவியில் இருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ளார். எனினும், பிரதமர் பதவியில் அவர் தொடர்ந்தும் இருப்பார். அண்மையில் நிகழ்ந்த கட்சியின் வருடாந்த மாநாட்டின்போது, சுவீடனின் முன்னாள் பிரதமர் இங்வார் கார்ள்சன், குறுா உலகிலேயே தலைசிறந்த தலைவர்களில் ஒருவர் எனக் கூறியிருந்தார்.

* ஐரோப்பிய சமூகத்தில் இணைவதற்கான நோர்வேயின் விண்ணப்பம் நோர்வேப் பிரதமரால், பிரிட்டிஷ் பிரதமரிடம் கையளிக்கப் பட்டது. பல நாட்கள் விவாதத்தின் பின்னர், ஐரோப்பிய சமூகத்தில் இணைய நோர்வே விண்ணப்பிக்கலாம் எனப் பாராளுமன்றம் பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானித்தது. நோர்வேயில் தற்போது மிக அதிகளவில் மக்கள் ஐரோப்பிய சமூகத்தில் இணைய எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். நோர்வேயின் இந்த (நான்காவது) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் மீண்டும் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்த நேரிடும்.

THE PRIME MINISTER

Oslo, 24 November 1992

Mr. President,

The Norwegian Government hereby has the honour to apply for membership of the European Communities and to inform you that Norway is prepared to enter into negotiations on the conditions for admission.

Yours sincerely,

Gro H. Brundtland

Gro Harlem Brundtland

The Rt. Hon. Douglas Hurd, M.P.
President of the Council of Ministers
of the European Communities.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(சென்ற இதழ்த் தொடர்

# எதுவரை தொடரும் மனிதரின் கதை?

GÜNTER GRASS

ஜெர்மன் மொழி மூலத்திலிருந்து தமிழில்
ந.சுசீந்திரன்



(முன்தொடர்)

சொல்லின் சுதந்திரம் வேண்டி ஒரு சாராரும், எழுத்துக்கு வரையறை போட இன்னொரு சாராரும் என்று இரு சாரார் எப்போதுமே இருந்து வருகிறார்கள். இலக்கியமும் அதனோடு அதி நெருக்கமாகப் பிணைந்திருக்கும் எதிர்க் குரலான தணிக்கை என்பதும் உள்ளவரையும் இது நடை பெறப்போவது. எப்போதுமே இலக்கியத்தினதும் அதன் மீதான தடையினதும் இணைந்த போக்கானது, இதில் யார் எழுதி யார் தடை செய்கிறார் என்பதில் தங்கியிருப்பதில்லை. ஏனெனில் தணிக்கை செய்வதன் மூலமே, தமது வாழ்க்கையைக் குறிப்பிட்ட காலம் வரை ஓட்டிய பிரபல பத்திரிகையாளர்/ எழுத்தாளர்களின் பட்டியல் ஒன்று இருக்கவே இருக்கிறது. ஒருவர் எழுத இன்னொருவர் தடை செய்வது என்பது, அது எப்போதும் போலவே இன்னும் தொடர்கிறது. அரசியல் காற்று எதிர்ப் பக்கமாக மாறி வீசிவிட்ட அண்மைக்காலம் வரை எழுத்துக்குத் தடை விதிப்பதில் தமது சம்பாத்தியத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் பலர். இன்றைய இந்த அனுபவ சாட்சியங்களிலிருந்து நாம் கீழ்வரும் முடிவுக்கு வரலாம்:

நன்கு கைவரப்பெற்ற தணிக்கை என்பது, ஒரு இலக்கியமறிந்த தணிக்கையாளர் ஒருவராலேயே சாத்தியப்படலாம். அதேவேளை நன்கு இலக்கியப் பரிச்சயம் உள்ள, ஆனால் சிலவேளை இலக்கியத்தில் நேசமில்லாத ஒருவரால் இந்தத் தணிக்கை வேலையை மிகத் திறமையாகச் செய்ய முடிவதும் சாத்தியமே. ஒருவேளை அவர் இலக்கியப் படிவங்களைக் கைப்பற்றுவதிலும், பரீட்சிப்பதிலும், பின்னர் அதனைத் தடைசெய்வதிலும் வெறிகொண்டவராக இருந்து விட்டால் இது இன்னும் விசேடமாக நடைபெறலாம்.

இந்தத் தணிக்கை ஓர் உயர் ரகமாக அதாவது தணிக்கையாளர் பதிப்பாசிரியராக இருந்தும் நடாத்தப்படலாம். ஜெர்மனியில் நாடெங்கிலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறியின்போது "ஆபத்தான இலக்கியங்கள்" என்று அடையாளம் காணப்பட்டவற்றை அழிப்பதற்கு இதுபோன்றதும், இதனையும் மிஞ்சக்கூடியதுமான நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதை ஜெர்மனியில் இருப்பவர்கள் தெரிந்திருப்பர். இதற்கு மேலால் எனது ஜெர்மன் நாடு பகிரங்கமாக புத்தகங்களுக்குத் தீ வைத்த நாடு. அதன் பின்னர் எழுதியதெதுவும் அச்சிடக்கூடாது என்பது மட்டுமல்ல, மௌனிக்கப்பட்ட படைப்பாளிகள் மீது அட்டூழியங்களும் அவர்களைத் துன்புறுத்தின.

நாசிகளால் கொலை முகாமில் கொல்லப்பட்ட எறிக் மூஸாம் (Erich Muehsam), தீவிர பத்திரிகையாளன்; 1935 இல் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றும் வதைமுகாமின் சித்திரவதைகளினால் கொல்லப்பட்ட கார்ல் பொன் ஒசியெற்ஸ்கி (Carl Von Ossietzky) என்ற படைப்பாளிகளை எண்ணிப் பார்க்கிறேன். பெரும்பாலானோரிற்கு புகலிடம் மட்டுமே கைகொடுத்தது. புகலிடம் என்பது நாடு நாடாக ஓடுவது அல்லது தற்கொலையிடம் தஞ்சம் புகுவது. புகலிடத்தில் தற்கொலை செய்துகொண்ட இலக்கிய விமர்சகரும், பிராங்போட் சிந்தனைப்பள்ளியின் நவீன சிந்தனையாளர்களில் ஒருவருமான வால்ரர் பென்ஜமீனை (Walter Benjamin) இந்த இடத்தில் நினைவு கூரலாம்.

மக்கள் பேசும் மொழியின் ஓசையைக் கேட்டும்; அவர்களின் உதடுகளின் அசைவைப் பார்த்தும்; பேசும் மொழியோடும், அதன் இயல்போடும், வாழ்ந்த சூழலோடும் இரண்டறக் கலந்தவர்களான எழுத்தாளர்கள் என்ற கலைஞர்களின் அனுபவங்கள் இன்னும் கசப்பானவை. புலம்பெயர்ந்த போது அவர்களால் மேற்கொண்டு எழுதமுடியவில்லை. எழுத்து வாழ்க்கை/ எழுத்தாளன் என்பது குறுகிப்போனது. ஒருவன் எவ்வளவு காலத்திற்குத்தான் மொழியைத் தன்னுட் தேக்கிவைக்க முடியும்? எவ்வளவு புத்தகங்களால் அவன் மொழியின் நினைவுகளை உள்ளபடி மீட்டுவர முடிகிறது?

ஜெர்மன் இலக்கிய வரலாற்றில் ஒருபுறம் எதனோடும் சமப்படுத்த முடியாத, மறுபுறம் இணைக்க முடியாத முறிவாக அமைந்து விட்ட புகலிட இலக்கியம் இவ்வாறுதான் உருவாகின்றது.

**Thomas Mann** (1875 - 1955) 1933இல் ஜேர்மனியை விட்டு பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, இறுதியில் (US) அமெரிக்காவில் குடியேறினார். புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் சர்வதேசப் பேச்சாளர்; 1929இல்

**Friedrich Schlegal** (பிரீட்றிஸ் ஸ்லேகல்) 1772 - 1829; ஜெர்மன் இலக்கிய விமர்சகர்; கட்டற்ற கற்பனை இலக்கிய முன்னோடி.

**Clemens Von Brentono** (க்ளெமென்ஸ் பொன் பிறென்ரானோ) 1778 - 1842; கவிஞர், நாவல் இலக்கிய முன்னோடி.

இலக்கியப் புகழ்பெற்ற இந்த இருவரும் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில், 1809 தொடக்கம் 1848வரை நிலவிய ஆஸ்திரிய **Métternich** ஆட்சிக்கு உளவாளிகளாக, தணிக்கையாளர்களாக மிகவும் ஆர்வத்தோடு, மனம்வைத்துச் செயற்பட்டிருக்கின்றனர். இவர்களா இப்படி இருந்தார்கள் என்று இன்னமும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். தெளிவற்ற ஒரு இலக்கியப் பாரம்பரியம், அது இன்றைய நிகழ்கால இழுபறிகள்வரை நிழலாகத் தொடர்வதை எடுத்துக் காட்டவே இந்த உதாரணங்களை நான் இங்கே எடுத்துக் கொண்டேன்.

DDRஇன் அரசுக்கு எதிரானவர்கள், அவர்கள் படைப்புகள் தலைமறைவில் எழுதப்படுகின்றன என்று இரண்டு ஜெர்மன் மொழிப் படைப்பாளிகளைப் பற்றிக் கருதினோம், அவர்களும் அவ்வாறே நினைத்திருப்பர். ஆனால் அந்த இருவரும் அரசின் நெடுநாளைய/ நீண்டகால உளவாளிகள் என்பது பின்னர் தெரியவருகிறது. முழு மக்களையும் கண்காணிக்கும் ஒரு அமைப்பினுடைய ஆரம்பப் படியாக; அதற்கு இன்றியமையாத மூலமாகத் தணிக்கைத் திணைக்களமே இயங்குகின்றது. அதுவும் இலக்கியத்தை உற்பத்தி செய்கிறது. 'இரட்டை வாழ்க்கை' என்பது சந்தர்ப்ப வாதிகளின் போக்கிடமாகக் கூறப்பட்டாலும் இவர்களின் போக்கினை இரண்டக நிலையெனக் குறிப்பிட முடியாது. இவர்கள் வெறும் தணிக்கையாளர்கள் இலக்கியக்காரர்கள் போலப் புத்தகங்கள் எழுதுகிறார்கள்.

ஒருசில எழுத்தாளர்களை இங்கே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரிக்க இது சரியான சந்தர்ப்பமாகப் படவில்லை. அரச அதிகாரம், திருச்சபை அதிகாரம் என்பவற்றோடு பேச்சுச் சுதந்திரத்தின் பகைவர்களாக ஒருசில தனித்தனி எழுத்தாளர்களும் இருக்கிறார்கள் என்பது நாம் மறந்துவிடுவது. எங்கே ஒரு மூலையிற் கரையொதுங்கிக் கிடக்கும் பழைய அனுபவம்தான் இன்று புதிதாகத் தோன்றுகிறது. விட்டுக்கொடுப்பின் -, சமரசத்தின் ஆசைநாயகர்கள் என்று அறியப் பட்டவர்களின் முகத்திரைக்குப் பின்னால் அவர்கள் விட்டுவைக்காத, பொறுத்துக் கொள்ளாத அதிகாரத்தின் சேவகர்களாக மாறுகிறார்கள். இந்த நெகிழ்ச்சி நியமங்கள் பெரும்பாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கியத்திற்கான நோபல் பரிசு, ஜேர்மன் இலக்கியத்திற்கு அசாதாரண, புதிய பரிமாண புகலிட நாவல்கள் எழுதினார்.

**Heinrich Mann (1871 - 1950)** Thomas Mannஇன் தமையனார். பிரஸ்லிய கலைக்கல்லூரியின் முதல்வர். 1933இல் ஜெர்மன் குடியுரிமை பறிக்கப்பட்ட பின்னர் பிரான்ஸ், US அமெரிக்காவில் நாஸிகளுக்கு எதிரான தீவிர எதிர்ப்புச் செயற்பாடுகள். சிறந்த நாவலாசிரியர்.

**Alfred DÖblin** (1878 - 1957) 1933வரை பெர்லினில் மூளை நரம்பு வைத்தியர். 1933ல் இவருடைய நூல்கள் தடை செய்யப் பட்டன. சிறந்த நாவலாசிரியர். **Robert Musli (1880 - 1942)** ஆஸ்திரிய நாவலாசிரியர்; சுவிற்சலாந்தில் அரசியற் தஞ்சம்.

இவர்கள், இவர்களின் படைப்புகள் புகலிடம் என்ற தழும்பைத் தாங்கி நிற்கிற போதும் இன்றுவரை அந்நியமாக்கப்பட்டே உள்ளன.

அழைக்கப்படாத விருந்தாளிகளாகப் புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் ஜெர்மனிக்குத் திரும்பியபோது, அங்கேயும் இங்கேயுமாகத் துண்டாடப்பட்ட நாட்டில், அந்தந்த நாட்டின் அரசியலமைப்புக்கு ஏற்றவாறு வாழ வேண்டியிருந்தது. தடையிலும் தணிக்கையிலும் இவர்கள் ஏற்கனவே துன்பப் பட்டிருந்தபோதும் நாடு திரும்பிய இவர்களில் சிலர், புதிய முறையிலான அல்லது ஏலவே அறிமுகமாகிப் போயிருந்த திணிப்புக்கும் பலாத்காரத்துக்கும் பலியாகிப் போனார்கள். இலக்கியங்கள்மீது தணிக்கை - தடை எனும் கட்டுப்பாடு கட்சிசார்பு ரீதியாக அல்லது வர்க்கப் போராட்ட ரீதியாக நியாயப்படுத்தப் பட்டபோது தணிக்கையின் தலையீட்டை இவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார்கள், இந்த முரண்பட்ட நிலைப்பாடுகளுக்கு -

**Bertolt Brecht (1898 - 1956)** உலகப் புகழ்பெற்ற நாடகாசிரியர், கவிஞர்; புகலிடம் தேடி உலகின் பல்வேறு நாடுகள்.

**Anna Seghers** (1900 - 1983) முற்போக்கு எழுத்தாளர்; 1933இல் மெக்சிக்கோவில் அரசியற் தஞ்சம். புலப்பெயர்வு வாழ்வில் பரவலான பாசிச எதிர்ப்பு நடவடிக்கைகள்.

- இந்த இருவரையும் உதாரணமாகக் காட்டலாம்.

ஜெர்மன் மொழியின் வரையறையற்ற (கட்டற்ற) கற்பனை இலக்கியக் காலத்தை **(Romantik)** நோக்கினால் இவர்களுக்கு முன்னோடிகள் அங்கேயும் இருக்கின்றார்கள் என்றாலும் அதன் மூலம் இவர்கள் தாங்கள் செய்ததற்குச் சமாதானம் தேடிக்கொள்ள முடியாது.

ஒரு உயர்வகை நிராகரிப்பின் தாராளப் போக்குத் தளங்களில், அரசதிகார நேரடிக் கட்டுப்பாட்டின் தலையீடு இல்லாவிட்டாலும், ஒரு மெல்லிய பயமுறுத்தற் தொனியுடன் நடைபெறுகின்றன.


இன்றைய சமகால இலக்கியங்களில் சமூகத்தின் மீதான நக்கீர விமர்சனப் பார்வைகள், பொதுவான அரசியற் சேற்றைத் தவிர்க்க முடியாதவையாக இருந்தால் '(கட்சி) நிலைப்பாட்டு அழகியலாக' முத்திரை குத்தப்பட்டு விடுவது இனியாவது தவிர்க்கப்பட வேண்டும்.



திருமதி ருஷ்டி - பொலிஸ் பாதுகாப்புடன் (வலப்புறம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனிதக்காட்சிச் சாலை

பிணக்குவியல்களூடே
புத்தன் சிரிக்கிறான்.

பாரசூட்டில் இறங்கும் இந்தியச் சிப்பாய்களினூடே
காந்தியும் பலமாயச் சிரிக்கிறான்.

இஸ்ரேலிய விமானங்களூடே
இயேசுவும் சிரிக்கிறான்.

கீழைத்தேய மதத்துக்கு விளக்கம்
சொன்னேன் அஹிம்சை என டென்மார்க்கில்.
கைகொட்டிச் சிரித்தார்கள்.
உலகமே சிரித்தது, சிரிக்கிறது.

சிரிப்போம்,
எல்லோரும் சிரிப்போம்.
குண்டுகள் விழுந்து மனிதர்கள் சாகட்டும்
துப்பாக்கி வெடித்து சிதறட்டும் உடல்கள்
சிரிப்போம் சிரிப்போம்.

தத்துவங்கள் வாழ்வதற்காக மானிடர்கள் செத்தனர்.
தத்துவங்களே செத்தபின் செத்தவனுக்கென்ன அர்த்தம்?
எல்லாம் கேலிக்கூத்து.

பாரத மாதாவிடம் தஞ்சம் கேட்டோம்,
மாதாவே வேல் எடுத்தாள்.
கேளடா மானிடா
பாரடா மானிடா
இந்தியத்தின் போலி வேஷம்.

அரைநிர்வாணக் காந்திக் கிழவனின் சிலையில்
காகம் எச்சமிடுவதில் என்ன தப்பு?
இந்த உலகில் அர்த்தம் எதற்குமே இல்லை.
எல்லோரும் கைகொட்டிச் சிரிக்கலாம்
சாவுக்கும் அர்த்தமில்லை,
பிறப்புக்கும் அர்த்தமில்லை.

நாம் நடந்த யாழ்நகர் வீதியெங்கும்
பிணக்குவியல்.
இந்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்திய
மண்டபங்களில் இரத்த வெள்ளம்.

எந்நேரத்திலும் எதுவும் நடக்கலாம்.
சீ! வெட்கம் கெட்ட மனிதகுலமே
நீ கெட்ட கேட்டுக்கு
உனக்கு ஒரு மதமும் கடவுளும் மொழியும்.
மிருகங்கள் 'மனிதக் காட்சிச்சாலை' அமைத்து
வேடிக்கை பார்க்கின்றன.

மனிதர்களே சிரியுங்கள்,
மிருகங்கள் திருப்திப்படட்டும்.

க.ஆதவன்

www.tamilarangam.net

# எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் இலக்கியம்:
## போக்குகளும் சவால்களும்

- மௌ.சித்திரலேகா-

(முன்தொடர்)

எண்பதாம் ஆண்டுகளில் புதிதாக உருவான இன்னோர் போக்கு தமிழ் இலக்கியங்களின் பிரசுரகளம் உலகெங்கணும் பரந்து விரிந்தமையாகும். இது இலங்கையின் இனப் பிரச்சனையின் ஒரு விளைவாகும். குறிப்பாக 1983 ஆம் ஆண்டின் பின் முன்னெப்போதுமில்லாதவாறு அதிகளவான தமிழர் மேற்கைரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். குறிப்பாக இளைஞர்கள் பெருந்தொகையில் சென்றனர். முதலில் இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், போன்ற நாடுகளில் நிகழ்ந்த குடியேற்றங்கள் பின்னர் ஸ்கன்டினேவிய நாடுகளுக்கும் அகன்று இன்று கனடா தொடக்கம் அவுஸ்ரேலியா வரை பரந்து ள்ளன. அகலுலகத் தமிழர் சமூகமொன்று **(Srilankan Tamil Diasphora)** இன்று பரந்து காணப்படுகிறது. இச்சமூகத்தினர் மத்தியில் இருந்தே பத்திரிகைகள், சஞ்சிகைகள், நு ரல்கள் பிரசுரமாகத் தொடங்கியுள்ளன. மொழி, கலாச்சாரம்,பொது அபிவிருத்தி போன்றவற்றில் பாரிய வேறுபாடுளள அன்னிய நாடுகளிற் பெருந்தொகையாக வாழும் நிலை இப்புலம்பெயர் தமிழரிடையே குறிப்பிட்ட சில தேவைகளைத் தோற்றுவித்துள்ளது. இவற்றில் ஒன்று வாசிப்புத் தேவையாகும். தமிழில் வாசிப்பதற்கும், தகவல் பெறுவதற்கும், பொழுது போக்கிற்கும் கூட நு ரல்களும் சஞ்சிகைகளும் வேண்டியுள்ளன. இத்துடன்,இந்நாடுகளில் வாழும் இளைஞர்களிற் கணிசமானோர் இலங்கையில் இருக்கும்போதே இலக்கியத்திலும், அரசியலிலும் ஒருங்கே ஆர்வம் கொண்டிருந்தோராவர். மேற்கு நாடுகளிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள், நு ரல்களுடன் இவர்களும் தொடர்பு தொண்டுள்ளனர். மேற்கு நாடுகளிலிருந்து பிரசுரமாகும் இலக்கியங்களை இப் பின்னணியிலேயே நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு புலம் பெயர்ந்த மக்கள் மத்தியிலிருந்து இலக்கியங்கள் தோன்றுவது தமிழர்களுக்கு மாத்திரம் உரிய விசேட பண்பு அல்ல. உதாரணமாக இன்று அமெரிக்கநாட்டு இலக்கியப் பரப்பில் வெவ்வேறு இன, தேச அடையாளங்களைக் காட்டும் இலக்கியங்கள் முக்கியம் பெற்றிருப்பதைக் காணலாம்.சீன அமெரிக்க இலக்கியம்,ஜப்பானிய அமெரிக்க இலக்கியம், ஆபிரிக்க அமெரிக்க இலக்கியம் என்றெல்லாம் இவை வகைப்படுத்தப்படுகின்றன. ஆனால் இவை சீன மொழியிலோ ஜப்பானிய மொழியிலோ அல்லாமல் ஆங்கில மொழியிலேயே பிரசுரமாகின்றன. இதே போல சில அல்ஜீரிய இலக்கியங்கள் பிரஞ்சு மொழியில் பிரசுரமாகியுள்ளன. ஆனால் புலம்பெயர்ந்து சென்ற முதலாவது தலைமுறைத்தமிழர் மத்தியிலிருந்தே வெளிவருவதால் இலக்கியங்கள் அவர்களது சொந்த மொழியாகிய தமிழிலேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைந்திருப்பதுதான் விசேட அம்சமாகும்.

இவற்றில் அதிகளவாக வெளிவருபவை சஞ்சிகைகள் தாம். இச் சஞ்சிகைகள் மூலமே பெரும்பாலும் ஆக்க இலக்கியங்கள் வெளிவருகின்றன. கவிதையும் சிறுகதையும் சில சமயம் தொடராக நாவல்களும் இவற்றில் பிரசுரமாகின்றன. இவற்றில் கையாளப்படும் பொருள் பொதுவாக ஈழத் தமிழரின் இன்றைய வாழ்நிலை தான். வெளிநாடுகளில் குடியேறிய புதுச் சமூகமாக ஒரு Imigrant Community ஆக உள்ள இவர்களது வாழ்நிலையும் பிரச்சனைகளும் இலங்கையில் தமிழரது வாழ்நிலையும் பிரச்சனைகளும் பின்னிப் பிணைந்துள்ளன. குடியேறிய நாட்டின் புதிய நிலைமைகளும், அங்கு இவர்களின் குடியுரிமை அந்தஸ்தும், நிச்சயமற்ற தன்மையும் இலங்கையில் விட்டு வந்த சொந்தங்கள்,சொத்துக்கள் ஆகியவற்றின் தொடர்பும் பல்வேறு உணர்வுச் சிக்கல்களையும், ஏக்கங்களையும், எதிர்பார்ப்புகளையும் உருவாக்குகின்றன. இவ்வகையில் தமிழரின் புலம் பெயர் வாழ்க்கையின் பல்வேறு பரிமானங்களை இந்த இலக்கியங்கள் தொட்டுக் காட்ட ஆரம்பித்துள்ளன. எனினும் இன்னும் இவற்றில் குறிப்பாகக் கவிதைகளில் விருசி நிற்பது நாட்டிலிருந்து வெளியேறியதை நினைத்திரங்கும் கழிவிரக்கமும் ஏக்கமும் தான். இந்தத் தலைமுறையினரது பிரச்சனை இன்னும் சற்றுக் காலத்திற்கு இத்தகைய அம்சமாத்தான் காணப்படும் என நினைக்கிறேன். தம்மை எங்கே இருத்துவது ? locate பண்ணுவது எவ்வாறு? என்கிற மனித இருப்புப் பற்றிய பிரச்சனை இது. இருப்பு என்பது பௌதீக இருப்பு மாத்திரம் அல்ல மானசீகமான தமது அடையாளத்தைக் காண்கிற நிலைமை. அது இன்னும் தெளிவாகவில்லை. காலப் போக்கில் தான் இதற்குப் பதில் கிடைக்கும்.



பலரும் அறிந்த, பலரதும் ஆர்வத்தைத் தூண்டுகிற புகைப்படக் கலை பற்றி ஒரு கருத்துப் பரிமாற்றத்தை ஏன் சுவடுகள் நடத்தக் கூடாது என சுவடுகள் வாசகர் சஞ்சயன் ஒரு கேள்வியை சுவடுகளிடம் எழுப்பியிருந்தார். நியாயமான கேள்விதான்.

புகைப்படக் கலை எம்மிடையே அறிமுகமான கலையாக இருந்தாலும், அதில் நாம் அறிந்துகொண்டது மிகக்குறைவு. எம்மிடையே ஒரு கலந்துரையாடல் எமது அறிவைப் பகிர்ந்துகொள்ள மிக உதவியாக இருக்குமே! இவ்வாறான ஒரு கலந்துரையாடலையும் புகைப்படக் கண்காட்சியையும் வசந்தகால முற்பகுதியில் நடத்தலாம் என ஆலோசிக்கிறோம். இதுபற்றிய வாசகர்களது ஆலோசனைகள் வரவேற்கப் படுகின்றன.

– சுவடுகள் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சவால்கள்:

நவீன ஈழத்துத் தமிழ் இலக்கியத்தையும் இலக்கிய கர்த்தாக்களையும் பல்வேறு சவால்கள் எதிர் நோக்கியுள்ளன. இவற்றில் புலம்பெயர் இலக்கியம் தொடர்பான ஒரு அம்சத்தை மாத்திரம் இச்சந்தர்ப்பத்தில் சிந்திப்பதற்கு முக்கியமான விடயம் ஆதலால் குறிப்பிடுகிறேன்.


இன்று கனடாவிலிருந்து அவுஸ்ரேலியா வரை பரந்திருக்கின்ற இலங்கைத் தமிழர் சமூகம் ஒரு வரலாற்று நிதர்சனம். புலம்பெயர் சமூகத்தின் (Immigrant Community) ஒரு பகுதி. "மீண்டும் இலங்கை திரும்புவோம்" என்று விரும்பினாலும், கூறிக் கொண்டாலும் இத் 'திரும்பிப் போதல்' முற்றாக நடைபெறமாட்டாது. "திரும்புவோம்" இது கனவு ஆனால் யதார்த்தத்தில் இது நிகழாது. இக்கனவுக்கும் நனவுக்குமான முரண்நிலை இப் புலம்பெயர் சமூகத்தின் ஒரு விசேஷ அனுபவமாகும்.

இந்த விசேஷ அம்சங்களும் அனுபவங்களும் இலக்கியத்தில் எவ்வாறு இடம் பெறப்போகின்றன? இந் நிலைமையின் சமூக,அரசியல்,உளவியல் தத்துவார்த்த அம்சங்களை இலக்கியத்தில் வெளிக் கொண்டு வர எழுத்தாளர் எத்தகைய முயற்சி செய்வர்? இவற்றை எவ்வாறு கையாளுவர்? இவையெல்லாம் எம்மை எதிர் நோக்கும் வினாக்கள்.

இப் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் அடுத்த தலைமுறையினர் இப்பிரச்சனைகளை எவ்வாறு நோக்குவர்? இன்று கனடாவிலும், ஜேர்மனியிலும் தமிழர் சமூகமாக இயங்குவது போல இயங்குவார்களா? அவர்களது மொழி எதுவாக இருக்கும்? அவர்களது இலக்கியம் இலங்கைத் தமிழர்இலக்கியம் என்று கூறக் கூடிய தனித் தன்மைகளைக்

---

## திமிங்கிலத்தால் ஆபத்து!



நோர்வேயின் 'மிங்க்' வகைத் திமிங்கில வேட்டை, நோர்வேக்குப் பொருளாதார ரீதியில் லாபம் ஈட்டுவதற்குப் பதிலாக நட்டத்தைக் கொண்டுவரக்கூடும். இதற்கான அறிகுறிகள் அண்மையில் தெரிய ஆரம்பித்துள்ளன.

ஏற்கனவே நோர்வே திமிங்கில வேட்டையை நிறுத்தும்வரை நோர்வேயின் ஏற்றுமதிப் பொருட்களைப் பகிஷ்கரிக்குமாறு அமெரிக்காவிலும், கனடாவிலும் சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் மக்களைக் கோரி வருகின்றன.

இந்த நிலை வெகுவிரைவில் ஐரோப்பாவில் தோன்றலாம் எனப் பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது. ஐரோப்பாவில் உள்ள பல சூழல் பாதுகாப்பு அமைப்புகளும், நோர்வேஜியப் பொருட்களைப் பகிஷ்கரிக்குமாறு கோரும் விளம்பரங்களை வெகுவிரைவில் ஆரம்பிக்கக்கூடும்

– தேவகி –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருக்குமா?

இலங்கையர், இலங்கைத் தமிழர் என அடையாளங் காணுதல் தொடர்ந்திருக்கும் என நினைக்கிறேன். இலங்கைக்குப் போயிராவிடினும், வாழ்ந்திராவிடினும் தமிழ் மொழியைப் பேசவோ, எழுதவோ தெரிந்திராவிடினும் தம்மை இலங்கையுடன் சேர்த்து அடையாளங் காணும் தன்மை பல்வேறு காரணங்களால் இன்னும் சில தலைமுறைக்காவது தொடரத்தான் போகின்றது. இச் சந்தர்ப்பத்தில் நான் சமீபத்தில் பார்த்த "மிஸிஸிப்பி மசாலா" என்ற திரைப்படம் நினைவுக்கு வருகின்றது. புலம்பெயர் வாழ்வின் சில அரசியல், சமூகப் பிரச்சனைகளைக் கையாள முயலும் இத் திரைப்படத்தில் அதன் முக்கியமான இருவர் அமெரிக்காவில் வாழும் ஆபிரிக்கரான ஆணும் இந்தியரான பெண்ணும் பின்வருமாறு பேசிக் கொள்கின்றனர்.

"நான் ஒரு ஆபிரிக்கன்; ஆனால் ஆபிரிக்காவுக்கு என்றும் போனதில்லை."

" நான் ஒரு இந்தியர்; ஆனால் இந்தியாவுக்கு ஒரு நாளும் போனதில்லை."

புலம்பெயர் சமூகத்தின் புதிய தலைமுறையின் அடையாள உருவாக்கம் ( Construction Of Identity );யதார்த்தமான வாழ்நிலை என்பவற்றுக்கிடையிலான பிரச்சனை, முரண்பாடு, இளந் தலைமுறையின் சிந்தனை, உணர்வு, குழப்பம் ஆகியவை இந்த வசனங்களில் அடங்கியுள்ளன.

எமது அடுத்த தலைமுறையினரும் இப்படித்தான் கூறுவர்- "நான் ஒரு இலங்கையர்; ஆனால் அங்கு ஒருபோதும் போனதில்லை " இதையும் அவர்கள் ஆங்கிலத்திலோ, பிரஞ் மொழியிலோ, ஜேர்மன் மொழியிலோ தான் சிந்திப்பார்கள், கூறுவார்கள் என நினைக்கின்றேன். அவர்களது இலக்கியமும் இவ்வாறு வெவ்வேறு மொழிகளில் வெளிவரலாம்.

புலம்பெயர் தமிழர் இலக்கியம் பற்றி மேற்கூறிய அம்சங்களையும் சிந்தித்தல் அவசியம்.

புலம்பெயர் வாழ்வின் வெவ்வேறு நெருக்கடிகளையும் பிரச்சனைகளையும் மேலும் உணரவும், புரியவும், தெளிவாக அறியவும் ஏனைய புலம்பெயர் சமூக இலக்கியஙகளைப் படித்தல் ஒரு வழியாகும். ஆபிரிக்க அமெரிக்க, ஆசிய அமெரிக்க இலக்கியஙகள் முதலியவற்றில் இத்தன்மைகளைக் காணலாம். எனவே தனியே தமிழ், தமிழ்ச் சமூகம் என்ற வரையறைக்குள் மாத்திரம் நின்றுவிடாது சிந்தனைக்கு ஆழமும் தெளிவும் சேர்க்கவல்ல சகல வழிகளையும் நோக்குதல் வேண்டும்.

இத்துடன் இன்றைய புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்கள், தாம் வாழும் நாடுகளில் ஏற்படும் புதிய கலை இலக்கிய விருத்திகள் குறித்து பிரதிக்ஞையையும் அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.தமிழ் வாசகர்கட்கு இவற்றை அறிமுகஞ் செய்வதும் அவர்களது கடமையாகும். உலகின் பொது ஓட்டம் பற்றிய அறிவை வளர்க்க இது உதவும். மேற்குலகின் அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் முற்போக்கான அம்சங்களையும் முடியுமானவரை உள்வாங்க வேண்டும். "எல்லாம் தமிழில் உண்டு" என்ற சுயதிருப்தி மனோபாவத்தைத் தள்ளி வைத்துத் திறந்தமனத்துடன் உலகின் சிந்தனைச் செல்வங்களை, இலக்கியங்களை அணுகுதல் வேண்டும்.

இத்தகைய முயற்சிகளின் மூலம் வாழ்க்கையின் வினாக்களையும் தேடல்களையும் ஆழப்படுத்துவதும் செழுமைப் படுத்துவதும் எழுத்தாளரின் பொறுப்பு ஆகும்.


(ரொறன்ரோ, 'காலம்' இலக்கிய அமைப்பு, 6.6.1992 நடத்திய 'இலக்கிய மாலை' நிகழ்ச்சியில் ஆற்றிய உரையைத் தழுவி எழுதியது )●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய கைகளில் வெள்ளை மாளிகை



மற்றவருக்கு வாக்களித்தால் நாட்டைக் குப்பைத் தொட்டியிற் போட்டுவிடுவார் என்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் நடுவில் தோன்றி வாக்குப் பிச்சை கேட்கும் வேட்பாளர்களைக் காணவில்லை. எல்லாச் செய்தி அறிக்கைகளையும் முழுமையாக ஆக்கிரமித்திருந்த தேர்தல் - அரசியல் செய்திகள் மூன்றாம் நான்காம் இடத்திற்குப் போய்விட்டன. சுப்பர் மாக்கெற்றுகளிலும் மதிய உணவு மேசைகளிலும் புதிய திரைப்படங்கள் பற்றியும் தமது குழந்தைகள் பற்றியும் மக்கள் பேசிக் கொள்கிறார்கள். புத்தாண்டுத் திட்டங்கள் மற்றும் புதிதாக அவர்கள் வாங்கத் திட்டமிட்டிருக்கும் வாகனங்கள் பற்றி, அவர்கள் நம்பிக்கையுடன் பேசுவதைக் கேட்க முடிகிறது. கடந்த பன்னிரண்டு வருடங்களாகக் குடியரசுக் கட்சியின் வசமிருந்த வெள்ளை மாளிகை குறைந்தது நான்கு வருடங்களுக்கு ஜனநாயகக் கட்சியின் கைக்கு மாறவிருக்கிறது. வரும் ஜனவரி மாதம் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பில் கிளின்ரன் சத்தியப் பிரமாணம் செய்யவிருக்கிறார்.




தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் நிர்வாகத்தில் இருந்து பொறுப்புகளைப் புதிய கைகளுக்கு மாற்றும் ஏற்பாடுகளை பில் கிளின்ரனால் நியமிக்கப்பட்ட குழு ஒன்று கவனித்து வருகிறது. முன்னைய ஜனாதிபதி கார்ட்டர் நிர்வாகத்திற் பணிபுரிந்த வோறன் கிறிஸ்தோபர், வோஷிங்டனின் பிரபல சட்ட நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த கறுப்பினத்தவரான வேணன் ஜோடனும் இக்குழுவின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கின்றனர். கிளின்ரன் நிர்வாகத்தில் அமைச்சுகளுக்குப் பொறுப்பாக இருக்கப் போகின்றவர்களையும் இக்குழுவே தெரிவு செய்யும். தேர்தல் பிரசாரத்தில் உறுதியளித்ததைப் போன்று ('எனது அமைச்சரவை உண்மையான அமெரிக்காவைப் பார்ப்பது போன்று தோற்றமளிக்கும்') சிறுபான்மை இனத்தவர்களுக்கும் பெண்களுக்கும் அதிகளவில் இடம் தரப்படும் என எதிர்பாக்கப் படுகிறது. அரசியல் நிர்வாக அனுபவம் வாய்ந்த ஆலோசகர்களும் இளம் வயதினரும் மத்திய அரசு மட்டத்தில் செல்வாக்குக் கொண்டவர்களும், மத்திய அரசியலில் ஈடுபடாத மாநில மட்டத் தலைவர்களும் சேர்ந்த ஒரு சமப்படுத்தப்பட்ட நிர்வாக இயந்திரத்தைக் கிளின்ரன் அமைக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பதாக அவரைச் சூழ்ந்த வட்டாரங்கள் கோடி காட்டியிருக்கின்றன.

தேர்தலில் வாக்களித்தோரில் 43%மானோரின் ஆதரவைக் கொண்டு கிளின்ரன் வெற்றி பெற்றிருக்கிறார். கடைசிநேர அதிர்ஷ்டம் தம்மைத் தப்பவைக்கும் என எதிர்பார்த்திருந்த ஜோர்ஜ் புஷ் மற்றும் குடியரசுக் கட்சியினர் இத் தோல்வியால் மிகவும் காயப் பட்டுள்ளனர். குடியரசுக் கட்சித் தலைவர்கள், 57% வாக்காளர்கள் (புஷ்38%, பெறோ19%)




கிளின்ரனுக்கு எதிராக வாக்களித்திருப்பதைச் சுட்டிக் காட்டிப் பேசி வருகின்றனர். ஆனாலும், கொங்கிறஸின் இரு சபைகளிலும் ஜனநாயகக் கட்சிக்கு உறுதியான பெரும்பான்மை இருப்பதால் நிர்வாகத்தைப் பொறுத்தளவில் கிளின்ரனுக்கு அதிக பிரச்சனைகள் ஏற்படா என நம்பப்படுகிறது.


தேர்தல் பிரசாரத்தின்போது, அதிகாரத்திற்கு வந்த நூறு நாட்களுக்குள் தீவிரமான பல மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாக கிளின்ரன் – கோ அணி உறுதியளித்திருந்தது. ஆனால் இந்த நூறுநாட் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் கிளின்ரன் சிக்கல்கள் பலவற்றை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அரசியல் மற்றும் நிர்வாகத்துறை வல்லுனர்கள் எதிர்வு கூறியுள்ளனர். "கிளின்ரன் நூறு நாட்களை ஒரு கடுமையன காலக்கெடுவாக நிர்ப்பந்திக்கக் கூடாது" என ஜனநாயகக் கட்சியின் செனற் சபைத் தலைவர் ஒருவர் செய்தியாளர் மாநாடொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

முப்பது வருடங்கள் முன்னதாக, கென்னடி செய்தது போல ஓர் இளமைத் துடிப்புள்ள அரசை கிளின்ரன் அமைக்கலாம். முன்னைநாள் ஜனாதிபதி கார்ட்டர் போன்ற ஒரு சர்வதேச அமைதிவிரும்பி ஜனாதிபதியாக அவர் ·திகழலாம். நிற – இன – மத வேறுபாடுகளைக் களையும் முயற்சிகளை அவர் எடுக்கலாம். வெளிநாடுகளில் இருக்கும் அமெரிக்க இராணுவ பலத்தையும் செலவுகளையும் கணிசமான அளவு குறைக்கலாம். ஏற்கனவே ஹெய்டியில் இருந்து வந்த அகதிகளைப் பலவந்தமாகத் திருப்பி அனுப்புவதை நிறுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார். தமது முதலாவது செய்தியாளர் மாநாட்டில், தொழில் நிறுவனங்களையும் வெளிநாட்டு அரசுகளையும் விழித்து, தமது அரசின் நிதி, முதலீடு மற்றும் வெளிநாட்டுக் கொள்கையில் அதிக மாற்றங்கள் இரா என்றும் சொன்னார் கிளின்ரன். ஆனாலும், கல்விச் சீர்திருத்தம், சுகாதாரச் சீர்திருத்தம், கடுமையாகச் சீர்கெட்டுப் போயுள்ள பொருளாதாரத் துறையின் மறுசீரமைப்பு, வீடற்றோர் பிரச்சனை, பெருநகரங்களில் குடியிருக்கும் மக்களின் பிரச்சனைகள் போன்றவை கடுமையான சவால்களாக இருக்கும். அமெரிக்க ஆயுதப் படைகளில் வேறுபட்ட பாலியல் பழக்கங்களை உடையோருக்கு – குறிப்பாக தன்னினச் சேர்க்கை ஈடுபாடு உடையோருக்கு – எதிரான தடையை நீக்குதல், கருச்சிதைவைச் சட்டபூர்வமாக்குதல் போன்றவற்றைத் தாமதப் படுத்துமாறும் பொருளாதாரம் சீராகும்வரை 'மத்திய வகுப்பு வரிக்குறைப்பை' முயற்சிக்க வேண்டாம் எனவும் கொங்கிறஸ் தலைவர்கள் கிளின்ரனுக்குப் பகிரங்கமாக ஆலோசனை கூறியிருக்கிறார்கள்.

கிளின்ரனின் செய்தித் தொடர்புச் செயலாளர், புதிய நிர்வாகத்திடம் இருந்து மக்கள் அதீத எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பதைத்

www.tamilarangam.net

தவிர்க்கும் வகையில் பேசிவருகிறார். பொதுமக்கள் அதிக எதிர்பார்ப்புகளுடன் இல்லாத போதிலும், நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். தொழில் வாய்ப்புகளும், குழந்தைகளின் கல்வியும், அபிவிருத்தி அடையுமெனக் கருதுகிறார்கள். தேர்தல் வெற்றியின் பின் வோஷிங்டனுக்கு விஜயம் செய்த முதலாவது நாளில் தலைநகர வீதிகளில் சாதாரண மக்களுடன் கலந்து புழங்கிய கிளின்ரன் மக்கள் நன்மைக்காக அந்தரங்க சுத்தியுடன் பாடுபடக் கூடுமென எதிர்பார்க்கப் படுகிறது. ஆனாலும், தேர்தலில் அவர் தந்த வாக்குறுதிகளையும், பன்னிருவருடக் குடியரசுக் கட்சி ஆட்சியின் பின்பு நாடு இருக்கும் நிலைமையையும், 400கோடி டொலர் கடனையும் இணைத்துப் பார்க்கும்போது, அவருடைய வெள்ளை மாளிகை நாட்கள் இலகுவானவையாக இருக்கப் போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.




## மனிதம்

உன் கண்களின் பிரகாசிப்பை
நானறிவேன் - அதில் கள்ளமில்லை
உன் வார்த்தையின் உறுதியையும்
தெளிவையும் நானறிவேன் - அதில் போலி இல்லை
உன் சிரிப்பின் அர்த்தங்களை
நஏனறிவேன் - அதில் அழுகையில்லை
உன் முகபாவங்களின்
அர்த்தங்களை நானறிவேன் - அதில் சலனமில்லை
உன் எழுத்துக்களின் ஆழத்தை
நானறிவேன் - அதில் உறுதியுண்டு
உன் செயற்பாடுகளை
நானறிவேன் - அதில் நேர்மையுண்டு
இவற்றைவிட, உன் மன ஆதங்கத்தை
நானறிவேன் - அதில்
இச்சமூகம் பற்றிய உனது
சிந்தனைச் செறிவோட்டங்கள்
அடங்கியுள்ளது.

நீ மனிதர்களைத்
தேடுகின்றாய்
மனிதத்தை நாடுகின்றாய்
நீ தேடும் இடங்களில்
மனிதர்களுமில்லை - மனிதமுமில்லை
மனிதர்கள் இருந்தால்தானே
அங்கு மனிதமும் இருக்கும்
நீ உனது இலக்கு நோக்கிப்
பயணமாக வேண்டுமானால்,
தொடர்ந்து
எதிர்நீச்சல் போடு.

எஸ்.ரவிக்குமார்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அபிப்பிராய வாக்கெடுப்புகள்!


**மாதவன்**




நவம்பரில் நோர்வே, சுவீடன், ஃபின்லாந்து ஆகிய நாடுகளில் அந்தந்த நாடுகள் ஐரோப்பிய சமூகத்துடன் இணைவது பற்றி நிகழ்த்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்புகளின்படி ஃபின்லாந்து மக்களில் பெரும்பான்மையினர் ஐரோப்பிய சமூகத்துடன் இணைய விரும்பும் அதேசமயம், நோர்வேயிலும் சுவீடனிலும் பாதிக்கு மேற்பட்டோரின் எதிர்ப்பை வாக்கெடுப்பு தெளிவாகக் காட்டுகிறது.

நவம்பர் மாதத்தில் நிகழ்ந்த அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றில் (5/11/92) ஆளும் தொழிற்கட்சி மிகக் குறைந்தளவு ஆதரவையே கொண்டிருந்ததாக அறியப்படுகிறது. இது, இரண்டாம் உலக யுத்தத்தின் பின் தொழிற்கட்சி கொண்டிருந்த மிகக் குறைந்த செல்வாக்காகும்.

கடந்த மாதம் இதே காலப் பகுதியில் தொழிற்கட்சி கொண்டிருந்த ஆதரவைவிட இது 0.8% குறைவானதாகும்.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எப்பொருள்
# யார்வாய்
# கேட்பினும்...

## கவிராயரின் புரியாத புதிர்கள்

- துருவச்சி



புரியாத புதிர் 9

நிறவெறியா, சாதிவெறியா மேல்?

ஒஸ்லோ சிற்றிக்குள் சாமான் வேண்டப் போய்க் கொண்டிருந்தேன். வழக்கமான சனிக்கிழமை நெரிசல். என்னை ஒருவர் இடித்து விழுத்திக் கொண்டு போனார். கோபத்துடன் திரும்பிப் பார்த்தேன். தமிழ்த் தலை. வேறு யாருமல்ல, விசித்திரக் கவிராயர்தான்!

விட்டுக் கலைத்துக் கொண்டுபோய் கையைப் பிடித்து நிறுத்தி "என்ன கவிராயர் இப்பிடிக் கண்மண் தெரியாமல் போய்க் கொண்டிருக்கிறீர்? என்னைக் காணாதமாதிரிப் போறீர்?" என்று கடித்துக் கொண்டேன்.

"இல்லைத் தம்பி, நிலைமை அப்படி! உடுப்புகளை உரிஞ்சு விட்டுப்போட்டு ஓடவேணும் போல கிடக்கு. அப்படி ஒருத்தர் கேள்வி கேட்டுப் போட்டார். எங்களிட்டக் கேக்க வேண்டிய கேள்விதான். நாங்கள் தமிழர் யோசிக்க வேண்டிய கேள்விதான். நியாயமான கேள்வி...." என்று கடகடவென்று கொட்டிவிட்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். என்னைப் பார்க்காமல் மேலே பார்த்துக் கொண்டிருந்தார்.

"அப்படி என்ன கேள்வி? யார் கேட்டது?" என்று கிண்டினேன்.

"ஒரு நோர்வேஜியர் தான் கேட்டார். அவர் உலக விசயம் தத்துவம், சரித்திரம் எல்லாம் கரைத்துக் குடித்தவர்.

*விசித்திர கவிராயருக்கு ஓரளவு சில விசயங்கள் தெரியும். மனிதனை மனிதன் கொல்வது சரியென அவர் ஒப்புக் கொள்வதில்லை.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழமைபோல நான் அவரிட்ட இப்ப நடக்கிற சம்பவங்களை வைச்சு ஏன் உங்கட சமூகமும் ஐரோப்பியர்களும் வர வர நிறவெறியர்களா மாறிக்கொண்டு வருகிறீர்கள்? இது நிறம் காரணமாக ஒருவரை மட்டம் தட்டுதல் (Discrimination), ஒதுக்கி வைத்தல், மூன்றாம் தரமாக நினைத்தல் மனித நேயத்திற்கு எதிரானது அல்லவா? இது வெள்ளை ஆரியர் என்ற உயர் சிந்தனை காரணமாக எழுகிறது, இது பிழையானது அல்லவா?" என்றேன்.

"ஆமாம், முற்றிலும் உண்மை. இந்தச் சமூகம் இப்படி மாறிவருவதை நினைக்கச் சரியான கவலையாக இருக்கிறது. இது முழுச்சமூகத்துக்குமான பொதுப் பண்பு இல்லை. அத்தோடு இது பிழையான சிந்தனையும், எதிர்க்க வேண்டிய விசயமும். அது மட்டுமல்ல, இந்த ஆரியர் உயர்ந்தவர் என்ற சிந்தனை ஐம்பது வருடம் முன்புதான் ஐரோப்பாவில் தோன்றியது. நல்லகாலமாக அதுவும் முழுச் சமூகப் பண்பாக மாறவில்லை. அது இரண்டாம் உலக யுத்தத்திற்கு வழிவகுத்ததும் தனது உண்மையான கொடூரமுகத்தைக் காட்டியது. எல்லோரும் சேர்ந்து அதன் கொடூரத்தை, ஹிட்லரின் சிந்தனையை ஐந்துபத்து வருடத்திற்குள் துடைத்து எறிந்து விட்டோம். ஆனால், அதை நீங்கள்தான் கட்டிக் காக்கிறீர்கள்...." என்றார்.

"நாங்களா? ..... எப்படி?" என்றேன், ஆச்சரியமாக.

"இல்லை, ஆதிகாலத்தில் நாடோடிகளாக இருந்த ஆரியர்கள் வடக்கிலிருந்து படையெடுத்து, நிலையான உயர் கலாசாரத்தைக் கொண்டிருந்த திராவிடர்களை வென்று மேல்நிலை கொண்டு தமது செல்வாக்கை அவர்கள்மேல் நிறுவினர். தம்மை மேலானவர்களாக நிறுவிக் கொண்டு சகல செல்வங்களையும் தாம் கொண்டிருக்கப் புதிய வழிவகைகளை அவர்கள் கையாண்டனர். அதாவது, அவர்கள் தம்மைப் புரோகிதர்களாகவும் கடவுளுக்குச் சமமாகவும் உருவகப் படுத்தி, ஏனையவர்கள் தங்களைவிட மிகத் தாழ்ந்தவர்களாக காட்டி, சிந்தனாரீதியான பொய்களை மதத்தின் பேரால் தத்துவங்களாக்கிப் பரப்பினர். சிந்தனை வளராத ஆதிகால சமூகத்தில் ஆயிரக் கணக்கான வருடங்கள் இந்தச் சிந்தனை இலகுவில் வேரூன்றியது. சிறுபான்மையினரான ஆரியப் பிராமணர் இலகுவாகத் தமது ஆதிக்கத்தை முழுச் சமூகத்திலும் பதித்து தமது தேவைகளை, இரத்தம் சிந்தாமல் காலம் காலமாகப் பூர்த்தி

## புதிய செயலர்!

சர்வதேச மன்னிப்புச் சபையின் நோர்வேக் கிளையில் புதிய செயலாளர் நாயகமாக



யன்னிகா ஹெயர்டால் லார்ஸன் (39) நியமனம் பெற்றுள்ளார். றெட்பாணா உட்படப் பல பொது நிறுவனங்களில் முன்பு பணிபுரிந்த இவர் ஒஸ்லோ, போர்கன் மற்றும் கொலம்பியாப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றவர்.

- தீசன் -

www.tamilarangam.net

செய்து வருகின்றனர். எனவே நீங்கள்தான் ஆரியர்கள் உயர்வானவர்கள் எனும் சிந்தனையை அறியாமையால் தொடர்ந்தும் இறுக்கமாகப் பேணி வருகிறீர்கள். இது கவலைதரும் விசயம். அதைவிட மோசம் என்னெண்டால்....."

"என்ன..?" என்றேன்.

"அதாவது உங்கட சமூகத்தை நீங்களே அடக்கி ஆண்டுகொண்டு ஒருவரை ஒருவர் மதிக்காமல், சிலரைத் தீண்டத் தகாதவர்களாக நடத்திக் கொண்டு எப்படி மற்றவர்கள் உங்களைச் சமமாக மதிப்பார்கள் என்று நினைக்கலாம்? உதாரணத்திற்குச் சிங்களவர் தம்மை ஆரியர் என்று உயர்ந்தவர்களாகக் கூறிக்கொண்டு உங்களை அடக்கி வருகின்றனர். ஐரோப்பாவில் வெள்ளையர்கள் தம்மை ஆரியர்கள் எனக் காட்டிக்கொண்டு உங்களை அடக்கி வருகின்றனர். 'ஆரியர்கள் உயர்ந்தவர்கள்' என்ற சிந்தனை கொண்ட சிங்களவரோ, 'உயர்சாதி'த் தமிழர்களோ இங்கு ஐரோப்பியரின் பார்வையில் தாழ்ந்த கறுப்பர்கள்தான். அவர்களுக்கு எல்லாம் ஒன்றுதான்!

எனவே தமிழர்கள் சாதி ரீதியாக மற்றவர்களை மட்டம் தட்டிக் கொண்டு, சிங்களவர்களிடம் சம அந்தஸ்து கேட்டுப் போராடுவதோ வெள்ளையின நிறவெறியர்களிடம் சம அந்தஸ்துக் கேட்டுப் போராடுவதோ என்ன நியாயம்? உங்களை அறியாமல் உங்களிடமுள்ள 'ஆரிய சிந்தனை வக்கிரத்தை' நீங்கள் முதலில் தூக்கி எறியுங்கள். நீங்கள் நியாயபூர்வமாக நடந்துகொண்டு மற்றவர்களிடம் நியாயத்தைக் கேட்பதுதான் தர்மம்." என்றார் அந்த நோர்வேஜியர்.

"இதைக் கேட்டு எனக்கு உடுப்புகளை உரிஞ்சுவிட்ட மாதிரிப் போச்சு தம்பி. ...... அவர் சொல்ற நியாயம் நூத்துக்கு நூறு உண்மைதான். அது மட்டுமில்லை, தமிழர்கள் வெவ்வேறு சாதி எண்டு சொன்னாலும் அவர்கள் ஒரே நிறம், ஒரே கலாசாரம், ஒரே மொழி, ஒரே (கறுப்பு) நிறத் தலைமயிர் கொண்டிருக்கினம். சிங்களவர்களும் அப்பிடித்தான். ஆனால் அவையளோ தாங்கள் உயர்ந்தவை (ஆரியர்) எண்டு சொல்லுகினம். அவர்கள்கூட எங்களைவிட மொழியில், கலாசாரத்தில் வித்தியாசம் இருக்கெண்டு சொல்லலாம்.

## சின்னச் சின்ன ஆசைகள்!

பிரிட்டனில் அண்மையில் 2,000 ஹோட்டல்களில் ஒரு ஆய்வு நடத்தப் பட்டது. இந்த ஆய்வின்படி ஹோட்டல்களில் தங்க வரும் விருந்தாளிகளில் பெரும்பான்மையினர் ஹோட்டலில் ஏதாவது ஒரு பொருளைத் திருடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர் என அறியப் பட்டுள்ளது.

– சோமு –

வெள்ளையர்களின் நஈட்டுக்கு நாங்கள் இப்ப புதுசா வந்தவர்கள், எங்கட நிறம் வேற, மொழி வேற, கலாசாரம் வேற. முக்கியமாக எமக்கும் அவர்களுக்கும் இடையில நிறத்தில வேறுபாடு இருக்கு, வித்தியாசம் இருக்கு. அதாவது குறைந்தபட்சம் பௌதிக (நிற) வேறுபாடு இருக்கு. ஆனால் எங்களுக்கிடையில வித்தியாசமா சொல்ல ஒரு வேறுபாடும் இல்லை. ஆனா நாங்கள் ஒருத்தர ஒருத்தர் ஒடுக்கிக் கொண்டு மற்றவனிட்ட நியாயம் கேட்டு ஓடுறது எங்கட இரட்டைத்தன்மை இல்லையா தம்பி?" என்றார் கவிராயர்.

"ஓம் அண்ணை! 'நீ உன்னைத் திருத்திக்கொள், உலகம் தானாகத் திருந்திவிடும்' என்று ஒரு பொன்மொழி இருக்குதண்ணை" என்றேன்.


www.tamilarangam.net

# பஞ்சம்

I.
ஈரமற்ற பூமி எங்களுடையது
வெய்யிலை விழுங்குகிறது
சுடுகாற்றைச் சுவாசிக்கிறது
புழுதியாய் மலங்கழிக்கிறது
வரண்ட வயல்வெளிகளிற்
தாகமென வாய்பிளக்கிறது

II.
வெய்யில் எரித்து மீந்த செடிகளை
ஆடு மாடுகள் விழுங்கி விட்டன
எஞ்சியிருந்த ஆடுமாடுகளை
நாங்கள் விழுங்கிவிட்டோம்
நிலவுக்காக வானத்தையும்
விருந்தினர்கட்காக வீதியையும்
பார்த்துப் பழகிய நம் கண்கள்
விமானங்கட்கும் லொறிகட்குமாக
விழித்திருக்கின்றன
வீரத்தின் பேராற் போரிட்ட நாங்கள்
விழுந்து கிடக்கும் ரொட்டிக்காகப் போரிடுகிறோம்

III.
மண்டையோட்டின் ஆழத்தைத் துழாவுகிற
குழந்தையின் அயர்ந்த விழிகளையும்
விலா எலும்பின் அசைவுகளையும்




www.tamilarangam.net

ஒட்டிய கன்னங்களை விலக்கத் திணறுகிற
வாயையும்
ஏமாற்றும் வரண்ட முலைகளைப்
படமெடுத்துப்
பிச்சைப் பாத்திரங்களில் ஒட்டுங்கள்
விழுகிற சில்லறைகள்
வீசுகிற தருமவான்களின்
மனச்சாட்சிக்கு ஒத்தடமாகட்டும்
உங்கள் நாகரிகத்தின் மேம்பாட்டுக்குச்
சாட்சியமாகட்டும்
உங்கள் மனிதாபிமானத்தின்
நிரூபணமாகட்டும்
எங்கள் பெருமிதத்தின் புதைகுழிமேல்
நடப்பட்ட சிலுவையாகட்டும்

IV.

தானியங்களைக் கடலில் வீசும் தேசத்தின்
தலைவர்களிடமும் உரிமையாளர்களிடமும்
பழங்களை குழிவெட்டிப் புதைத்து
மாமிச மலைகட்கும் வெண்ணெய்க் குன்றுகட்கும்
காவல் கிடக்கும் கனவான்களிடமும்
கை கூப்பிக் கேட்கிறோம்
எங்களுக்கு
உங்கள்
தருமமும் வேண்டாம் தானியமும் வேண்டாம்
முட்டை வெண்ணெய்
பழங்கள் மாமிசம்
ஆடைகள் கம்பளங்கள்




எதுவுமே வேண்டாம்
எங்கள் வளைந்த முதுகுகள்மேற்
சவாரி விடுவோரின்
சட்டிகளிற் பிச்சையாய்
ஆயுதங்கள் போடாதீர்
அது போதும்
உங்கள் கருணை மழை வரண்டு
இன்று நாம் காய்ந்தாலும்
நாளை உயிர்த்தெழுவோம்

— சிவசேகரம் —

www.tamilarangam.net

## நேயர் விருப்பம்




அண்மையில் நோர்வே முழுவதும் உள்ள தொலைக்காட்சிப் பார்வையாளர்களிடம் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று நிகழ்த்தப் பட்டது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஏழு தலைப்புகளில் பிரித்து, அதில் பார்வையாளர்கள் எந்த அலைவரிசையை விரும்பிப் பார்க்கிறார்கள் என இந்த வாக்கெடுப்பில் அறியப்பட்டது. திரைப்படங்கள், போட்டி நிகழ்ச்சிகள் தவிர்ந்த அனைத்திலும் நோர்வேயின் தேசிய தொலைக்காட்சியையே (NRK) அனேகம் பேர் விரும்பிப் பார்க்கின்றனர்.

- தீபன் -



**Nazi-Gewalt schockiert die Deutschen**

**Ja - vi er sjokkerte!**

Sjokkert over voldsbølgen som går hånd i hånd med den økende nazismen i Tyskland. Elevene på den tyske skolen tar avstand fra fascismen; samtidig som vi med stor bekymring ser muligheten for at historien skal gjenta seg.

Det er på tide at vi våkner opp av likegyldigheten vår, og ser på realitetene.

For likegyldighet betyr samtykke, og det har Tyskland opplevd før.

**Elevene på den tyske skolen i Oslo.**

## முன்னோடி மாணவர்

அண்மையில் ஜேர்மனியில் புதிய நாஜிகளின் வன்முறைகள் பெருமளவு அதிகரித்துள்ளன. இவ்வன்முறைகள் அண்மையில் மூன்று துருக்கியர்களையும் பலியெடுத்தன. இவ்வாறான வன்முறைகள் ஒருபுறம் பெருகிவரும் அதேவேளை, இந்த வன்முறைகள் பலரது கண்டனத்திற்கும் ஆளாகியுள்ளன.

நோர்வேயில் உள்ள ஜேர்மனியப் பாடசாலை மாணவர்களும் இவ்வாறு நிகழும் வன்முறைகளுக்குத் தங்களது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். இந்த வன்முறையையிட்டுத் தாம் அதிர்ச்சி அடைவதாகப் பத்திரிகை ஒன்றில் விளம்பரமும் வெளியிட்டுள்ளனர் இந்த மாணவர்கள். தமது சொந்தச் சகோதரர்கள் தவறு செய்யும்போது தட்டிக் கேட்கும் ஜேர்மன் மாணவர்கள், பல வழிகளில் தமிழர்களுக்கு நல்ல முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள்.

- செல்வா -

www.tamilarangam.net

# இனவிடுதலையின் பெயரால் தொடரும் இனவாதப் படுகொலைகள். இந்தப் பயங்கரவாதத்தை நிறுத்த வழியில்லையா?

சமுத்திரன்.

மீண்டும் அதே செய்திதான். முஸ்லி, சிங்கள கிராமத்தவர்கள் படுகொலை. இந்தத்தடவை 160 பேர். தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய செய்திகள் உண்டா என உலகப் பத்திரிகைகளைத் தினமும் புரட்டும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பொதுவாகச் செய்திகள் இல்லையே என்று ஏமாறுவது தான் வழக்கம். இடைக்கிடை ஒரு செய்திவரும். தமிழ்த் தீவிரவாதிகள் நிராயுதபாணிகளான முஸ்லிம்களை பெண்கள் குழந்தைகள் உட்படக் கொன்று குவித்தனர். ஆம் இதுதான் இப்போது ஈழத்தமிழர் போராட்டம் பற்றிய உலகச் செய்தி. செய்தி எதுவும் இல்லாத போது ஏமாற்றமடையும் புலம்பெயர்ந்த தமிழர் இந்தச் செய்தி வரும்போது என்ன தாக்கத்திற் குள்ளாகின்றார்களோ? பலருக்கு இத்தகைய செயல்கள் அவமானத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தலாம் என்று நம்புகிறேன். அத்தகைய உணர்வுகள் ஏற்படாதவர்கள் இனவாதிகளாகவும் இனப்படுகொலைக்கு ஆதரவானவர்களாகவும் இருப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

ஆனால் இத்தகைய கொலைகள் தற்செயலான அல்லது தனிப்பட்ட சம்பவங்கள் அல்ல. பொதுவாகத் தெளிவான விடுதலை அரசியல் நோக்குடன் முன்னேறும் ஒரு போராட்டத்தில் சில வேளை ஓரிரு தனிநபர் எடுக்கும் தவறான முடிவுகளினால் எற்படும் விதிவிலக்கான சம்பவங்கள் அல்ல இக்கொலைகள். அப்படியாயிருந்தால் பொறுப்புள்ள ஒரு விடுதலை இயக்கம் தவறை ஏற்றுக் கொண்டு கொலைகளுக்குப் பொறுப்பானவர்களுக்குத் தண்டனை வழங்கி அக்கொலைகள் ஏற்படுத்திய தப்பபிப்பிராயங்களைப் போக்க வேண்டிய சகல அரசியல் நடவடிக்கைகளையும் எடுத்திருக்கும். ஆனால் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் இதுவரை அத்தகையதொரு நடைமுறை ஒரு தடவையாயினும் இடம்பெறவில்லை. அதற்கு மாறாக இத்தகைய கொலைகளுக்குத் தாம் பொறுப்பில்லையென அறிவிப்பதே விடுதலைப் புலிகளினதும் மற்றைய இயக்கங்களினதும் பொது மரபாகிவிட்டது. இதை யாராவது நம்புவார்களா என்பதைக்கூட அவர்கள் மனதில் வைப்பதில்லை போலிருக்கிறது. வடக்குக் கிழக்கு முஸ்லிம்களை அவர்களின் பாரம்பரிய வாழிடங்களிலிருந்து விரட்டியவர்கள் விடுதலைப்புலிகள் என்பது உலகறிந்த உண்மை. யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப்பட்ட அநாகரீகச் சம்பவங்கள் அனைத்தும் பலரால் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. இத்தகைய ஒரு இனவாதப் பலாத்காரத்திற்குத் தம்மை தமிழ் விடுதலைப்போராளிகள் எனச் சொல்வோர் பொறுப்பாய் இருந்திருக்கின்றனர். முஸ்லிம்கள் சிலர் சிங்கள இராணுவத்துடன் ஒத்துழைக்கின்றனர் என்றும் முஸ்லிம் ஊர்காவலர்கள் (Home guards)

www.tamilarangam.net

தமிழர்களைப் படுகொலை செய்கின்றார்கள் என்றும் காரணங்கள் காட்டித் தமிழ் இனவாதப் பலாத்காரம் நியாயப்படுத்தப்படுகிறது.

Home guards அரசினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வன்செயலர் கூட்டம் என்பது உண்மை. ஆனால் தம்மை விடுதலைவீரர் எனச் சொல்லிக் கொள்பவர்களும் Home guards மாதிரியே நடந்து கொண்டால் விடுதலைப் போராட்டத்திற்கும் அரச பயங்கரவாதத்திற்கும் என்ன வித்தியாசம்?

தமிழ் இனவாத வன்செயல்களுக்கு ஆகக்குறைந்தது ஏழு வருட வரலாறுண்டு. 1985 மே 14ஆம் திகதி அநுரதபுரவில் ஏறக்குறைய 150 சிங்களப் பொதுமக்கள் தமிழ்த் தீவிரவாதிகளால் கொலை செய்யப் பட்டனர். இந்தச் செய்தி வெளிவந்த சமயம் நான் சென்னையிலிருந்தேன். அப்போதும் எல்லா இயக்கங்களும் தமக்கும் இச்சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்றும், இவை போன்ற அர்த்தமற்ற கொலைகளைத் தாம் கண்டிப்பதாகவும் தெரிவித்தன. அப்படியென்றால் அநுரதபுரக் கொலைகளை ஒரு தமிழ் இயக்கமும் செய்யவில்லை. அதை யார் செய்திருப்பார்கள் என்று இயக்கங்கள் அலட்டிக் கொள்ளவில்லை. அதேநேரம் அநுரதபுரக் கொலைகள் சிங்கள மனோநிலையை எப்படித் தாக்கியிருக்கும் என்பது பற்றி; இது சிங்களத் தலைமையைக் குறிப்பாக அப்போதைய ஜனாதிபதி ஜயவர்தனாவை எப்படிக் கலக்கியிருக்கும் என்பது பற்றிய விளக்கங்களும், ஹேஷ்யங்களும் சென்னையில் தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளில் முக்கிய இடத்தைப் பிடித்தன. அநுரதபுரச் சம்பவம் தமிழ் விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் ஒரு ஆபத்தான அறிகுறி என்பதைப் பற்றிய விவாதங்களுக்கு இடம் கிடைக்கவில்லை. இத்தகைய விவாதங்கள்பிரதான இயக்கங்களுக்கு வெளியே இயங்க முயற்சித்த சில சிறு குழுக்களுக்கிடையே தான் இடம்பெற்றன. அந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவின் தேசிய பத்திரிகைகளில் வெளிவந்த விடயங்களை வைத்துப் பார்த்தபோது அநுராதபுரச் சம்பவம் அன்றைய இந்திய வெளிவிவகாரப் பிரிவினரையும் திருப்திப் படுத்தியிருக்கலாம் என்ற அபிப்பிராயம் பிறந்தது.

## எல்லாம் வல்ல ஆண்டவரின் பெயரால்......

'முன்னாள்' சோவியத் யூனியனில் மதத் தலைவர்கள் என்ற பெயரில் இருந்த பலர் உண்மையில் சோவியத்தின் உளவு அமைப்பான கே.ஜி.பியின் உளவாளிகளே என அண்மையில் வெளியான நூல் ஒன்றில் (Naar ett lem lider - Lasse Tredal) தகவல்கள் வெளியாகியுள்ளன.

வான்கூவரில் நிகழ்ந்த உலக ரீதியான மதத் தலைவர்களது மாநாட்டுக்கு 47 கேஜிபி உளவாளிகள் சென்றிருந்தனர் என இந்நூல் தெரிவிக்கிறது.

- உலகன் -

1985 மே மாதத்தில் அநுரதபுரவில் வெடித்த அந்தச் சன்னங்கள் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலம் பற்றிய ஒரு அபாய அறிவிப்பாக இருந்ததைப் பலர் அறியவில்லைப் போலும். இராணுவவாதமும் குறுகிய தமிழ் தேசியவாதமும் (தமிழ் இனவாதமும்) இணைந்த ஒரு கருத்தமைவின் வருகையை அறிவித்தன அத்தோட்டாக்கள். குறுகிய தமிழ்த் தேசியவாதம் ஏற்கனவே பல தசாப்தங்களாக பாராளுமன்ற அரசியல் தேவைகளுக்காக வளர்த்தெடுக்கப் பட்டிருந்தது. இந்தப் பழைய குறுகிய

www.tamilarangam.net

# ස්වාධීන සාහිත්‍ය උළෙල '92
# சுதந்திர இலக்கிய விழா
# Independent Literary Festival

- சித்திரகுப்தன் -

இலங்கையில் 1957 முதல் சாகித்திய மண்டலம் சிறந்த இலக்கியங்களுக்குப் பரிசுகள் வழங்கி வருகிறது. இப்பரிசளிப்புகளைக் கூர்ந்து கவனிக்கும் ஒருவர் இவ்வாறான பரிசளிப்புகள், அரசியல் லாபம் கருதியே (பெரும்பாலும்) வழங்கப் பட்டு வந்ததை அறியமுடியும். அதைவிடவும் அரசின் பரிசளிப்பானது கலைஞர்களதும் எழுத்தாளர்களதும் சுதந்திரத்தில் நேரடியான தலையிடலாகவும் இருந்தது.

இந்த நிலையை மாற்ற, இலங்கையில் தமிழ் சிங்களக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் இணைந்த புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. இந்த அமைப்பு அண்மையில் (ஒக்ரோபர் 9,10) கொழும்பில் சுதந்திர இலக்கிய விழா ஒன்றை நடத்தியது. இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழாவில் தமிழிலும் சிங்களத்திலும் வெளியான சிறந்த படைப்பிலக்கிய நூல்களுக்குப் பரிசுகளும் பாராட்டுகளும் வழங்கப் பட்டன. தமிழில் சிறந்த கவிதை நூலாக சோலைக்கிளியின் *காகம் கலைத்த கனவு* தெரிவானது. சுவடுகள் பதிப்பகம் தமிழகத்தில் வெளியிட்ட இந்த நூலுக்காக சோலைக்கிளிக்கு விருதும் பணப்பரிசிலும் வழங்கப் பட்டன.

சுதந்திர இலக்கிய விழா அமைப்புக் குழுவின் தொடர்புகளுக்கு: அமைப்புக் குழு, 20 - எலியட் இடம், கொழும்பு 8. தொலைபேசி: 685404

தேசியவாதத்துடன் புதிதாகத் தோன்றிவரும் இராணுவவாதமும் இணைவதைக் குறியீட்டு முழக்கியது அநுராதபுரச் சம்பவம்.

இராணுவவாதமும் தமிழ் இனவாதமும் இணைந்த ஒரு கருத்தமைவே இன்று தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஆளும் கருததமைவு என்பதை இன்று வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் முஸ்லீம் மக்கள் மீதான பலாத்காரம் தெளிவாகக் காட்டுகிறது. தமிழ்த் தேசியவாதம் தனது எதிரிடையான சிங்களத் தேசியவாதத்தின் பிரதிபிம்பம் போலாகிவிட்டது. சிங்கள இனவாதமும் பலாத்கார இன அழிப்பும் இணைந்ததுபோல் இன்று தமிழ் இனவாதம் அநாகரீகப் பாதையில் மிக தூரம் சென்றுவிட்டது. இதனால் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை குறைந்துவிடவில்லை. தமிழ் ஈழமெனக் கருதப்படும் பிரதேசத்தின் ஒருங்கிணைப்பு உறுதிப்படுத்தப் படவில்லை. தமிழரின் உரிமைப் போராட்டத்தின் நியாயப்பாடு பலம் பெற்றுவிடவில்லை. நமது உரிமைகளுக்கு சர்வதேச அங்கீகாரம் பெருகிடவில்லை. உண்மையில் இவை எல்லாவற்றிலும் பாதகமான விளைவுகளையே இன்று ஈழத்தமிழர் அனுபவிக்கின்றனர்.

சிங்கள பேரினவாத அரசு தமிழ் மக்களுக்கு இழைத்துவரும் ககாடுமைகளை தமிழ் ஈழத்தின் விடுதலையின் பெயரால் அங்கு வாழும் முஸ்லிம் மக்கள்மீது கொட்டுகிறார்கள் தமிழ் 'விடுதலைப் போராளிகள்'. தமிழ் ஈழத்தில் நடைபெறுவது விடுதலைப் போராட்டமா அல்லது இலங்கை அரசு -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் புலிகள் எனும் இரண்டு இராணுவ அமைப்புகளுக்கிடையே ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைக் கைப்பற்ற இடம்பெறும் யுத்தமா? என்ற கேள்வி நியாயமானதே.

தமிழ் மக்களிடையே ஒருபகுதியினர் முஸ்லிம் மக்கள் மீதான வன்செயல்களை நியாயப் படுத்துகின்றனர். இவர்கள் பச்சை இனவாதிகள். சிங்கள இனவாதப் பிரச்சாரம் எப்படிச் சாதாரண சிங்கள மக்களை இனவாதிகளாக்கியதோ அதேபோல் தமிழ் இனவாதப் பிரச்சாரங்கள் பெருந்தொகையான சாதாரண தமிழர்களை - அதாவது வன்செயல்களில் ஈடுபடாதவர்களை - குறுகிய தமிழ் இனவாதிகளாக்கிவிட்டன. இதுவரையிலான விடுதலைப் போராட்டம் ஈழத்தமிழ் சமுதாயத்தில் இனவாத எதிர்ப்பு உணர்வு, ஜனநாயக உரிமைகள் பற்றிய உணர்வு, மனிதத்பூவ விழுமியங்கள் பற்றிய உணர்வு ஆகியவற்றை வளர்ப்பதற்குப் பதிலாக மழுங்கடிக்கவும் தமிழ் இனவாத உணர்வை ஆழமாக்கவுமே உதவியுள்ளது. விடுதலை விழுமியங்களின் மறுமலர்ச்சியைச் சிதைக்கும் அதிகாரவாதத்தின் சின்னங்களாகப் போராளிகள் கையிலுள்ள துப்பாக்கிகள் மாறிவிட்டன. இனவிடுதலையின் பெயரால் முஸ்லிம் மக்களைத் தாக்கும் அதே அமைப்பு பல தமிழ் சிந்தனையாளர்களையும் எழுத்தாளர்களையும் சிறையிலடைத்துள்ளது. மற்றைய தமிழ் அமைப்புகளைத் தடை செய்துள்ளது. நம்பிக்கை தரும் வகையில் பல தமிழர்கள் இந்த நிலைமையை விமர்சிக்கவும் எதிர்க்கவும் முன்வருகிறார்கள். தமிழ் ஈழத்தில் இதைச் செய்யும் சுதந்திரம் கிடையாது. ஆயினும் அங்குள்ள பல தமிழர்கள் முஸ்லிம்களுடனான தமது ஒருமைப்பாட்டைப் பல வழிகளில் காட்டிவருகின்றனர். துரதிர்ஷ்ட வசமாக புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஈழத்தில் இராணுவவாதமும் தமிழ் இனவாதமும் இணைந்த இன்றைய ஆளும் கருத்தமைவிற்கும் நடைமுறைக்கும் எதிரான செயல்பாடுகள் பலம் பெறவில்லை. இன்றைய முக்கிய அரசியல் தேவைகளில் ஒன்று இக்கருத்தமைவு பற்றிய வரலாற்று ரீதியான ஆய்வும் விமர்சனமும் ஆகும். இதைச் செய்தற்குரிய கருத்துப் பரிமாறல் தளத்தை புலம்பெயர்ந்த தமிழ்ச் சஞ்சிகைகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். இத்தகைய ஒரு விவாதம் நம்மைச் சில அடிப்படைக் கேள்விகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். தமிழ் ஈழம் என்பது என்ன? ஈழத்தமிழரின் விடுதலையின் உள்ளடக்கம் என்ன? இதுவரையிலான விடுதலைப் போராட்டம் நம்மை எங்கே எடுத்துச் சென்றுள்ளது? குறுகிய தமிழ் தேசியவாதத்திதல் இருந்து பரந்த மக்கள் ஜனநாயக விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய அரசியல் திட்டத்தை நோக்கிச் செல்வதற்கு என்ன செய்யவேண்டும்? இப்படிப் பல கேள்விகள். ●

- ஒக்டோபர்'92 -
கியோட்டோ, ஜப்பான்.

## நிகழ்வுகள்

* விடுதலைப் புலிகள் வருடாந்தம் நடாத்தும் மாவீரர் தின விழா கலைநிகழ்ச்சிகளுடன் ஒஸ்லோவில் நிகழ்ந்தது.

* நோர்வே அரசால் நாட்டைவிட்டு வெளியேற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சில தமிழர்கள், வெவ்வேறு முயற்சிகளால் தற்காலிகமாக இங்கு தங்க அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

- செய்தியாளன் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## இப்படியும் நிகழ்ந்திருக்கலாமோ அது?

வ.ம.அருணன்

(சுவடுகள்'37 இதழில் வ.ஐ.ச.ஜெயபாலன் எழுதிய 'கொப்பேகடுவவின் மாரணமும் இலங்கையின் இன மோதல்களும்' என்ற கட்டுரையின் சில அம்சங்கள் தொடர்பான ஒரு பின் விசாரணை இந்தக் கட்டுரை - கட்டுரையாசிரியர்)

அராலித் துறைமுகப் பகுதியில் ஆவணிமாதம் எட்டாம் திகதி காலை இலங்கை இராணுவத் தலைமை அதிகாரிகள் கொல்லப் பட்டனர். இதற்குத் தாமே காரணமெனப் புலிகள் உரிமை கோரியதும், தங்கள் கட்டுப்பாட்டிற்குள் தீவகம் வரமுன் வைக்கப்பட்ட கண்ணிவெடியே விபத்திற்குக் காரணம் என அரசு அறிவித்தமையும் யாவரும் அறிந்ததே.

ஆனால் இத்தாக்குதல் நிகழ்ந்தவிதம், அப்பிரதேசத்தில் ராணுவ நிலைகள், இராணுவத்துடன் உறவு வைத்திருக்கும் அமைப்புகளின் அசைவுகள், விபத்து நடந்த பிரதேசத்தின் புவியியல் அமைப்பு, கொப்பேகடுவவுக்கும் அரச உயர் மட்டத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் போன்ற காரணிகளை வைத்து ஆராயும்போது இக்கொலைகளைச் செய்யப் புலிகளைவிட அரசு, மற்றும் தீவகத்தில் உள்ள அரசசார்புத் தமிழ்க் குழுக்களுக்குத்தான் கூடுதலான வாய்ப்பு இருந்திருக்கிறது/ செய்திருக்கின்றனர் என்பது புலனாகும்.

முதலில், அப்பிரதேசத்தின் புவியியல் நிலையை நோக்குவோமாயின், சரவணையில் (நாய்க்குட்டி வாய்க்காலில்) இருந்து அல்லைப்பிட்டிவரை பரந்த வெளியுடன் ஆங்காங்கே சில பூவரச மரங்களும் ஈச்சை மரங்களும் இருந்தன. (ஈச்சை மரங்கள் இராணுவத்தினர் மண்டைதீவு அல்லைப்பிட்டி வழியே கோட்டை வெளியேற்றத்தின் பின்னர் ஊர்காவற்றுறையைத் தேடி நகர்ந்தபோதும், கண்ணிவெடி அழிப்பின் போதும் அழிக்கப்பட்டு விட்டன)

இவ்வெளி கோடையில் வரண்டு புழுதி நிறைந்தும், மாரியில் கடற்பெருக்கால் நீர் நிறைந்தும் இருக்கும். கடற்கரையை அண்டி இருந்தாலும் கடற்கரையில் காணப்படும் ஊரிமணல் தன்மைக்கு மாறாக உவர்க்களிமண் கொண்டது இப்பகுதி.

தீவுப்பகுதியை முழுமையாக நோக்கினால் மூன்று பக்கங்களிலும் ஆழமான

www.tamilarangam.net

கடற்பரப்பாலும், அராலிப் பகுதியில் ஆழமற்ற கடற்பரப்புடன் (புலிகள் நிலைகொண்டுள்ள) யாழ் குடாநாட்டிற்கு மிக அண்மையிலும் அமைந்துள்ளது.

எனவே தீவுப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர்மீது புலிகள் தாக்குதல் நிகழ்த்தக் கட்டாயமாக அராலிப் பகுதியூடாகவே வரவேண்டியுள்ளது.

இதையுணர்ந்து இராணுத்தினரும் இப்பகுதியைக் கண்காணிக்கும் வகையிலேயே இராணுவநிலைகளை ஏற்படுத்தியுள்ளனர். காரைநகர் கடற்படைத் தளத்தைத் தலைமையாகக் கொண்டு, ஊர்காவற்றுறை நகர்ப் பகுதியில் ஆரம்பித்து அல்லைப்பிட்டிவரை ஆறு ராணுவ நிலைகளையும், மறுபக்கம் தீவின் வெளிப்புறமாக மூன்று இராணுவ நிலைகளையும் நடுவில் இரு நிலைகளையும் கொண்டுள்ளனர்.

மேற்கூறிய இராணுவநிலைகளுள், தாக்குதல் நிகழ்ந்த பிரதேசத்தைக் கண்காணிக்கும் விதமாக ஐந்து ராணுவநிலைகள் உள்ளன. (தம்பாட்டி முனங்கு, சரவணை நாய்க்குட்டி வாய்க்கால், அராலிச் சந்தி, மண்கும்பான் பிள்ளையார் கோயில்)

இவற்றுள் தம்பாட்டிமுனங்கு முகாமில் கடற்படையினரும் இராணுவமும் இணைந்து செயற்படுவதுடன், இரவில் கடலில் வெள்ளம் உயர்ந்திருக்கும் வேளைகளில் அராலிக்கடற் பகுதிகளில் தம் சிறு படகுகளில் ரோந்து செய்வதில் ஈடுபட்டிருந்தனர் (என்பது குறிப்பிடத் தக்கது).

(இவ்வளவு பாதுகாப்பான பகுதி என்பதாலேயே கொப்பேகடுவ மற்றும் அதிகாரிகள் இராணுவ தொடர்வண்டிகள் படைகள் சகிதம் அராலிப் பகுதிக்குச் செல்லாமல், சாதாரணமாகத் தமது ராணுவ முகாமினுள் நடமாடுவது போல மேலதிக பாதுகாப்பின்றிச் சென்றனர் என்பது புலனாகிறது.)

மேற்குறிப்பிட்ட இராணுவ நிலைகளின் அசைவுகள், தாக்குதல்/ விபத்து நிகழ்ந்த அராலிவெளிப் பகுதியில் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. அத்துடன் ஊர்காவற்றுறை - அல்லைப்பிட்டி முகாம்களுக்கிடையில் இரு ராணுவ வாகனங்கள் (வடக்கு றோட் ஊடாக) ரோந்து செல்வதும் வழமை.


அடுத்து குண்டு வெடித்த இடத்தில் இருந்து கிட்டத்தட்ட 250மீற்றர் தூரத்தில் அராலிச் சந்தியில் ராணுவ முகாம் காணப்படுகிறது. இது அல்லைப்பிட்டி மண்கும்பான் பகுதி மக்களின் ஊர்காவற்றுறை நோக்கிய போக்குவரத்தைக் கண்காணிப்பதாகவும், வேலணை வங்களாவடி முகாமின் சென்றியாகவும், முக்கியமாக அராலித் துறைமுகப் பகுதியைக் கண்காணித்தும் வருகிறது.

இவ்வாறு, பலத்த ராணுவ கடற்படைக் கண்காணிப்பிலுள்ள பகுதியில், அதுவும் இராணுவக் கண்காணிப்பு நிலையத்தில் இருந்து 250மீற்றர் தூரத்தில் இறுகிய களிமண் பாங்கான நிலத்தில் கண்ணிவெடி தாட்டு வைத்தல் இலகுவான காரியமல்ல.

புலிகள் எவ்வளவுதான் வீரதீர உயிர்த் தியாகிகளாக இருந்தாலும், இலங்கை ராணுவத்தினரை ஆகிலும் குறைத்து மதிப்பிடுவது, அதாவது காக்கா குருவி பறந்தாலும் எவ்வேளையிலும் காணக்கூடியதாக உள்ள ஓர் பரந்த வெளியில், அதுவும் முகாமில் இருந்து 250மீ தூரத்தில், வரண்ட களிமண் பகுதியில் புலிகள் வந்து சாவகாசமாகக் கிடங்கு வெட்டிக் கண்ணிவெடி வைத்துவிட்டுச் செல்லுமளவு கண்காணிக்காமல் இருப்பார்கள் எனக் கூறத்துணிவது வெறும் பித்தலாட்டமாகும்.

மேலும் அரச தரப்பில் சொல்லப்படுவது போல இராணுவக் கட்டுப்பாட்டில் தீவுப்பகுதி வரமுன் தாக்கப்பட்ட கண்ணிவெடி என்றால் சுமார் இருவருடங்களாக அப்பகுதியில் ராணுவத்தினர் வாகனசகிதம் போக்குவரத்து மேற்கொள்கையில் வெடித்திருக்க வேண்டுமே. அதைவிட்டாலும் பலதடவை ராணுவத்தினர் கண்ணிவெடி அழிப்பு நடவடிக்கையை மேற்கொண்ட போது வெடிக்காமல் எப்படித் தப்பியது?

இந்நிகழ்வு தொடர்பாக ஆவணி14இல் பத்திரிகையாளர் மாநாட்டில் வேறு ஒரு காரணமும் அரசால் கூறப்பட்டது. அ-து, றோட்டோரம் புல்லுக்குள் மறைந்து கிடந்த கண்ணிவெடியே வெடித்ததென்று. ஆனால் குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரு கண்ணிவெடி மறைந்து கிடக்கக்கூடிய அளவு புல் வளர்ச்சி எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. கோடை காலமாதலால் அந்நிலத்தில் நிலமட்டத்தில் மட்டுமே வளரும் அறுகுப் புல்கூட காய்ந்து கருகி வெறும் புழுதி பறந்திருக்கும்.


யாழ்ப்பாணம்
ஊர்காவத்துறை
பூவரசம் மரம்
கண்ணிவெடி வெடித்த இடம்

www.tamilarangam.net

அடுத்து சம்பவதினம் கண்ணிவெடிப்பிற்கு முன் நிகழ்ந்தவைகளை ஆராயவேண்டும். ஆவணி7ஆம் திகதி வெள்ளியன்று காரைநகர் கடற்படை முகாமில் கொப்பேகடுவ மற்றும் உயரதிகாரிகள் யாழ். படையெடுப்பு பற்றிக் கூட்டம் நடத்தினர். அடுத்தநாள் (8, சனி) காலை காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து படகு மூலம் ஊர்காவற்றுறை சென்று அங்கிருந்து லாண்ட்றோவர் வாகனங்களில் தமது திட்டத்தின் மையமான அராலித்துறையை நோக்கிப் புறப்பட்டனர்.

இவர்களது பயணப்பாதையைப் பரிசோதித்துவர ஊர்காவற்றுறை முகாமில் இருந்து அனுப்பப்பட்ட இராணுவ வாகனம் அராலித்துறை வரை சென்று திரும்புகையில், அதிகாரிகளின் வாகனங்களை சரவணைச் சந்திக்கு முன்னுள்ள 11ஆம் கட்டையடியில் கடந்தது.

அராலிச்சந்தியை அடைந்த அதிகாரிகள், அங்கிருந்து வாகனங்களை அராலித் துறைமுகத்திற்குச் செல்லும் பாதையில் இறக்கினர். இப்பாதை அழிந்த நிலையிலுள்ளது. இது பல வருடகாலம் பயன்படுத்தப் படாமல் விடப்பட்டு, 1986இல் தீவுப்பகுதி மக்கள் பண்ணைவழியே யாழ்ப்பாணம் செல்வது தடைப்பட்டதால் மீண்டும் பயன்படுத்தப்பட்டு வந்தது. அப்போது இப்பாதை அழிந்த நிலையில் இருந்ததாலும், வாகன இருவழிப் போக்குவரத்துக்கு அகலம் குறைந்ததாக இருந்ததாலும் வாகனங்கள் வீதியின் இடப்புறமாகக் கீழே இறக்கிச் செலுத்தப் பட்டன. பின்பு மண்போட்டுத் திருத்தப்பட்ட போதிலும் இவ்வீதி கடற்பெருக்காலும் வெள்ளத்தினாலும் பழைய நிலையையே அடைந்திருந்தது. (1987இன்பின் மக்கள் இதைப் பாவிக்கவில்லை)

இப்பாதையில் இறங்கி, பாதையின் ஆரம்பத்தில் வாகனங்களைவிட்டு இறங்கிய அதிகாரிகள் மற்ற இரு வாகனங்களையும் விட்டுவிட்டு ஒரு வாகனத்தில் ஏறினர். அவ்வாகனத்தில் கொப்பேகடுவ உட்படப் பத்து அதிகாரிகள் ஏறினர். இருவருக்கு இடம் இன்மையால் அவர்களை நிறுத்தப்பட்ட வாகனங்களில் விட்டுவிட்டு அராலிக் கடற்கரைத் துறைமுகம் நோக்கிச் சென்றனர்.

வாகனத்தை விமலரட்ன சிதைவுற்ற பாதையால் ஓட்டிச் சென்றார். வீதியின் முடிவுவரை சென்று அங்கு சுமார் அரைமணிவரை தமது ராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படப் போகும் இடங்களைப் பார்வையிட்ட பின் திரும்பி வருகையில், வீதியின் இடப்புறமாக உள்ள தற்காலிக வீதியில் விமலரட்ண வாகனத்தை ஓட்டிவந்தார். வாகனம் மீண்டும் பிரதான வீதியில் ஏறும்போது, அ-து தற்காலிக வீதியுடன் பிரதான வீதி இணையும் இடத்தில் வாகனம் ஏறுகையில் கண்ணிவெடி வெடித்தது. (இவ்விடயங்கள், தரவுகளை இது தொடர்பான செய்தி வெளியிட்ட பத்திரிகைகள் மூலமும் அரசினால் வெளியிடப்பட்ட செய்திகள் மூலமும் தெரிந்துகொள்ளக் கூடியதாயுள்ளது)

## மரணம்

– உமாபதி

நேற்று காலை அது நிகழ்ந்தது
ஒரு மரணம்.
எனக்கு அம்மா. அவனுக்கு
அத்தை. அத்தையின்
தம்பிக்கு அக்கா.
இன்னொருவனுக்குச்
சித்தி. மேலும் ஒரு வாண்டுக்குப்
பாட்டி. பாட்டிக்குப் பேத்தி

யாரோவுக்கு யாரோ
இந்த மரண அலை
ஓய்ந்த பின்னர்

தெரு வளைவில்லாமல்
நேரே சென்றது.
மரங்கள் நிழலைத் தந்தன.
ஊர்க்குருவி ஒழுங்காய்
கத்திற்று.

எனக்கும் எல்லோருக்கும்
முடி பின்னமில்லாமல் வளர்ந்தது
கொஞ்சம் நரையூடே.

எதுவரை?
இன்னொரு மரணம் வரை
இந்த முறை
எனக்கு மாமா
அவனுக்கு
அவளுக்கு

ஒரு குலுங்கல் அதிர்ந்து
ஓய்ந்த பின்னர்
எல்லாம் அதனதன் நெறியில்
தப்பிதமில்லாமல்.

www.tamilarangam.net

இத்தரவுகளை வைத்துப் பார்க்கையில், கொப்பேகடுவ மற்றும் அதிகாரிகளின் அராலி வருகை தொடர்பாக நன்கு தெரிந்தவர்களாலேயே இக்கண்ணிவெடி வைக்கப்பட்டிருக்க வேண்டும். இரு (பிரதான, தற்காலிக) வீதிகள் இணையும் இடத்தில் வைக்கப் பட்டுள்ளதால் எந்த வீதியால் செல்லும்போதும் கண்ணிவெடி வெடிக்க வைக்கப்படச் சாத்தியம் உள்ளது. ஆனால் அதிகாரிகளின் பாதையைப் பரிசோதிக்கச் சென்ற வாகனம் பரிசோதனைக்குச் செல்கையிலும் வருகையிலும் எவ்வாறு தப்பித்தது? ஏன், பரிசோதனைக்குச் சென்ற வாகன வீரர்களாலேயே கண்ணிவெடி வைக்கப் பட்டிருக்கக் கூடாதா?

கொப்பேகடுவ - பிரேமதாசாவின் இராணுவ அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான கருத்து முரண்பாடு நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. கொப்பேகடுவவின் இராணுவ செயற் திட்டங்கள், பிரேமாவின் பேச்சுவார்த்தைகள், தமிழ்க் குழுக்களின் வேண்டுகோளுக்கு விட்டுக் கொடுத்தல், தனது அரசியல் லாபத்திற்கு ராணுவத்தைப் பயன்படுத்தல் போன்ற காரணங்களால் தடைப்பட்டுவந்தது. அத்துடன் கொப்பேகடுவவும் பிரேமதாசாவிற்கு அடங்காத ஒருவராகவும், அரசியலில் சுதந்திரக் கட்சி சார்பாகவும் இருந்தார். பிரேமதாசா தனது நலனுக்கு இடையூறானவர்களை ஒழித்துக் கட்டுவதில் புலிகளுக்கு நிகரானவர். ஆகவே பிரேமதாசாவுடனான கருத்து முரண்பாட்டால் கொப்பேகடுவவும் மற்றும் உயரதிகாரிகளும் இந்த விபத்திற்குப் பலியாக்கப் பட்டிருக்க வேண்டும். (அரசு செய்யும் கொலைகளையும் தான் எடுத்த பலி எனப் புலி உரிமை கோருவதென்பது ஒன்றும் புதிதல்லவே. உதாரணமாகப் பிரேமதாசாவின் பணிப்பின்பேரில் கொல்லப்பட்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண கொலையைப் புலிகள் தாம் செய்யவில்லை எனப் புலிகள் ஆரம்பத்தில் மறுத்தாலும், பிபிசி பேட்டியில் பாலசிங்கம் தாங்களே செய்ததாகச் சொல்ல முயன்றதும், நிதி வசூலிக்க வெளிநாடுகளில் தாமே செய்தனர் எனத் தம்பட்டமடிப்பதும் அனைவரும் அறிந்ததே) அத்துடன் கொப்பேகடுவவின் காரைநகர் முகாம் வருகை ஒரு திடீர் வருகையாகும். இராணுவ மேல் மட்டத்திற்கும் பாதுகாப்பமைச்சிற்குமே தெரிந்திருக்கக் கூடிய விடயம். இவ்விடயம் புலிகளுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆனால் தீவகத்தில் நிலைகொண்டுள்ள ராணுவத்தினருக்கு அவர் வருகையின்பின் தெரியவந்திருக்கலாம். ஆகவே விடயமறிந்த மேலதிகாரிகளோ அல்லது இறந்துபோன ஒருவரின் தலைமையிலோதான் இக் கண்ணிவெடித் திட்டம் தீட்டப்பட்டிருக்க வேண்டும். பிரேமதாசாவின் தலையீட்டால் இது நடந்திருக்கலாம் என்பதற்கு கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகளில் அவர் பங்குபற்றாமையும், அது தொடர்பாக அவர் நடந்துகொண்ட முறையும், கொப்பேகடுவவுடன் இவருக்கிருந்த கருத்து முரண்பாடுகளுமே காரணமாகும். இதுபற்றி ஆராய்ந்த சிங்களப் பத்திரிகைகளும் இககருத்தையே தெரிவிக்கின்றன. →

## பொறுமை

இரு மடங்கு ஆகுமென்று
'இந்திர விகாஸ்' வாங்கி வைத்து
அஞ்சு வருஷம் காத்திருக்கும்
பொறுமை இருந் தென்ன பயன்
புறநகரில் பிளாட் வாங்கி
போட்டுவிட்டுப் பொறுமையுடன்
விலையுயரக் காத்திருக்கும்
விபரமிருந் தென்ன பயன்
அடுத்தமாதம் பிறக்கப் போகும்
குழந்தைக்காய் நர்ஸரியில்
இப்போதே இடம் பதியும்
எண்ணமிருந் தென்ன யன்
ஓவர் பிரிட்ஜ் ஏறிப்போகும்
ஒரு நிமிடப் பொறுமை மட்டும்
இருந்திருந்தால் இன்னுயிரை
இழந்திருப்பாயோ சொல்
எலக்ட்ரிக் ரயில் மோதி.

- அமிழ்தன் -
நன்றி: கணையாழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்து, இப்பகுதியில் ராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வருபவர்கள் ஈபிடிபி உறுப்பினர்களாவர். இவர்கள் இக்கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டிருக்கவும் வாய்ப்புகள் உள்ளன. இவர்கள் தீவகத்தில் அனைத்து ராணுவ நிலைகளிலும் ராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். ஊர்காவற்றுறை, சரவணை, வங்களாவடி, அராலிச்சந்தி, அல்லைப்பிட்டி போன்ற விபத்துப் பிரதேசத்தில் இராணுவ முகாம்களில் வசித்தும் வருகின்றனர். இவர்களது தீவகத் தலைமையகம் வேலணை வங்களாவடிச் சந்தியில் உள்ளது. இதனால் அராலிப்பகுதியில் இவர்களது சரளமான நடமாட்டம் உண்டு. அத்துடன் இவர்கள் அராலிச்சந்தி ராணுவ முகாமில் இருந்து வருவதால் இவர்கள் கண்ணிவெடி வைக்கச் சாதகமான சூழ்நிலை உள்ளது.

மேலும் இத்தாக்குதல் நிகழ்ந்த பின் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் 'ஈபிடிபி செய்ய வாய்ப்பில்லையா?' என்ற பத்திரிகையாளரின் கேள்விக்கு 'ஈபிடிபியினர் வேலணையில்தான் உள்ளனர். அவர்கள் அப்பகுதிக்குச் செல்வதில்லை' என ராணுவப் பேச்சாளர் பதிலளித்துள்ளார்.

வேலணையில் இருந்து அராலிப் பகுதியானது வெகுதூரத்தில் இல்லை. கிட்டத்தட்ட 2கி.மீ.களே. அத்துடன் அராலி முகாம் பற்றியும் அப்பிரதேசம் பற்றியும் பத்திரிகையாளர்களுக்குத் தெரியாததாலும் அரச தரப்பில் பலவிடயங்கள் இருட்டடிப்புச் செய்யப் பட்டுள்ளன. ஆனால் சில பத்திரிகைகள் ஈபிடிபி செய்திருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்துள்ளன.

மேலும் கொப்பேகடுவவுடனும், ராணுவ மேல்மட்டத்துடனும் யாழ்ப்பாணத்தைத் தேடியழிக்கும் ராணுவ நடவடிக்கை சம்பந்தமாக ஈபிடிபி சந்தித்து உரையாடியது. அச்சந்திப்பின் பின்னர், யாழ்ப்பாணத்தில் ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் போது, ராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் வரும் பகுதியில் ஈபிடிபி புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட ராணுவ உயர்மட்டம் சம்மதம் தெரிவித்தது.

ஆகவே ஈபிடிபியினர் ராணுவ நடவடிக்கைகளால் ஏற்படப் போகும் அனர்த்தங்களை உணர்ந்து அதைத் தற்காலிகமாகவேனும் தடுக்க இக்கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம். அவர்கள் எதிரியின் பக்கம் சார்ந்து நின்றாலும், அவர்களும் போராளிகளே. ஈழப்போராட்டத்தில் நிகழ்ந்த சனநாயக மறுப்பாலும், தலைமைகளின் தவறான வழிநடத்தலாலும் பாதை மாறியவர்களே. இன்று 'சாட்சிக் காரனின் காலில் விழுவதைவிட சண்டைக்காரனின் காலில் விழுவதே மேல்' எனும் நிலையில் எதிரியுடன் உறவாடுகின்றனர். இவர்கள் மக்களை நேசித்ததால்தான் போராட வந்தார்கள். தவறான தலைமைகளாலும், ஈழத்தில் அதிகாரத்துடன் செயற்பட்டுவரும் சனநாயக மறுப்பு சக்தியாலும் உயிர் பறிக்கத் தேடப்படுபவர்கள். அதனால்தான் இன்று இந்த நிலையில் உள்ளனர். ஆகவே மக்களை நேசித்து வஞ்சிக்கப்பட்ட இவர்கள் மக்களைக் காக்க ஏன் இத்தாக்குதலைச் செய்திருக்கக் கூடாது? (நான் ஈபிடிபி தலைமையைச் சொல்லவில்லை, அடிமட்ட உறுப்பினர்களைத் தான் குறிப்பிடுகிறேன். தீவுப்பகுதியிலும் யாழ்ப்பாணத்திலும் ஈபிடிபிதான் செய்தனர் என்று பேசப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஈபிடிபி தலைமை எப்போதும் அங்கீகரிக்கப்படக் கூடியதாகவோ, மன்னிக்கப்படக் கூடியதாகவோ எனது கருத்தில் இல்லை. அதற்காக அதில் உறுப்பினராகத் தவிர்க்க முடியாத நிலையில் உள்ள சாதாரண போராளிகளையும், தலைமையையும் வேறுபடுத்திப் பார்க்க சுவடுகள் வாசகர்களால் முடியுமென நம்புகிறேன்)

அடுத்து புலிகள் தாங்கள் செய்யாத இத்தாக்குதலை, தாம் செய்ததாகக் கூறிக்கொள்வதால் காணும் பலன்தான் என்ன? தமிழ் மக்களிடையே தாம் ஒரு சக்திவாய்ந்த ராணுவம் என வலியுறுத்தலாம். வெளிநாடுவாழ் தமிழரிடையே கொஞ்சம் அதிகம் நிதி வசூலிக்கலாம்.

ஆனால் இத்தாக்குதல் அரசாலோ அல்லது அரசுசார் சக்திகளாலோ நடத்தப் பட்டதென்பதை சிங்கள மக்களுக்கும் ராணுவ வீரர்களுக்கும் உணர்த்தி அரசை மக்கள் மத்தியில் அம்பலப் படுத்துவார்களேயானால் அல்லது அம்பலப்படுத்த முயல்வார்களாயின், தமிழ் மக்களுக்குச் சாதகமான பல விளைவுகளை எதிரி தரப்பில் ஏற்படுத்த முடியும்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

□ □ ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் □ □

# பேய்களுக்கு யார் பயம்?



'வீடு வெறிச்சென்று கிடக்கிறது. வெளியில் நல்ல வெயில் அடித்தது இன்றைக்கெல்லாம், எல்லோரும் வெளியில் போயிருப்பார்கள்'.

'வெள்ளைக்காரர்கள் எப்போது கொஞ்சம் வெயிலடிக்கிறது என்று காத்திருப்பவர்கள் உல்லாசப்பிரயாணம் போக'

மகாதேவன் நடந்து வந்த களைப்பில் படுத்தபடி யோசிக்கிறான். எல்லோரும் சந்தோசமனுபவிக்கிறார்கள் வார விடுமுறையில், எங்களைப் போன்ற மாணவர்களால் முடியுமா?

'கிழமை நாட்களில் படிப்பு, வார விடுமுறையில் உழைப்பு! மகாதேவன் பெருமூச்சுடன் திரும்பிப் படுக்கிறான். மெல்லிய காற்று திறந்திருந்த ஜன்னல் சேலையைத் தடவிப் பிடித்து விளையாடுகிறது.

பின்னேரம் எட்டுமணியாகிறது. இன்னும் இருளவில்லை. மெல்லிய மாலைப்பொழுதின் மயக்கமும் வேலை செய்து வந்த களைப்பும் கண்களை வருடுகின்றன.

எவ்வளவு சுகமாக இருக்கும் ஒரு நீண்ட நித்திரையடித்தால்......!

மகாதேவன் நிமிர்ந்து படுத்தபடி முகட்டைப் பார்க்கிறான் ஒரு யோசனையுமில்லாமல் உருப்படியாக. சுவர்க்கரைகளில் பொருத்தப்பட்டுக் கிடக்கும் பைப்புகளில் பார்வைபடுகிறது. சாடையாகப்பதிந்து கிடக்கும், அல்லது வளைந்து —அல்லது வளைத்துக் கிடக்கும் அந்தத் தண்ணீர்ப் பைப்பில் அவன் பார்வை படுகிறது.

இந்த அறைக்கு வந்து இரண்டு கிழமையில் ஒன்றிரண்டுதரம் இப்படி மல்லாக்காகப் படுத்துக் கூரையை ஆராய்ந்து அந்தப் பைப்புக்களில் பார்வை பதிந்து... ' மகாதேவன் புரண்டு படுக்கிறான். ஏனோ மூலையைப்பார்க்க அவன் விரும்பவில்லை.

இன்றுமட்டுமல்ல வந்து இரண்டு கிழமைகளில் முதல் தரம் அந்தப் பைப்புகளில் பார்வை பதிந்தபோதே ஏதோ அவன் ஞாபகப்படுத்த விரும்பாத ஒரு நினைவை யாரோ

www.tamilarangam.net

வலிய ஞாபகப் படுத்தினாற் போல்...

மகாதேவன் அதற்குமேல் படுத்திருக்க விரும்பவில்லை. கிட்டத்தட்ட ஒரு நித்திரையடித்தால் எவ்வளவு சுகமாக இருக்கும், என்ற நப்பாசையும் போய்விட்டது. 'குளிக்க வேண்டும். ஏதும் சமைக்க வேண்டும். நாளைக்கு முடிக்க வேண்டிய சில கொலிஜ் நோட்ஸ் இருக்கின்றன'.

சேர்ட் கழட்டவும் ஜன்னலால் 'சில்' என்ற காற்று உடம்பில் சேட்டை விடவும் அவன் உடம்பை நெளிக்கிறான். கைகள் ஜன்னலைப் பூட்டப் போகின்றன. ஒவ்வொரு தரமும் அவன் அந்த ஜன்னலைப் பூட்டப் போகும் போதும் அவன் பார்வை எங்கு போகுமோ அங்கே போகிறது. இருண்டு கொண்டு வரும் மாலைப் பொழுதின் மெல்லிய இருளில் தெரியும் ஆயிரக்கணக்கான சிலுவைகளையுடைய சவக்காலை அவன் பார்வையில் படுகிறது. முதல்தரம் வீட்டுக்காரப்பெண் அறையைக் காட்டக் கொண்டு வந்த போது ஜன்னற் பக்கம் வந்த போது அவன் பார்வையில் தூரத்தே சவக்காலை தெரிந்த போது தர்மசங்கடப்பட்டான்.

அவன் மூட நம்பிக்கையுள்ளவன் இல்லை, ஆனால்...... "பேய்களுக்கு பயமா?" பெருத்த உடம்பும் சின்னக் கண்களுமுடைய சின்ன யானைக் குட்டி போல் நடக்கும் மிஸஸ் பார்ணட் அவனைக் கேட்டவுடன் தோள்களைக் குலுக்கி விட்டு "அப்படி ஒன்றுமில்லை" என்றான்.

'பேய்களுக்கு யார் பயம்?' அப்படி ஒன்றிருந்தால் அதை உண்டாக்கியவர்கள் பயப்படட்டும். கடவுளை உண்டாக்கியவர்கள்தானே திருவிழா வைக்கிறார்கள்? மகாதேவன் குளியலறைக்குப் போய் ஹீட்டரைப் போடுகிறான் சுடுதண்ணீர் வர.

கீழே கதவு திறக்கும் சத்தம் கேட்கிறது. வீட்டுக்காரர்கள் வருகிறார்களாக்கும்!

அவர்கள் சமைக்கத் தொடங்கமுதல் சமைத்துவிட்டால், கரைச்சல் இல்லை. தண்ணீர் சூடாக முதல் கெதியாகச் சமைக்கலாம். இந்தியன் கடையில் வாங்கிய ஆட்டிறைச்சியையும் அரிசி சாமான்களை.யும் திறந்துகொண்டு படிகளில் இறங்குகிறான். முன்கதவு ஆவென்று திறந்து கிடக்கிறது. இருள் பரவும் வீட்டில் சமைக்கலாம். இந்தியன் கடையில் வாங்கிய ஆட்டிறைச்சியையும் அரிசி சாமான்களை.யும் திறந்துகொண்டு படிகளில் இறங்குகிறான். முன்கதவு ஆவென்று திறந்து கிடக்கிறது. இருள் பரவும் வீட்டில் வெளியால் தெருவிளக்கிலிருந்து வரும் வெளிச்சம் பட்டுத்தெறிக்கிறது. 'கதவைத் திறந்தவர்கள் பூட்டுவதற்கென்ன?' மனசில் முணுமுணுத்துக்கொண்டு கீழேயிறங்கியவன் பூட்டியபடி கிடக்கும் முன் அறையைப் பார்த்துத் திடுக்கிடுகிறான்.

மிஸ்ரர் அன்ட் மிஸஸ் பார்ணட் வந்திருந்தால் முதல் வேலையாக முன்னறையைத் தான் திறப்பார்கள். மேலே, மகாதேவன் அறைக்குப் பக்கத்தில் இருக்குமறையில் சீவிக்கும் எலியட் வந்திருந்தால் 'ஹலோ மகாதேவன்' சொல்லாமல் கதவைத் திறந்திருக்க மாட்டான்.

மகாதேவன் அப்படியே நிற்கிறான். திறந்திருந்த கதவு காற்றிற்கு மெல்ல முன்னும் பின்னும் அசைகிறது. தெரு விளக்கின் வெளிச்சத்தி அவன் நிழல்...... சட்டென் கதவைச் சாத்திவிட்டு ஹோ லைட்டைப் போட்டு விட் சமையல் அறைக்குள் போ றான். 'யார் திறந்தார்க கதவை? கள்ளனாக இரு குமோ?' சரியாக இருளா இந்த நேரத்தில் வீட்டுக்கு வரக்கூடிய கள்ளன் செயி அல் பேன்ஸில் இருப்பதாக தெரியவில்லை அவனுக்கு.

'நான் சரியாகப் பூட்டாம விட்டிருக்கலாம் வீட்டுக்கு வரமுதல்', மகாதேவன் அரி யைக் கழுவியபடி யோசிக் றான்.

வீட்டில் ஓரேயடியாக நிச தமாக இருக்கிறது. மேலே போய் கசட்டில் தமிழ்ப்பா டைப் போட்டுவிட்டு கீழ வருகிறான். சௌந்தரரா னின் "கற்பகவல்லி நி பொற்பதங்கள் பிடித்தேன்" பாட்டு மனதுக்கு இதமா இருக்கிறது. கசட் பாட்டு கள் முடியவும் ஆட்டுக் கறி சமையலும் முடிகிறது.

சாப்பாடு ஆறமுதல் ஒ குளிப்படித்து விட்டு...... அ சர அவசரமாகத் தண்ண ரைத் திறந்துவிடுகிறா வெள்ளை வெளேரென்ற பா ரப்புக்குள் நீர் நிரம்பி வழ றது. அருமையான குளிப்பு ஆட்டுக்கறியும் உடம்பு சோர்வை அகற்றிவிட்டது.

'நாளைக்கு முடிக்கவேண்டி நோட்ஸ் எல்லாம் முடித் விட்டால் டெலிவிஷனில்ஏது பார்க்கலாம்'. அவன் திட்ட களை மீறி நித்திரைதே ஜாலம் பண்ணிவிட்டாள்.

மகாதேவன் அரைகுறை நி திரையில் எழும்பி லைட் ஓ பண்ணுகிறான்.

'கீழே, ஹோலில் போட் லைட்?' ஒரு நிமிடம் யோசி கிறான்.

www.tamilarangam.net

'பாவம் கிழட்டு பார்ணட்ஸ் தம்பதிகள் இரவில் இருட்டில் கதவைத்திறந்து ஏன் கஷ்டப் படவேண்டும்?' கீழேயுள்ள ஹோலில் லைட்டை எரிய விட்டு கதவைப் பூட்டிவிட்டுப் படுக்கிறான்.

கொஞ்ச நேரத்தில் தூக்கமும் விழிப்புமற்ற இரண்டும் கெட்டான் உணர்வு மகாதேவனுக்கு. கண்களைத்திறக்க வேண்டும் போன்ற உணர்ச்சி. திறக்கமுடியவில்லை. நித்திரை கொள்ளவேண்டும் என்ற தவிப்பு. மனம் சாந்தியில்லாத பிரமை.

ஏதோ அரை குறைச் சம்பவங்கள், மனிதர்கள், சம்பாஷணைகள். அவன் புரண்டு புரண்டு படுக்கிறான். அம்மா அப்பா சகோதரங்கள் எல்லோரிலும் அன்புதான். அன்பின் பிணைப்பில் உண்டாகும் வேதனையில் துடித்த நாட்கள் போதும். வேதனையைப் பகிர்ந்து கொள்ள எந்தச் சிநேகிதர்களும் அருகில் இல்லை.

இலங்கையால் வந்தவுடன் லண்டனில் சிநேகிதர்களுடன் இருந்திருக்கா விட்டால் என்ன நடந்திருக்குமோ தெரியாது. தாய் தந்தையரின் பிரிவு...... பிரிவு மட்டுமா ...? புதுநாட்டுச் சீவியம். பொல்லாத குளிர், மண்டைக்கனம் பிடித்த சில ஆங்கிலேயரின் அவமதிப்பான நடத்தை. இதை எல்லாம் சகித்துப் பழக எவ்வளவு பாடு. எல்லாத் திடமான உரமான மனப்பான்மையும் தகர்ந்து கொண்டு போவது போன்ற உணர்ச்சி. தனிமையான வாழ்க்கை ஒரு காரணமாக இருக்கலாம். நினைவுகளை உதறிவிட்டு நித்திரை கொள்ளப் படாத பாடு படுகிறான்.

இந்த அறைக்கு வந்து இரண்டு கிழமைகளாகியும் சரியான நித்திரையில்லை. வந்த நாட்களில் புது இடமானபடியால் இருக்கலாம் என்றுதான் நினைத்தான்.

வீடு பழகி, வீட்டு மனிதர்களுடனும் ஒரு மாதிரிப் பழக்கமாகிவிட்டது. ஆனால் இந்த அறை ... ? இரவு ......?விளக்க முடியாத ஏதோ ஒன்று ..... தூரத்தில் தெரியும் சவக்காலை காரணமா? அரைகுறை நித்திரையிலும் மூட நம்பிக்கைகளை நினைத்து மெல்லிய சிரிப்பு நெளிகிறது.

நீண்ட நேரப் போராட்டத்தின் பின் ஒரேயடியான களைப்பில் உணர்வு தளர்ந்த போது ......

கிறீச்,

கதவு திறந்த சத்தம். அதைத் தொடர்ந்து மெல்லிய சோக நினைவுகளைத் தூண்டும், அன்பான யாரையோ ஞாபகப்படுத்தும் ஒரு சுகந்த மணம் ......
மல்லிகையின் இளம் மணம். மூக்கைத் துளைக்காத கொடி மல்லிகைப் பூவின் ......

லண்டனில் எங்கே மல்லிகை! மல்லிகை மணம் நிரம்பிய வாசனைத் தைலம்! நித்திரையில்லை. நிச்சயமாக மகாதேவன் நித்திரையில்லை என்பது தெரிகிறது அவன் வியர்த்துக் கொட்டுவதிலிருந்து.

தன்திடமெல்லாம் பாவித்து, படாரென்று போர்வையை உதறிவிட்டு எழுந்தான். எழுந்த அடுத்தவினாடி லைட்டைப் போட்டான். அவன் கனவு காணவில்லை. நிச்சயமாக அந்தக்கதவு பூட்டித்தான் இருந்தது அவன் படுக்கும்போது.

இப்போது !

பின்னேரம் முன்கதவு திறந்து கிடந்தது போல் ஆவென்று திறந்துகிடக்கிறது.மகாதேவன் மேலே எதையும் யோசித்துக் குழம்பத்தயாராய் இல்லை. இனி நித்திரை கொண்டபாடு இல்லை. நோட்ஸ் என்றாலும் எடுக்கலாம். ஒரு கோப்பி போட்டுக்குடித்துவிட்டு வெளியில் வந்தவன் திடுக்கிட்டான்.

## நாங்களும் உதவலாமே!

யாழ்ப்பாணத்தில் தினசரி நிகழும் யுத்தத்தின் இடையிலும் யாழ் மாநகரசபை ஒரு நூலகத்தை இயங்க வைக்கிறது என்பது ஆச்சரியமான உண்மை. தற்போது 50,000 நூல்களுடன் இயங்கும் இந்த நூலகத்தின் சிறுவர் பகுதிக்கு வீடியோ, ஜெனரேட்டர், உள்ளக விளையாட்டுகள் (Indoor games) போன்றவை தேவையாயுள்ளன என அறியப் படுகிறது. இதைவிடப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், பல்வேறு துறைசார்ந்த நூல்கள் போன்றனவும் அவசியம் தேவைப் படுகின்றன.

பெருமளவில் வெளிநாட்டில் தமிழர்கள் வாழும்போது தமிழர்களது தாயகத்தில், பெருமளவு வாசகர்களுக்குச் சேவைபுரியும் ஒரு நூலகத்திற்கு உதவி புரிய வேறு யாரிடமாவது கைநீட்டல் நியாயமா?

– கேசவன் –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவன் சரியாகத் தன் கதவைப் பூட்டாமல் படுத்தால் அது திறபட்டிருக்கலாம். ஆனால் வயதுபோன தம்பதிகளுக்குப் பரிதாபப்பட்டு ஹோலில் போட்டு வைத்திருந்த லைட்...... ?

வெளியில் கும்மிருட்டு. 'யார் ஒவ்வொ பண்ணியிருப்பார்கள் ?' பேய்களுக்குப் பயமோ இல்லையோ ஏதோ ஒரு உறுத்தல் மனதில். யோசனையுடன் கீழே இறங்கிவந்தவன் பின்னேரம் போல் பார்ணட் தம்பதிகளின் முன்னறை பூட்டிக்கிடப்பதைப் பார்த்ததும் ஒன்றும் விளங்காமல் விழிக்கிறான். யோசித்து என்ன பயன்?

லைட் போட்டுவிட்டு படிப்புத் தொடர்கிறது. பார்ணட் தம்பதிகள் அடுத்தநாள் வந்தார்கள். மகளுக்குப் பிள்ளை பிறந்ததாம். மான்செஸ்டர் போய்வந்தார்களாம். பக்கத்து அறை எலியட் வழக்கம் போல் காலையில் வந்து சேர்ந்தான் லண்டனிலிருந்து. இருவரும் பஸ்ஸில் ஏறியுட்கார்ந்தார்கள் கொலிஜ்ஜுக்குப்போக.

செயின் அல்பேன்ஸ் மார்க்கட் பிளேசிலிருந்து பஸ் நகரத் தொடங்கியது. மங்கி மழுங்கிய பழையகாலக் கட்டடங்களைப் பார்த்தபடியுட்கார்ந்திருந்தான் மகாதேவன். "என்ன கண் சிவந்திருக்கிறது? வீட்டில் யாருமிருக்கவில்லை. கேர்ள் பிரண்டைக் கூட்டிக்கொண்டு வந்தாயோ ?" எலியட் நித்திரையின்றிச் சிவந்து போய் இருக்கும் மகாதேவனின் கண்களைப் பார்த்தபடி சொல்கிறான் குறும்பாக. இளம் வயதில் நித்திரையில்லாமல் இருப்பதற்கு 'செக்ஸ்' தவிர வேறொரு காரணமும் இருக்கக் கூடாதா ? எலியட்டை கேட்கலாமா ஏதும் விசித்திரமான அனுபவம் கிடைத்ததா அந்த வீட்டில் என்று? அவன் எனக்கு முதல் குடிவந்தவன் அந்த வீட்டில் !

பேய்க்குப் பயப்படுகிறேன் என்று பகிடி பண்ணமாட்டானா ? எலியட் முகப்பாத்திக்காரன் சிரித்துவிட்டுப் போகட்டும்.

"எலியட்". தயங்குகிறான் மகாதேவன்.

"என்ன பேய்க்கதை சொல்லப் போகிறாயா?' எலியட்டின் இந்தக் கேள்வி மகாதேவனைத் திடுக்கிடப்பண்ணுகிறது.

"பேயோ பிசாசோ, சரியாக நித்திரை வரவில்லை" திடுக்கிட்டதைக் காட்டிக் கொள்ளாமல் மகாதேவன் சொல்லுகிறான்.

"செயின் அல்பேன்ஸ் ஒரு காலத்தில் ரோமரின் யுத்த பூமியாக இருந்தது. ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் செத்த பூமி இது. இந்த ஊர்ச்சனம ஒரே பேய்க்கதைகளை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். முட்டாள் சனங்கள். உனக்கு முதல் அந்த அறையில் இருந்த பொடியனும் தன்னால் சரியாக நித்திரை கொள்ள முடியவில்லை என்று சொல்லுவான். நான் ரோமன் போர் வீரர்களைப் பற்றி விசாரிப்பேன்" எலியட் தன் பகிடிக்குரலில் சொல்கிறான். மல்லிகை வாசத்தில் வாசனைத் திரவியம் போட்ட போர் வீரர்களா ? மகாதேவன் ஒன்றும் பேசாமல் ஜன்னலுக்கு வெளியில் பார்க்கிறான்.

□ □

கொலிஜ் பரீட்சை தொடங்கிவிட்டது. மூச்சுவிட நேரமில்லாத படிப்பு. அத்துடன் அடிக்கடி தலையிடி வேறு அன்றிரவு மின்னலுடன் இடி மழை.ஜன்னல் உடைந்துவிழும் போல் அகோரமான காற்று வேறு. இரவு நீண்ட நேரம் படித்துவிட்டுத் தன்பாட்டிற்கு கண் மூடப்பட்டது.

கதவு திறந்த சத்தம், இழுவு பிடித்தகாற்று. அவன் முணுமுணுக்கவில்லை, மனதில் சொல்லிக் கொள்கிறான். மெல்லிய கொடி மல்லிகைப் பூவின் வாசம்......

எக்காரணம் கொண்டும் ஒருநாளும் நினைக்கக் கூடாது என்று சங்கல்பம் பண்ணிய சம்பவங்கள் அடக்க முடியாமல் நினைவில் ஊசலாடுகின்றன.

## நோக்கத்திற்காக!




விரைவில் பாவனையில் இல்லாமற் போகப் போகும் நோர்வேயின் மிகச்சிறிய நாணயமான பத்து ஒரேக்களைச் சேகரித்து ஒரு நல்ல நோக்கிற்காகப் பயன்படுத்தும் கைங்கரியத்தை நோர்வேப் புற்றுநோய் அமைப்பு செய்துள்ளது.

மக்களால் இவ்வாறு வழங்கப்படும் பணத்தைத் திரட்டிவரும் இந்த அமைப்பு, இதுவரை 45 (மெ)தொன் நாணயங்களைச் சேகரித்துள்ளனர் (மூன்று மில்லியன் குறோணர்கள்). இவர்களது லட்சியம் குறைந்தது 75தொன் நாணயங்களைச் சேகரிப்பது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மல்லிகை மணம். பெரியக்கா!

மகாதேவன் வேதனையுடன் புரண்டு படுக்கிறான். வேதனை பரவிய — சோகத்தைச் சுமந்தபடி பெரியக்காவின் முகம் ... குறுகுறுப்பும் கொல் என்ற சிரிப்பையும் கொண்ட அக்கா எப்படி மாறிப்போனா?

அக்கா எப்பவும் கெட்டிக்காரி. இளம் வயதில் பட்டதாரியாகி அனுராதபுரத்தில் ஒரு தமிழ்ப் பாடசாலையில் வேலை கிடைத்தது .. ... ஆறு மாதம் கூட இல்லை வேலைக்குச் சேர்ந்து.

அந்த 77ஆம் ஆண்டுக் கலவரம்!

அக்காவை வீட்டிற்குக் கொண்டுவந்தார்கள். அக்காவின் முகத்தில்குறுகுறுப்பில்லை. கொல்லென்ற சிரிப்பை யாரும் கேட்டில்லை. யாருடனும் கதைக்கவில்லை. பார்வை வெறித்திருக்க ......

யாரும் அவனுக்குச் சொல்வார் இல்லை. அவன் சின்னப் பிள்ளையாம் — இங்கிலாந்துக்குப் படிக்கவர ஒழுங்குகள் செய்து கொண்டிருக்கிறான். அக்காவிற்கு என்ன நடந்ததென்று சொல்லாமலே அவன் ஊகித்துக் கொண்டான். கலவரம் போன போக்கில். ஆயிரக்கணக்கான இளம் தமிழ் பெண்களுக்கு எது நடந்ததோ அதுதான் அக்காவிற்கும் நடந்தது.

காட்டுப் பூனைகளின் மிருக வெறிக்கு அகப்பட்ட கூண்டுக் கிளியைக் கேட்கமுடியுமா உனக்கு என்ன நடந்ததென்று?

ஊர் உறங்கும் இரவுகளில் தனியே இருந்து தானழுத தமிழ்ப் பெண்களில் ஒருத்தியாக என் தமக்கை. ஒரு நடு இரவு "ஒன்றுக்குப் போக"




எழுந்தவன் கண்சிமிட்டும் நட்சத்திரங்களின் துணையுடன் தென்னை மரத்தில் சாய்ந்திருந்து அழும் தமக்கையைக் கண்டான்.

"அக்கா" அவன் குரலுக்குத் திரும்பியவள், அவன் பார்க்கக் கூடாது என்பதற்காகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் றெஸிங்கவுனில்.

தேய் நிலவின் மெல்லிய ஒளி தென்னங் கீற்றால் எட்டிப்பார்க்க அந்த வெளிச்சத்தில் அக்காவின் குளம்கட்டிய கடைவிழிகளைப் பார்க்கிறான் அவன்.

"இந்த நேரத்தில் வெளியில் என்ன வேலை ....."

அவன் தடுமாறினான். பாட்டி சொல்வது ஞாபகம் வந்தது "பேய்கள் உலவும் நேரம்". அவள் வெறித்துப்பார்த்தாள்.

பின்னர் எழுந்து வீட்டுக்குள் போனாள். அவன் முன் ஹோலுக்குள் வந்து படுத்தான். நித்திரை வரவில்லை.

ஏதோ சத்தம்!

என்ன சத்தம்? குசினியில் பூனையா? உறியில் உள்ள மீன், பலகாரங்களை எடுக்க பூனை பாய்வதுண்டு. எழும்பிக் குசினிப் பக்கம் போனான். கதவு உட்பக்கம் பூட்டப்பட்டிருந்தது.

உட்பக்கம் பூட்டு!

ஜன்னலுக்குப் போட்ட லலைக்கம்பிக்குள்ளால் பார்த்தவனுக்கு ...... உறியில் மீன் பொரியல் தொங்கவில்லை. பெண்மையழிந்து வெறும் பெயராய் நடமாடிய பெரியக்காவின் வெற்றுடம்பு.....

"அக்கா ...! அக்கா...!"

அவன் அலறல்.

□ □

மகாதேவன் திடுக்கிட்டு எழுந்தான். கூரையில் உள்ள வளைந்த பைப்பில் தொங்கும் அந்த உடம்பு ... ... என்ன கனவா? நனவா?

www.tamilarangam.net

உடம்பு சில்லிட்டு வியர்த்து, நாடி படபடத்து கைகள் உதற அவன் லைட்போட்டான்.

ஒன்றுமில்லை. அந்த வளைந்த பைப்பை வெறுத்துப் பார்த்தான். வெறித்துப் பார்த்தான்.

அந்த இரவு விடியாத நீண்ட இரவாக இருந்தது மகாதேவனுக்கு.

அக்காவின் செத்தவீட்டிற்குப்பின் இன்றுதான் இரண்டாம்தரம் அழுகிறான். சிவில் எஞ்சினியரிங் நோட்ஸ் நீர்த்துளிகளில் நனைவதை மறந்து அழுகிறான்.

அன்று காலையில் கண்கள் ஏன் சிவந்திருக்கிறது என்று எலியட் கேட்க முதல் கொலிஜ்ஜுக்குப் போய்விட்டான். அறையில் நிம்மதியாக இருந்து படிக்க முடியவில்லை.

பின்னேரம் கிழவன் பார்ணட் கதவைத் தட்டினான். சோர்ந்த முகத்துடன் கதவைத் திறந்தான் மகாதேவன். கிழவன் அவனைப் பரிதாபத்துடன் ஏறிட்டுப் பார்க்கிறான். என்ன கிழவன் கேட்கப் போகிறான்? வாடகை கூட்டப் போகிறானா? அல்லது ...... கிழவன் அவ்வளவு மோசமில்லை.

கிழவன் தயக்கத்துடன் கேட்கிறான். "டிற் யூ ஹாவ் எனி நைட் மயா லாஸ்ற் நைட்" (நேற்றிரவு என்னவும் பயங்கரக் கனவு கண்டாயா?)

●

நன்றி : அலை
(புரட்டாதி — மார்கழி 1980) □

●

மகாதேவன் பேசாமல் இருக்கிறான்.

என்ன கேட்கிறான் கிழவன்?

"ஏதோ சத்தம் போட்டாய்போலக் கேட்டது இரவு". கிழவன் உற்றுப்பார்த்துக் கேட்கிறான்.

அக்காவைக் கனவு கண்டு அழுததைச் சொல்லலாமா? ஆட்களுக்குக் கேட்கக்கூடியதாகவா அழுதேன். 'கேட்கா' விட்டால் ஏன் கிழவன் கேட்கிறான். ஏன் யாரும் கதை கட்ட வேண்டும்.

மகாதேவன் தயங்குகிறான். கிழவனின் பார்வை வளைந்த அந்த தண்ணீர்ப் பைப்பில் பதிகிறது.

'சொல்லலாமா கிழவனுக்கு அந்தப் பைப்பில்தான் என் அக்காவின் உடம்பைக் கண்டேன் என்று.'

கிழவன் மகாதேவனைப் பரிவுடன் தடவுகிறான் தகப்பனைப்போல.

"நான் உனக்குச் சொல்லியிருக்க வேண்டும் நீ வந்த நாளில்". கிழவனின் குரல் தடைப்படுகிறது.

என்ன சொல்கிறான் இவன்?

"இந்த அறையில் ஒரு பெண் தற்கொலை செய்தாள்" கிழவன் மகாதேவனின் முகத்திலிருந்து பார்வையை எடுக்கவில்லை. மகாதேவனின் முகம் திடுக்கிடுவது ஆச்சரியத்தால் என்று நினைக்கலாம்.

"அந்தப்பெண்ணும் இலங்கையைச் சேர்ந்தவள்தான். பக்கத்து ஆஸ்பத்திரியில் நேர்ஸாக இருந்தாள். ஒரு வெள்ளைக்காரனுடன் சிவியம். குழந்தை வயிற்றில். அவன் எங்கேபோனானோ தெரியாது" கிழவன் சொல்லிவிட்டு இருக்கிறான். என்ன மறுமொழி சொல்ல இருக்கிறது.

'சிலர் ஒழுக்கம் பண்பு என்பது உயிரைவிடமேலானது என்று நினைப்பதுண்டு" கிழவன் சொல்கிறான்.

மகாதேவனின் கண்கள் கிழவன் இருப்பதையும் மறந்து கலங்குகின்றன.

ஒழுக்கம் உயிரைவிட மேலானதாக நினைத்துத்தான் என் தமக்கை .........

அவன் சொல்லவில்லை கிழவனுக்கு.

"எங்கள் நாட்டுப்பெண்கள் வாழ்க்கையை எடுத்துக்கொள்ளும் விதம்வேறு; உங்கள் நாட்டு பெண்களின் வாழ்க்கையும் மனப்போக்கும் வேறு. இந்த அறையில் எத்தனையோ பேர் அந்தப் பெண்ணின் தற்கொலைக்குப்பின் இருந்திருக்கிறார்கள். ஒருசில அனுபவங்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உன்னைப்போல் சத்தம் போடவில்லை"

கிழவன் மெல்லமாகச் சொல்கிறான்.

நான் பேய்க்குப் பயந்து சத்தம் போடவில்லை என்பதை என்னென்று சொல்வது? என் தமக்கையின் நினைவில் அழுதேன் என்று சொன்னால் நம்புவானா கிழவன்?

"பேய்க்குப் பயமா?" கிழவன் கேட்கிறான்.

மகாதேவன் வெறித்துப் பார்க்கிறான்.

பேய்களை உண்டாக்கி உலகத்தை உறிஞ்சும், மனிதப் பேய்க்கூட்டத்தைக் கண்டுதான் பயப்படுகிறேன்.

ஒருகாலத்தில், அந்த மாதிரிப் பேய்க்கூட்டத்தை அழிக்க, வல்லமையும் உண்மையும் உள்ள பூசாரிகள் உண்டாவாரென நம்புகிறேன் என்று சொன்னால், கிழவனுக்கு விளங்குமா? ●

www.tamilarangam.net

மீண்டும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட முடியும் என்ற நம்பிக்கை தோன்றியிருப்பதாகச் சில சமிக்ஞைகள் கொழும்பில் காட்டப்பட்டன. மிக விரைவாக அந்தச் சமிக்ஞைகள் மறைந்துவிடும் போலவும் தெரிகிறது. வழமைபோல இம்முறையும் சமஸ்டித்தீர்வு பல அரசியற் சக்திகளாலும் ஏற்கப்படக் கூடியது என்ற சமிக்ஞைகள் தெரியும் அதேவேளை, வடக்கையும் கிழக்கையும் இணைக்கக் கூடாது என்ற குரல்கள் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பிரதேசம் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமிருக்க முடியாது. இதைச் சிங்களப் பேரினவாதிகள் மறுத்து வந்ததுடன் காலம்காலமாகக் குடியேற்றங்கள் மூலம் கிழக்கைச் சிங்கள மயமாக்கவும் முயல்கின்றனர்.

வடக்கும் கிழக்கும் இணைந்திருப்பதா பிரிந்திருப்பதா என்பது சிங்கள அரசினதோ, தென்னிலங்கை அரசியல்வாதிகளதோ பிரச்சனை அல்ல. இணைப்பாயினும் பிரிப்பாயினும் அதை முடிவு கட்டவேண்டியது அப்பிரதேசங்களில் வாழும் மக்களேயன்றி வேறு யாருமல்ல. பிரச்சனையில் சம்பந்தப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்களைக் கலந்தாலோசியாமல் வேறு யாரோ எடுக்கும் முடிவுகள் கடந்த காலங்களில் ஏற்படுத்திய விளைவுகளை நாம் மறந்துவிடக் கூடாது.

அதேவேளை இணைப்பு, மறுபுறத்தில் தமிழ் மக்களது பெரும்பான்மை மேலாதிக்கத்தைத் திணிக்கமாட்டாது என்பதை உறுதி செய்துகொள்ளவேண்டும். வடக்கிலும் கிழக்கிலும் வாழும் சிறுபான்மை மக்களது உரிமைகள் எவ்விதத்திலும் பாதுகாக்கப்பட்டாக வேண்டும்.

எந்தத் தீர்வாக இருப்பினும் இந்த அடிப்படைகள் கட்டாயம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இல்லையேல் மீண்டும் வன்முறைகள் பெருகவும் அமைதி குலையவும் வாய்ப்புகள் உண்டாகலாம்.

மலையகத்தின் சோகவரலாறு நவம்பர் மாதத்திலாவது நினைவுபடுத்தப் படுவது வழமை. இலங்கையின் ஏனைய இனத்தவர்களுக்குக் கொத்தடிமை போல உழைத்துக் கொடுத்தும், இன்றுவரை தமது நலன்களைப் பேணும் எந்த ஒரு அரசியல் அமைப்பையும் கொண்டிராத துர்ப்பாக்கிய நிலை மலையக மக்களுக்கே உரியது.

காலம்காலமாக சிங்களப் பேரினவாதத் தலைமை மட்டுமல்ல, வடக்கு கிழக்குத் தமிழ்த் தலைமைகளாலும், ஏன் தமது சொந்த அரசியற் தலைமைகளாலும் ஏமாற்றப்பட்டவர்கள் இவர்கள். வடக்கு கிழக்கு, மலையகத் தமிழ்த் தலைமைகள் மலையக மக்களைக் காட்டிக்கொடுத்தே பிழைப்பு நடத்தி வந்திருக்கின்றன. வடக்கு கிழக்குத் தமிழர்களால் முக்கியமாக வடக்கில் இருந்து மலையகம் சென்று பணிபுரிந்த தமிழர்களால், மலையகத்தவர் தாம் தாழ்ந்தவர்கள் என்ற மாயையான மனப்பான்மைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

மலையகத் தமிழர்களது வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்ட போது அதற்கு எதிராகக் குரல் கொடுத்திருக்க வேண்டிய வடக்கு கிழக்குத் தமிழ்த் தலைமைகள், சிங்கள இனவாத சக்திகளுடன் இணைந்து, மலையக மக்களைக் காட்டிக் கொடுத்தன. அதைவிட, 1964இல் ஒப்பந்தம் என்ற பெயரில் அவர்கள் பிறந்த பூமியைவிட்டு நாடு கடத்தப்பட்ட போதும் தமிழ்த் தலைமைகள் அதை நிறுத்த முயலவில்லை. மலையக மக்களுக்குக் குடியுரிமையும், வாக்குரிமையும் இருந்திருப்பின இன்று ஈழத் தமிழர்களுக்கு நேர்ந்திருக்கும் துயரங்களுக்கு அவர்கள் அரணாக நின்றிருப்பார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை. மலையக மக்கள் வடக்கு கிழக்குத் தமிழ்த் தலைமைகளால் காட்டிக் கொடுக்கப் பட்டிராவிட்டால் இன்று இலங்கையில் இனப்பிரச்சனை இத்தனை கோரத்தை எய்தியிராது என நம்பலாம்.

www.tamilarangam.net

தற்போது இனப்பிரச்சனைத் தீர்வு பற்றிப் பேசப்படுகையில் மலையக மக்கள் ஏறத்தாழ மறக்கப் பட்டவர்களாகவே உள்ளனர். நூறாண்டுகளாச் சொந்தமாக ஒருதுண்டு நிலமும் அற்று, வறுமையிலும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலும் வாழும் இவர்களது பிரச்சனைகள், அவர்களது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும். இதற்கான குரலைத் தமிழ், முஸ்லிம் மக்கள் எழுப்ப வேண்டும்.

வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு இரு வருடங்கள் நிறைவு பெறுகின்றன. வெளியேற்றப்பட்ட மக்கள் பலர் கொழும்பு மற்றும் நகர வீதிகளில் பிச்சை எடுத்து வாழ்வைத் தொடரும் துயர நிலையில் வாழ்கின்றனர்.

மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் தமது பாரம்பரிய வாழிடங்களில் இருந்து முஸ்லிம் மக்கள் துரத்தப்பட்ட இந்த நிகழ்வு தமிழ் மக்களது போராட்டத்தில் பெரும் பின்னடைவையே ஏற்படுத்தியது. அத்துடன், மறைமுகமாக தமிழர்கள் போலவே அவர்களும் ஒரு தேசிய இனம் என்பதன் அங்கீகாரமாகவும் திகழ்ந்தது இந்த வெளியேற்ற உத்தரவு.

இரு இனங்களுக்கிடையில் நிகழும் உள்நாட்டு யுத்தத்தினால் நேரடியாக இவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பெருமளவில் உயிர், சொத்துச் சேதங்களுக்கும் ஆளாகியுள்ளனர். இவர்களைத் தமிழர்களது போராட்டத்திற்கு ஆதரவாக வென்றெடுப்பதற்குப் பதிலாக, புலிகள் அவர்களை வெளியேற்றிய நடவடிக்கை ஏற்கனவே நிகழ்ந்து வரும் முஸ்லிம் மக்கள் மீதான படுகொலைகளிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்திற்கு நியாயமான காரணமாக அமைகிறது.

முஸ்லிம் மக்களும் அவர்களது அரசியற் தலைமைகளும், தாமும் சிறுபான்மையினர் என்பதையும், தமது உரிமைகளைப் போராடியே பெறவேண்டும் என்பதையும் உணர்ந்து, அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அவசியம். முக்கியமாகத் தமிழ் மக்களது உயிர்களைப் பலியெடுக்கும் முஸ்லிம் ஊர்காவற் படை உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும். தமிழ் மக்களது நியாயமான போராட்டத்திற்குத் தமது ஆதரவை அவர்கள் தெரிவிக்க வேண்டும். தமிழ் மக்களுடனான தமது நல்லுறவை மீளக் கட்டியெழுப்பும் வழிகளைத் திறக்க வேண்டும்.

மறுபுறத்தில், புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் எந்தவித நிபந்தனையும் இன்றி அவர்களது இடங்களில் குடியமர அனுமதிக்கப்பட வேண்டும். இப்பிரதேசங்களில் அவர்களது பாதுகாப்பு தமிழ்த் தரப்பால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம் மக்களது பாரம்பரியப் பிரதேசம் அதுவே என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த அடிப்படையில் அவர்களது சுயநிர்ணய உரிமைக்காகத் தமிழர்கள் குரல் கொடுக்க வேண்டும். முஸ்லிம் மக்கள் மீதான படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கை அரசு தற்போதைய அமைப்பில் சிறுபான்மை இனத்தவரின் பிரச்சனைகளைத் தீர்க்காது என்பதை முஸ்லிம் மக்களை உணரவைத்து அவர்களையும், எம்முடன் போராட வைக்கவேண்டும். தமிழ் முஸ்லிம் மக்களிடையே பல நூறாண்டுகள் நிலவிய ஒற்றுமை மீளக் கட்டியெழுப்பப்பட இரு தரப்பினரும் உழைக்க வேண்டும்.

தமிழர்கள் முஸ்லிம்களுக்கு இழைத்த வரலாற்றுத் துரோகமாகவே முஸ்லிம்களது வெளியேற்றம் உள்ளது. இந்த நிலை மாற்றப்பட்டு இரு பகுதியினரும் பரஸ்பர ஒத்துழைப்புடன் வாழும் நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். இந்த முயற்சி சிரமமானதுதான், சாத்தியமற்றதல்ல.

---


சுவடுகள் 40
கார்த்திகை'92

**சுவடுகள்**

மாத இதழ்


ஸ்தாபிதம்: புரட்டாதி 1988

ஆசிரியர் குழு

**துருவபாலகர்**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





*'உன் கண்ணில் நீர் வழிந்தால்,' 'நீங்கள் கேட்டவை' படங்களில் சில சண்டைக் காட்சிகள் இருந்த போதிலும் — பொதுவா உங்க படங்களிலே சண்டைக் காட்சிகளைத் தவிர்க்கிறீங்க. 'வண்ண வண்ணப் பூக்க'ளில் கூட சண்டை சேர்த்திருக்க முடியும். Violence ஒரு maniaவாக மாறியிருக்கிற இந்தக் காலத்திலே, அதை ignore செய்வது — சண்டைக் காட்சிகள் ஒரு படத்தின் அழகுணர்வை குறைத்துக் காட்டும், cheapஆக இருக்கும் என்ற நினைப்பா — அல்லது basically நீங்க ஒரு சமாதானப் பிரியர், peace lover என்பதா?*

ஒன்று, என்னுடைய personality. இன்னொன்று வாழ்க்கையினுடைய நெறிமுறைகளிலே (values) நான் வெச்சிருக்கிற முக்கியத்துவம் — அல்லது கொடுக்காத முக்கியத்துவம் — இரண்டையும் காரணமா சொல்லலாம்.

என்னுடைய personalitywise. நான் முடிஞ்சவரைக்கும் அநாகரீக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மான ஒரு விவாதத்தை, சர்ச்சையை முடிஞ்சவரைக்கும் தவிர்க்க நினைக்கிற மனிதன் — சின்ன வயசிலிருந்தே! எனக்கு சில பொறுப்புகள் இருக்கு. சண்டையே, violence ஆகிவிடாது. அடிச்சா தான் நடக்கும் என்கிற கட்டங்கள் வாழ்க்கையிலே சில சமயங்களிலே வர்றதுண்டு. அந்தக் கட்டங்களையும், சில எல்லைகளுக்கு உட்பட்டு, சில நாகரீகங்களைக் கருதி, பொறுப்புணர்வோடு செயல் படணும்னு நான் நெனைக்கறேன். நிச்சயமா ஒரு சண்டை வெச்சே ஆகணும்னா, அந்த சண்டை ஒரு தார்மீகமான கோபத்தின் வெளிப்பாடா, நியாயமானதா இருக்கணும். கோபமே வரலேன்னா அவன்கிட்டே ஏதோ கோளாறு இருக்குன்னு அர்த்தம். சண்டையை வக்கிரம், வன்முறைக் கோடுகளைத் தொடாதவரை பாதுகாத்து வெளிப்படுத்தறதிலே எனக்கு ஒருவிதமான எதிர்ப்பும், ஆட்சேபணையும் இல்லே.

***உங்க படங்களிலே பார்த்தீங்கன்னா, ஒரு sophistication — மேல்தட்டு நிலை இருக்கிறதைப் பார்க்கலாம் — whatever be the theme or team your are working with. வேண்டுமென்றே அப்படி தாலும், அதை என்னுடைய பாணியில் காட்ட நான் முயற்சி பண்றேன்.***

***ஆமாம். அழகாக — மாட்டுத் தொட்டியின் அசிங்கத்தை அணுக விரும்பாதவராக — நாலைந்து சிந்தி மாடுகள் நின்று கொண்டிருக்கும் dairy farmஆக காட்டறீங்க.***

'வீடு' படத்தை எடுத்துக்கிட்டா, நடுத்தர பெண்ணினுடைய அனுபவங்களை, அதே மட்டத்திலுள்ள ரசிகன் ஆழமா புரிஞ்சுக்கற மாதிரி தான் எடுத்திருக்கிறேன். இந்த அழகுணர்வு என்னோடு ஊறிப் போன சமாச்சாரம் — அதைப் போலத்தான் நகைச்சுவை உணர்வு. அது என் படங்களிலே இருக்கும். அதுமாதிரி sophisticationஉம். ஆனா எப்போதுமே எல்லாத்தையுமே நான் அந்த நிலையிலிருந்துதான் சொல்றேன் என்கிற குற்றச்சாட்டை மறுக்கிறேன்.

***கமல் சொல்றார் — படங்களை மூணு விதமா பிரிக்கலாம். Good, bad and indifferent என்று. Art film என்று ஒன்று இல்லே. அது ஒரு கெட்ட வார்த்தைன்னு கோபப்படுறாரு.***

சில சமயங்களில சொந்த அனுபவங்கள் - படிச்ச விஷயங்கள் - என்னுடைய பார்வைக்கு கொண்டு வரப்பட்ட சமாச்சாரங்கள் - என் அட்டகாசமான கற்பனைகள் எனக்கு கைகொடுத்திருக்கு. இந்த கதைக் கரு என்பது எப்படி வருதுங்கற கேள்விக்குக் கூட வெவ்வேறு நேரத்திலே, வெவ்வேறு பதில் தான் சொல்ல வேண்டியிருக்கு. பொதுப்படையா சொல்றதா இருந்தா ஒரு குறிப்பிட்ட கால எல்லையிலே, ஏதாவது ஒரு விஷயம் நம்மை ஆழமா பாதிக்கிறதா இருந்தா, அதை வெளிப்படுத்தணுங்கற வேகம் வருது.

***அதற்கு சினிமா மட்டுந்தான் மீடியமா? மார்க்கமா?***

நிச்சயமா இல்லே. எழுத முடிஞ்ச சமயத்திலே எழுதியிருக்கேன். இப்போ சினிமாவிலே சொல்றேன்.

***பேட்டி என்பது உங்ககிட்டே எளிதான ஒண்ணு இல்லே. Introvert என மனோதத்துவத்தில் வர்ணிக்கும், உள்முக சிந்தனை அதற்குக் காரணமா. இல்லே, 'நான் பேச வேண்டாம் — என் படம் பேசட்டும்' என்ற அலட்சியமா?***

***மேல்நிலையிலிருந்து சிந்திக்கிறீங்களா, இல்லே கீழே வர விரும்பறதில்லையா? — You never want to stoop low.***

Sophistication என்று எதை சொல்றீங்க — விளக்கினா தேவலே.

***மூன்றாம் பிறையோ, வண்ண வண்ணப் பூக்களோ, ரெட்டை வால் குருவியோ — எதுவானாலும் கிராமத்துக் காதல்னு சொன்னீங்களே. அந்த கிராமியத்துக்கே நுழையவில்லை நீங்க...***

கிராமத்துக் காதல் சொல்லப்படுவதாலேயே அது sophistication இல்லாம சொல்லப்படணும்னு ஆகிவிடாது. Sophisticationன்னா என்ன? இந்த sophistication என்ற வார்த்தையை தமிழ்ப்படுத்தி கொச்சைப்படுத்த வேண்டாம்.

***உங்க படங்களிலே கிராமீயத்தை விட, ரமணீயம் — aesthetic senseதான் அதிகமாக இருக்கு. வெளிப்படையா சொன்னால்... ஒரு மாட்டுத் தொழுவத்தைக் காட்டறதைவிட, மான் குட்டிகள் குதித்தோடுவதைக் காட்டவே விரும்பறீங்க.***

அதை நான் இப்படி சொல்றேன். மாட்டு தொழுவத்தைக் காண்பித்த அப்படி கமல் சொன்னது, ஏதோ ஒரு தற்காப்பு இழந்த கணத்திலே — unguarded momentலே accidentalஆக, சொன்ன ஒரு commentஆகத்தான் இருக்கணும்னு நான் நெனைக்கிறேன். ஏன்னா, நல்ல சினிமா மீது கமல் கொண்டுள்ள கற்புக் கலையாத காதல் பற்றி எனக்குத் தெரியும் — நல்லாவே! படங்கள் மட்டுமல்ல — எந்தக் கலையாக இருந்தாலும், கலப்படமில்லாத, பணத்தை மட்டும் குறிக்கோளாக கொள்ளாத ஒரு படைப்பு. குறிக்கோள் பணமா, அல்லவா என்பதை மட்டும் வைத்துக்கொண்டு art film, commercial filmனு அப்படி எளிதாக பிரிச்சிட முடியாது. நல்ல படம் - அல்லாத படம். that is all. — கமல் சொன்ன மாதிரி.

***உங்க கதைகள் எப்படி உருவாகுது? ஒரு சம்பவத்தைப் பெரிது படுத்தி — stretching an incident, அல்லது நடந்த, கேட்ட, அனுபவித்த விஷயத்தை நினைவிலிருந்து எடுத்துப் பின்னி — அமைக்கிறீர்களா?***

Again. இதுக்கு yes, no. ரெண்டு பதிலையும் சொல்லலாம். நான் introvert அல்ல. எனக்குள்ளேயே வாழ்ந்துக் கிட்டிருக்கிறவரையில் நான் என்னை வெளிப்படுத்த — கருத்துக்களை வெளிப்படுத்த — எப்போதுமே நினைப்பவன் — அது effective communicationஆக இருக்கணும் என்கிற, நிர்ப்பந்தம் கொஞ்சம் இருக்கு. Sure. பிடிவாதமா பேட்டிகளை தவிர்ப்பவனல்ல நான். அடுத்து — என்னோட சினிமா பேசணும். — நான் பேச வேண்டிய அவசியமில்லே என்கிற கருத்தையும் ஓரளவுதான் ஏத்துக்கறேன். நம்ம ரசிகர்களை எடுத்துக் கொண்டால், நல்ல படம் எடுத்துட்டா மட்டும் போதாது — அதிலே என்ன இருக்குன்னும் சொல்லி, அவங்க கவனத்தைத் திருப்ப — ஈர்க்க வேண்டிய அவசியம் கூட — அவஸ்தையான அவசியம் இருக்கு. அப்படியிருந்தும் — பெரும்பாலான சமயங்களிலே பேட்டிகளிலிருந்து நான் ஒதுங்கிக் கொள்வதற்குக் காரணம் — யாரும் வருத்தப்படக்

“பேட்டி காண வர்றவங்களோடு எனக்கு Vibration இருக்கறதில்ல. எனக்கு சாம்பார் பிடிக்குமா, கறிக்குழம்பு பிடிக்குமான்னு கேட்டா பதில் சொல்ல நான் தயாரா இல்லே...”





www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



கூடாது என்ற வேண்டுகோளோட வெளிப்படையா சொல்றேன் — பேட்டி காண வர்றவங்களோட எனக்கு vibration இருக்கறதில்லே. எனக்கு சாம்பார் பிடிக்குமா, கறிக் குழம்பு பிடிக்குமான்னு கேட்டா பதில் சொல்ல நான் தயாரா இல்லே — சினிமாவைப் பற்றியும், என் சினிமா வாழ்க்கையைப் பற்றியும் அதனோட சம்பந்தப்பட்ட நம்பிக் கைகள், கருத்துக்கள், விளக்கங்கள் பற்றியும் அறிவுபூர்வமா ஆழமா என்னோடு பேசக் கூடியவர்களுக்கு நிச்சயமா நான் பேட்டி கொடுக் கிறேன். மணிக்கணக்கா பேச

ஆர்வமிருக்கு. பேசறேன். But... பத்திரி கையிலிருந்து வர்றோம் — ரெண்டு பேஜிலே ஒரு பேட்டி வேணுங்கறாங்க — சைனீஸ் ரைஸ் பிடிக்குமா சார் என்று கேட்டா... I go blank.

***வெற்றிப் படத்தை எடுப்பது தான் வெற்றி. பரிசுப் படத்தை எடுப்பதுதான் வெற்றி. இப் படி ரெண்டு அபிப்பிராயம் இருக்கு. எது சரி என்கிறீங்க?***

இது ரெண்டுமே தப்பு. ஒரு படம் பரிசு பெற்ற படம் என்பதாலேயே அது சிறந்த படமாகாது. இதுக்கு எதுக்கு பரிசு கொடுத்தாங்கன்னு கூட தோணும். வியாபார வெற்றியும்

வெற்றியாகாது. நல்ல படம் — 'நல்ல' என்றால் பயனுள்ள கருத்து கொண்ட படம் — அது எனக்கு முக்கியம். படைப்பாளி வாயைத் திறக்கிற ஒவ்வொரு சமயமும் அது பயனுள்ள பொன்மொழியாத்

தான் வரணுமா — தேவையில்லே. முடிஞ்சவரைக்கும் முயற்சி பண்ணி, அழுத்தமான ஒரு content இருக் கறா மாதிரி பார்த்துக்கணும். எந்த மீடியமா இருந்தாலும் அந்த மீடியத்தோட ஆளுமையோடு — with total command of the medium சொல்றப்போ அதிலே கணிசமான அளவு கலைநயமும் சேர்ந்ததுன்னா அதை ஒரு நல்ல படைப்பு எனலாம். எப்போவுமே இது கலாநேர்த்தி யான படைப்பா அமையறப்போ, இதுதான் என்னைப் பொறுத்த வரை வெற்றி.

(அடுத்த இதழில் முடியும்)

"நல்ல படம் எடுத்துட்டா மட்டும் போதாது. அதிலே என்ன இருக்குன்னும் சொல்லி, அவங்க கவனத்தைத் திருப்ப - ஈர்க்க வேண்டிய அவசியம் கூட - அவஸ்தையான அவசி யம் இருக்கு!"



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆயிரம் பூக்கள் மலரட்டும்.

அண்மையில் நோர்வே அரசும், அதிகார அமைப்பும் தமிழர்களுக்கு எதிரான திடீர் நடவடிக்கைகளில் இறங்கியதும், அதற்கெதிராக தமிழ் அமைப்புகள் சில நடவடிக்கைகளை மேற்கொண்டதும் பெரும்பாலான தமிழர்கள் அறிந்த விடயமாகும். இலங்கையின் சிலபகுதிகளில் (உ.ம்: கொழும்பு போன்ற தமிழர் பாரம்பரியமற்ற பிரதேசங்களில்) தமிழர்கள் எந்தவித அரசியல் கெடுபிடிகளும் இல்லாமல் வாழமுடியும் என்பதை அடிப்படையாக வைத்து சிலரைத் திருப்பி அனுப்ப முனைந்தது. இலங்கைக்கு அனுப்புவதற்காகச் சிறைகளிலும் பிடித்து வைத்தது. இது நோர்வேயின் தனிப்பட்ட நடவடிக்கை மட்டுமல்ல. ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இதனை மேற்கொள்ளும் எத்தனிப்பில் இருந்தன. குறிப்பாக இந்தியா இதனை மேற்கொள்வது நோர்வேக்குச் சாதகமான அம்சம். சில காலம் முன்னர் நோர்வே இதனை இங்குள்ள மாணவ அகதிகளிலும் உரசிப் பார்க்க முயன்றது.

உலக ரீதியாக நிலவும் பொருளாதார மந்தமும், உற்பத்தித் தளர்வும் இதன் மறைமுகக் காரணிகளாக நாம் அறியலாம். அண்மையில் இதன் அடிப்படையில் பங்குச் சந்தையில் ஏற்பட்ட பங்குகளின் விலைவீழ்வும், வங்கி அமைப்பின் ஸ்திரமின்மையும், பெரிய வங்கிகளின் வரவு செலவில் மிகப் பெரிய பற்றாக்குறையும் இதன் உள்ளார்ந்த தொடர் காரணிகளாக நாம் காட்டலாம். இதன் தொடர் விளைவாக அண்மையில் பணச்சந்தையில் நோர்வேஜியக் குறோணரின் வீழ்ச்சியும், நோர்வேஜியப் பொருளாதார எதிர்காலம் குறித்து ஒரு கேள்வியைத் தருகிறது. இவற்றை நோர்வே தொடர்பான காரணிகளாக எடுப்பின், எமது தரப்பின் பலவீனங்களாக சில காரணிகளை இங்கு குறிப்பிடலாம் என்றெண்ணுகிறேன்.

சில காலங்களுக்கு முன், எமது சமூகத்தை முழுமையாகக் காட்டிக் கொடுக்கும் வகையில் சிலரால் 'வேகே' (V G) பத்திரிகையில் முழுத்தமிழர்களுக்கு அவமானமும், தமிழர்கள் பயங்கரமானவர்கள் எனும் அபிப்பிராயத்தைத் தரக்கூடிய வகைகளில் கட்டுரைகள் கொடுக்கப் பட்டதும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழர்கள் ஆட்கடத்துபவர்கள், பாஸ்போட் அடிப்பவர்கள், மா∴பியாப் பாணியில் காசு பறிப்பவர்கள் எனும் வகையில் வந்த கட்டுரை, நோர்வேஜிய அதிகார வர்க்கத்திற்கு விலை போனவர்களால், தமிழ்ச் சமூகம் முழுவதற்கும் கரி பூசிய நிகழ்ச்சிகளும் இந்த அகதிகள் அனுப்பும் நடவடிக்கைகளுக்குப் பின்புலமாக அமையலாம். இவர்கள் தனிப்பட்ட கோபங்களால் உணர்ச்சி வசப்பட்டு, தமது தனிப்பட்ட நலன்களுக்காக விலைபோனது தமிழர்களுக்கு ஒரு பலவீனமான தன்மையைத் தோற்றுவித்தது. இதனை தொடர்பில்லா, முக்கியமற்ற விடயம் என (தனிப்பட்ட சீதன விடயத்திலும், சில தமிழ்ப் பெண்கள் ஆண்களை Oslocityக்கு வாங்கோ என அழைக்கும் சமூகப் பிரளயங்களை உருவாக்கும் முக்கியமான விடயங்களிலும் மூக்கை நுழைக்கும்) சுவடுகள் புறக்கணித்தது அவர்களின் மனிதாபிமான, ஜனநாயக புத்திஜீவித் தனமான அறிவுசார் நடவடிக்கை எனலாம்.

மேற்கூறிய நோர்வேஜியப் பொருளாதார நெருக்கடிகளையும், தமிழ்ச் சமூக அவலங்களையும் விலாவாரியாக ஆராய்வது எனது நோக்கமல்ல. அகதிகளை நோர்வே திருப்பி அனுப்புவதற்கு எதிராக தமிழமைப்புகள் மேற்கொண்ட ஒற்றுமை நடவடிக்கை தொடர்பாக சில சந்தேகங்களைக் கேள்விகளாக வைப்பதே எனது நோக்கமாகும்.

நான் அறிந்தவரையில் சுவடுகளே ஆரம்ப நடவடிக்கைகளை (அகதிகளைத் திருப்பி அனுப்பக் கூடாது, அவர்களுக்கு கொழும்பிலும் பாதுகாப்பில்லை என்பது தொடர்பாக) மேற்கொண்டது. சமகாலத்திலோ அல்லது சற்றுப் பிந்தியோ தமிழ்ச் சங்கமும்

## நோர்வேஜிய அப்பமும் தமிழ்க் குரங்குகளும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம். அது இக்கட்டுரையின் பிரச்சனையல்ல. யார் முதல் என்பது உண்மையிலேயே பிரச்சனையல்ல. நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் காத்திரமானவை என்பதே உண்மையான பிரச்சனை.

தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடத்தால் கூட்டப்பட்டிருந்த முதல் கூட்டத்தில் நானும் இருந்தேன். அதில் தமிழ்ச் சங்கம், TRRO, TCC போன்ற அமைப்புகளும் அழைக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் முன்வைக்கப் பட்டது. அதற்குத் தமிழ் நோர்வே இணைவுகூடத் தலைவர் 'இது அவசரக் கூட்டம். நாம் அமைக்கும் குழு எல்லா அமைப்புகளையும் அழைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.' என அறிவித்தார்.

ஒற்றுமை நடவடிக்கைகளும் அகதிகளைத் திருப்பி அனுப்பக்கூடாது, கொழும்பிலும் அரசியல் பிரச்சனைகள் உண்டு என ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கையும் சமகாலத்தில் மேற்கொள்ளப் பட்டன.

அதன் அடிப்படையில் சில நாட்களின்பின், தமிழ்ச்சங்கம், TRRO, TCC, தமிழ் நோர்வே இணைவுகூடம், சுவடுகள், ஒஸ்லோ பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் அமைப்பு (OUTSU) என்பன எப்படி ஒன்றுபட்டுச் செயல்படுவது தொடர்பாகக் கூடின.

இக்கூட்டத்தில்தான் தமிழர்கள் எந்த விடயத்திற்கும் ஒன்றுபட முடியாதவர்கள் எனத் திடமாகச் சில அமைப்புகள் அடாவடித்தனம் புரிந்தன. தமிழ்ச்சங்கம், TRRO, TCC போன்றன ஓரணியில் நின்று, சுவடுகள், தமிழ்நாதம் போன்றவை அமைப்பு அல்ல. அவர்கள் ஒற்றுமை அணியில் சேர்க்க முடியாது எனத் தர்க்கரீதியான ஆதாரங்களை அள்ளிக் கொட்டின.

ஒரு ஸ்தாபனம் அல்லது அமைப்பு என்றால் என்ன, அதன் நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பது - சுவடுகள், தமிழ்நாதம் அமைப்பல்ல என வாதம் புரிந்தவர்களுக்குத் தெரியுமோ? என்பது எனது முதலாவது சந்தேகம்.

அமைப்பு என்பது ஒரு பொதுத் தொழிற்பாட்டு நோக்கத்தினையும் (General functional aim) அந்நோக்க அடிப்படையிலான தொழிற்பாட்டினையும், அதனை நிறைவேற்றும் அதிகாரத்தினையும், அவ்வதிகார அடிப்படையிலான பொறுப்பினையும் கொண்டிருக்க வேண்டும். அவ்வமைப்பு தன் பொது நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் சில உபபிரிவுகளைக் கொண்டிருக்கும் (கொண்டிருக்கலாம்). அவ்வமைப்பின் உபபிரிவுகளிடையே பொதுநோக்கத்தை நிறைவேற்றும் வகையில், துணைநோக்கங்கள் வகுக்கப்பட்டு அதன் அடிப்படையில் அமைப்பினது அதிகாரங்கள் பொறுப்புகள் பகிரப்படும். ஒரு உயர்பிரிவும், பல உபபிரிவுகளும் கொண்ட அமைப்பில்

## இலக்கியச் சந்திப்பு

ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகளின் ஆசிரியர்கள், வாசகர்கள் சந்திக்கும் இலக்கியச் சந்திப்பின் 14வது நிகழ்ச்சி டிசம்பர் 26,27ஆம் திகதிகளில் பாரிஸ் நகரில் இடம்பெறுகிறது.

26ஆம் திகதி புகலிடச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் (கலந்துரையாடல்), நாடக அரங்கு - அங்கும் இங்கும் (உரை), ஐரோப்பிய இலக்கியங்களும் நாமும் (கருத்தரங்கம்), புகலிட வாழ்வும் பெண்களும் (கருத்தரங்கம்), ஓவியக் கண்காட்சி, கவியரங்கம், நாட்டுக்கூத்து - ஒரு பார்வை (உரை) போன்ற அம்சங்கள் இடம்பெறும்.

27ஆம் திகதி மனிதனும் மாசுபடும் சூழலும் (கருத்தரங்கம்), நூல் வெளியீடு (புகலிடப் பெண்களின் கவிதைகள்), நூல் அறிமுகம் (சேரனின் எரிந்துகொண்டிருக்கும் நேரம்), தமிழ் மக்களின் கலாசாரச் சிதைவு (உரை), பிரெஞ்சுப் புரட்சியும் சமகால இலக்கியங்களும் (உரை), கவிஞர்கள் பார்வையில் கவிஞர்கள் (கவிதைத் தொகுப்புகள் பற்றிய விமர்சன அரங்கம்), மாஸ்ரிச்ட் (உரைகள்), நாட்டுக்கூத்து (அருச்சுனன் தபசு) என்பன இடம்பெறும்.

- இலக்கியா -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உபபிரிவுகள் உயரமைப்பிற்கு கணக்கழிவு தகைமை (Accountablity) அடிப்படையில் தமது சரியான, தவறான நடவடிக்கைகளுக்கு விளக்கம் சொல்லக் கட்டுப்பட்டவர்கள் ஆவர். தவிர மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும் தமது தொழிற்பாடு, நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகச் சீரமைக்கும் வகையில் தொடர்ச்சியான தகவல் பரிமாற்றம் கொண்டிருக்க வேண்டும். (இது தொடர்பான விரிவான விளக்கம் எனது கட்டுரையின் நோக்கத்தைத் திசைதிருப்பக்கூடும் என்பதால் இத்துடன் நிறுத்துகிறேன்.)

இந்த அடிப்படையில் இங்கு இயங்கும் எதுவுமே அமைப்பு அல்ல என என்னால்



நிருபிக்க முடியும். இங்குள்ள தமிழ்ச்சங்கம், TCC, TRRO போன்றவை தொடர்ச்சியாகத் தமது நடவடிக்கைகளைச் சீரமைக்கும் வகையில் (தவறுகளைத் திருத்தல், சரியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளல்) இருவழித் தகவல் தொடர்பைக் கொண்ட அமைப்பாகவோ, சரியான அதிகாரப் பகிர்வு கொண்ட அமைப்பாகவோ பார்க்க முடியவில்லை.

TCC பெரும்பாலும் இலங்கை தலைமையில் இருந்துவரும் தகவல்களை Telefonஇலும், தமது பத்திரிகைகளிலும் வெளியிடுவதோடு, பெரும்பாலும் இராணுவப் போராட்டத்திற்குத் தேவையான நிதி சேகரிப்பிலுமே கவனம் செலுத்துகிறது. தலைமைவிடும் தவறுகளைக் காத்திரமான முறையில் தலைமைக்குச் சுட்டிக்காட்டுவதில் தயங்குவதோடு, அதற்கு மழுப்பலான விளக்கங்களை இங்கு காவித் திரிபவர்களாகவே காணப்படுகின்றனர். விடுதலைப்புலிகள் தமது தவறுகளைத் திருத்தி மக்களின் போராட்ட அணியாக மாறவேண்டும் என்பதில் இவர்களின் அக்கறை மிகக்குறைவு. வெறும் இராணுவத் தாக்குதல்களினால் வரும் அற்ப சந்தோஷங்களுடன் இவர்களின் சமூகத் தொண்டு முடிந்துவிடுவது, அண்மையில் தமிழ்ச் சமூகத்திற்கு உலக ரீதியில் 'பயங்கரவாதிகள்' எனும் பெயரைப் பெற்றுத்தர உதவியிருக்கிறது. ஒரு அமைப்பில் தொடர்ச்சியாகப் பெறும் தகவல்களின் அடிப்படையில் தொடர்ச்சியான விவாதங்களும், கலந்துரையாடல்களும் இடம்பெற வேண்டும். தவறுகளைத் தர்க்க ரீதியான தகவல்கள் அடிப்படையில் சீரமைத்தலும் முக்கியம். இந்த வகையில் இவையெல்லாம் அமைப்பா எனும் கேள்வி எம்முன் எழுகிறது.

கடந்த மேதின நிகழ்வில் 'சுவடுகள்' ஆசிரியர் தாக்கப்பட்ட போது, நாம் கையில் Batchஐ வைத்திருக்கும் போது யார்யாரோ அள்ளிச் சென்றார்கள். அப்படி அள்ளிச் சென்ற 'யாரோ' சுவடுகள் ஆசிரியரை அடித்ததற்கு நாம் பொறுப்பேற்க முடியுமா என்று கேட்பவர்கள் எப்படி அமைப்பாக அமையமுடியும்? இவர்களே அமைப்பா என்பது கேள்விக்கிடமான முறையில் இருக்கும்போது 'சுவடுகள் அமைப்பா?' என இவர்கள் கேள்வி எழுப்புவது சரியான நகைச்சுவை.

தமிழ் நோர்வே இணைவுகூடம், தனிப்பட்டவர்களால் நீண்டகாலமாக வளர்க்கப்பட்ட தொடர்புகளை அறிமுகங்களைப் பயன்படுத்தி, மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு நடவடிக்கை எடுக்க முற்படுகிறது. 'சுவடுகள்' போன்ற சமூகப் பிரக்ஞை கொண்ட பத்திரிகைகளின் உழைப்பையும், தொடர்புகளையும், தகவல்களையும் (அவர்களே முன்வந்து உதவும்போது) புறக்கணிப்பது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை.

சுவடுகளில் வெளியாகும் படைப்புகள் சுவடுகளின் கருத்தை மட்டுமே கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மாற்றுக் கருத்துகளையும், விவாதத்திற்காகவும் கருத்துப் பரிமாற்றத்திற்காகவும் பிரசுரிக்கிறோம். இவற்றில் உள்ள கருத்துகள் தொடர்பாக வாசகர்களது கருத்துகள் வரவேற்கப் படுகின்றன.

– சுவடுகள் –

www.tamilarangam.net



சுவடுகள் அமைப்பு இல்லாமலே இருக்கட்டும். அவர்கள் கலந்துகொள்வதனால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகளைத் தர்க்க ரீதியில் முன்வைத்து அவர்களை மறுக்க வேண்டும். அது ஏன் இவர்களால் முடியவில்லை. இப்பிரச்சனைக்காகக் கூடிய அமைப்புகள் எல்லாம் தமது தத்துவ ரீதியான முரண்பாடுகளை, இப்பொது விடயம் குறித்து, விட்டுக் கொடுத்துத்தான் ஒன்றாகக் கூட முன்வந்தன. ஒன்றாகக் கூடிய அமைப்புகள் நானா நீயா பெரியவன் எனக் குத்துப்பட்டு அதே இடத்தில் பிரிந்தன. அது தமிழ்ச் சமுகத்தின் வேதனையான விஷேட அம்சம்.

பொது விடயம் கருதி விட்டுக் கொடுப்புகளை மேற்கொண்டு, தனிப்பட்டவர்களானாலும், சுவடுகள் போன்ற பத்திரிகைகளாயினும் அவற்றை ஒன்றிணைத்து, பொதுப் பிரச்சனையை வெற்றிகரமாகத் தீர்ப்பதிலேயே ஒரு அமைப்பு சமுக மதிப்பைப் பெறமுடியும். அதைவிடுத்து, தமது வக்கிர உணர்வுகளை அடாவடித் தனமாக அம்பலப்படுத்துவதில் சமுக அந்தஸ்தினைப் பெற்றுவிட முடியாது, காரியத்தினையும் வெற்றிகரமாகச் சாதிக்க முடியாது. எப்படி ஒற்றுமையாக இருப்பது என்று சண்டை பிடிப்பதனால் பாதிக்கப்படுவது திருப்பி அனுப்பப்பட இருப்பவர்களே. ஒற்றுமையாக இருப்பது பற்றி நீங்கள் போடும் சண்டையில் பாதிக்கப் பட்டோரின் மனவேதனையை ஏன் மறந்து விட்டீர்கள்? நீண்டகாலப் பார்வையில் உங்கள் இழுபறியால் வெற்றியடைவது நோர்வே அதிகார வர்க்கமாகத் தானிருக்கும். தமிழ்க் கதையில் அப்பத்தைக் குரங்காவது ருசித்தது. ஆனால் நோர்வேஜிய அப்பம்?! உங்களுக்கல்ல. நெடுநோக்கில் உங்களுக்கும் நாமம்தான்.●

(TRRO: தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், TCC: தமிழர் ஒருங்கிணைப்புக் குழு)

## சிசுவின் மன்றாட்டம்

தாயே -
என்னை உந்தன்
நெருப்புத் தேசத்தில்
இறக்கி விடாதே!

பாவங்கள் பார்க்காத
என் விழிகளை
இங்கிறக்கி
பாவியாக்கிக் கொள்ளாதே!

உனது -
அரச அகால மரணப்
பட்டியலில்
என்னையும் அடக்கிவிடாதே!

ஆறுதலாக
மூச்சு விட்டுக் கொள்ளும்
என் மூக்குத் துவாரங்களை
தொடர்ந்தும் ஆறுதலாக
மூச்சுவிடச் சொல் தாயே!

உன் -
கருவறைத் தொட்டிலை
நான் தொல்லை செய்தால்
நீ மன்னித்துக் கொள்
ஆனால் -
மன்னிப்பே தெரியாத
உனது -
மக்களிடம் என்னை
சமர்ப்பித்துக் கொள்ளாதே!

தாயே!
என்னை உந்தன்
நெருப்புத் தேசத்தில்
இறக்கிவிடாதே!

முகமட் அபார்

www.tamilarangam.net



...பிக்கை – நாணயம் – உத்தரவாதம் – நியாயமான விலை
மற்றும் தரமான பொருட்களுக்கு நாடவேண்டிய இடம்
CITY TRADRES

நோர்வே அரசால் உறுதிப்படுத்தப்பட்ட
22 கரட் தங்கநகைகள்
மணிக்கூடுகள்
பாதணிகள்
ஜவுளிகள்
மின்சார உபகரணங்கள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற
CITY TRADERS

ஒஸ்லோ, குறுன்லாண்ட்
தேடான் நிலையத்திலுள்
CITY TRADERS

www.tamilarangam.net

## சிவரமணி கவிதைகள்
## சித்ரலேகா விமர்சனம்
## சிவசேகரம் குறிப்பு

## சித்ரலேகா விளக்
## சிவசேகரத்திடமிருந்து சில கேள்வி

ஆசிரியர்,
சுவடுகள்.

அன்புடையீர்,
சுவடுகள் 34இல் நானெழுதிய கட்டுரைக்குப் பதிலாக சுவடுகள் 39இல் சித்திரலேகா எழுதிய விளக்கங் கண்டேன். அவரது முதற் கட்டுரையை எவரும் விளங்கிக் கொள்ள இயலாத அளவுக்கு அது சிக்கலான விஷயமுமில்லைக், கனமான ஆக்கமுமில்லை. சிவரமணி பற்றி நான் விளங்கிக் கொண்டேனா என்பதைவிடச் சிவரமணியின் கவிதையை அதுபற்றி எழுத முற்பட்ட சித்திரலேகா விளங்கிக் கொண்டாரா என்பதுதான் பிரச்சனை.

சிவரமணியின் கவிதை வரிகள் சிலவற்றை ஆதாரங்காட்டி அவர் முன்வைத்த விளக்கங்கள் செல்லாதன என்பது என் வாதம். அவரது கருத்துகட்குப் போதிய ஆதாரம் அவர் முன்வைத்த தகவல்களில் இல்லை. அவரது வாதங்கள் செல்லாது என்பதற்கு நான் முன்வைத்த கருத்துக்களை அவர் நிராகரிக்கப் பயன்படுத்தும் கருவிகள்: "சி- விளங்கிக் கொள்ளவில்லை"; "சி- ஏழு கவிதைகளைத்தான் படித்ததாய்ச் சொல்கிறார்" என்பன. என்னைவிட அதிகமாய்ச் சிவரமணியின் கவிதைகளை வாசித்தவரால் ஏன் தன் கருத்தை ஆதரிக்கவல்ல வலிமையான வாதங்களை முன்வைக்க முடியவில்லை? (மரணவிசாரணையும் இலக்கிய விமர்சனமும் வேறுபட்ட விஷயங்கள்தான்).

"அரங்கின்றி வட்டாட" விரும்பாத சித்திரலேகா சிவரமணியின் கவிதைகள் பற்றி வாசகர்கட்கு முழுமையாகத் தெரியாத காரணத்தைக் காட்டுகிறார். தான் எழுதிய கட்டுரையிற் சிவரமணி பற்றிய விளக்கமான பார்வையை முன்வைக்கத் தனக்கிருந்த வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறிவிட்டார் என்று சொல்கிறாரா அல்லது ஆடத் தெரியாமல் மேடையைக் குறை சொல்கிறாரா தெரியவில்லை. சிவரமணியின் கவிதைகள் அனைத்தும் பரவலாகக் கிடைக்கும்வரை சிவரமணி பற்றிய விவாதத்தைக் கிடப்பிற் போடலாம் என்கிறவர் மட்டும் சிவரமணி பற்றிய தன் வியாக்கியானங்களைத் தடையின்றி எழுதலாமோ தெரியவில்லை.

நிற்க-

'மரணத்துள் வாழ்வோம்' தொகுதியில் மகாகவியின் கவிதைகள் சேர்க்கப் பட்டிருந்ததாக அதே இதழில் அவரது கட்டுரையில் எழுதியுள்ளார். எனக்குக் கிடைத்த 'மரணத்துள் வாழ்வோம்' தொகுதியில் மகாகவியின் கவிதைகள் விடுபட்டுப் போய்விட்டன போற் தெரிகிறது. சித்திரலேகா கொடுத்து வைத்தவர்.

அன்புடன்,
சிவசேகரம்
28.11.92



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்